2


# தேசிய வெளியீடு, செலவினம் மற்றும் வருமானம்

## 2.1 பொதுநோக்கு

*இலங்கைப் பொருளாதாரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சூழல்களின் சவால்களிலிருந்து தோன்றிய தாக்கங்களுக்கு மத்தியிலும் உண்மை நியதிகளில் 2017இன் 3.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 3.2 சதவீதம் கொண்ட மிதமான வேகத்தில் வளர்ச்சியடைந்தது. முக்கிய பயிர்ச்செய்கைப் பிரதேசங்களில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகள் 2018ஆம் ஆண்டு முழுவதும் வேளாண்மை நடவடிக்கைகளின் வலுவான மீட்சியை இயலுமைப்படுத்தியமையானது இவ்வாண்டுப்பகுதியில் அபரிமிதமான நெல் அறுவடையினைத் தோற்றுவித்தது. அதேவேளை, 2018இல் பொருளாதாரத்திற்குப் பெருமளவு பங்களிப்பினை வழங்கிய பணிகள் துறைக்கு நிதியியல் பணிகள் மற்றும் மொத்த மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளின் வளர்ச்சி வழிவகுத்ததுடன் வேளாண்மை நடவடிக்கைகளில் காணப்பட்ட மீளெழுச்சியின் கசிந்த தாக்கங்களும் உதவியாக அமைந்தன. எனினும், கைத்தொழில் நடவடிக்கைகள் மெதுவடைந்து பொருளாதார வளர்ச்சியை தளர்வடையச் செய்தமைக்கு, கட்டுமான மற்றும் சுரங்கமகழ்தல் நடவடிக்கைகளில் காணப்பட்ட பின்னடைவும் தயாரிப்பு நடவடிக்கைகளில் காணப்பட்ட மிதமான வளர்ச்சியும் காரணமாக அமைந்தன. மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட வியாபார அளவீடுகள், தாமதமடைந்த அமைப்பியல் சீர்திருத்தங்களிலான நடைமுறைப்படுத்தல்கள் மற்றும் ஆண்டு முழுவதும் நிலவிய நிச்சயமற்ற கொள்கைகள் என்பன ஆண்டின் இறுதிப்பகுதியில் காணப்பட்ட உயர்ந்தளவு அரசியல் பதட்ட நிலைமைகளுடன் சேர்ந்து, மிகத் தேவையான வியாபார நம்பிக்கையினையும் முதலீட்டாளர் மனோபாவத்தினையும் மோசமாகப் பாதித்திருப்பதனை எடுத்துக்காட்டுகின்றது. இறைத் திரட்சி வழிமுறைகள் அரச செலவினத்தினைச் சிக்கனப்படுத்தும் விதத்தில் இலக்கிடப்பட்டமையினால் அரச முதலீடுகளும் வீழ்ச்சியடைந்தன. முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாய் கடுமையாக தேய்வடைந்தமைக்கிடையிலும் தேறிய வெளிநாட்டுக் கேள்வி தொடர்ந்தும் பலயீனமாகக் காணப்பட்டது. மேலும், தனியார் சேமிப்புக்களில் காணப்பட்ட மிதமான தன்மை அரசின் தொடர்ச்சியாக அதிகரித்த குறைச் சேமிப்புக்கள் என்பனவற்றின் காரணமாக 2018இல் உள்நாட்டுச் சேமிப்புக்கள் குறைவடைந்தன. மேலும், உலகின் எஞ்சிய பகுதிகளிலிருந்தான தேறிய ஆரம்ப வருமானம் இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. எனினும், உலகின் எஞ்சிய பகுதிகளிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்களில் ஏற்பட்ட வளர்ச்சி ரூபா நியதிகளில் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட மேம்பாட்டின் காரணமாக அதிகரித்தது. இவ்வபிவிருத்திகளின் இணைந்த தாக்கமொன்றாக முதலீடுகளுடன் ஒப்பிடுகையில் தேசிய சேமிப்புக்கள் மிதமாக வளர்ச்சி அடைந்தது. இதன்படி, பொருளாதாரத்தின் மூலவள இடைவெளி ஆண்டு காலப்பகுதியில் விரிவடைந்தது.*

2

வரைபடம் 2.1 தேசிய வெளியீடு, செலவினம் மற்றும் வருமானம் நிழற்படம் - 2018




மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்


## 2.2 மொத்த உள்நாட்டு உற்பத்தி, தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் மொத்தத் தேசிய வருமானம்

**நடைமுறைச் சந்தை மற்றும் நிலையான சந்தை (இதன் பின்னர் முறையே நடைமுறை விலை மற்றும் நிலையான விலை எனக் குறித்துரைக்கப்படும்) விலைகளில் மொ.உ.உற்பத்தி 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் மிதமான வளர்ச்சியொன்றைப் பதிவு செய்தது.** 2018இல் நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தி ரூ.14,449.9 பில்லியனாக (ஐ.அ.டொலர் 88.9 பில்லியன்) மதிப்பிடப்பட்ட வேளையில் 2017இல் இது ரூ.13,418.3 பில்லியனாக (ஐ.அ.டொலர் 88.8 பில்லியன்) காணப்பட்டது. இதன்படி, 2018இல் நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தி 2017இல் பதிவுசெய்யப்பட்ட 11.9 சதவீதம் கொண்ட உயர்ந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இது, 2017இன் 8.2 சதவீதத்திலிருந்து 2018இல் 4.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த மொ.உ.உற்பத்தி உள்ளடக்கச் சுருக்கியின் தாழ்ந்த சதவீத மாற்றத்தினதும் 2017இன் ரூ.9,344.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.9,644.7 பில்லியனாக மதிப்பிடப்பட்ட நிலையான விலைகளில் மொ.உ.உ உற்பத்தியில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சியினதும் இணைந்த விளைவாகும். இதற்கமைய, உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி அதன் மிதமான போக்கினைக்காட்டி 2017இல் பதிவுசெய்யப்பட்ட 3.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 3.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

**தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2017இன் ரூ.625,736 உடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.666,817 ஆக மதிப்பிடப்பட்டு 2017இன் 10.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 6.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** ரூபா நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தியின் மெதுவான வளர்ச்சி, நடுவாண்டுக் குடித்தொகையின் வளர்ச்சி வீதம் உறுதியாக இருந்தமையின் காரணமாக நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தி மெதுவடைந்ததுடன் முக்கியமாக இணைந்து காணப்பட்டது. மேலும், 2017இல் 5.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்த தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2017இன் ஐ.அ.டொலர் 4,104 உடன் ஒப்பிடுகையில் 2018இல் ஐ.அ.டொலர் 4,102 ஆகப் பெரும்பாலும் ஒரே மாதிரியாகக் காணப்பட்டு. இச்செயலாற்றத்திற்கு உள்நாட்டு நாணயம் குறிப்பாக, ஆண்டின் இறுதிப்பகுதியில் கடுமையான நலிவடைந்தமை நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியின் மிதமான வளர்ச்சியுடன் சேர்ந்து கொண்டமையே முக்கிய காரணமாகும்.

**வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானத்திற்கு மொ.உ.உற்பத்தியை சீராக்கம் செய்வதன் மூலம் பெறப்பட்ட மொத்தத் தேசிய வருமானம், நடைமுறை விலைகளில் ரூ.14,058 பில்லியனுக்கு அதிகரித்து 2017இன் 11.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 7.6 சதவீத வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்தது.** மொத்தத் தேசிய வருமானத்தின் இம்மெதுவான வளர்ச்சி நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சியினதும் 2018இல் வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் 2017இன் 10.4 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் அவதானிக்கப்பட்ட 11.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாகும்.

வரைபடம் 2.2
மொ.உ.உற்பத்தி ஆண்டு வளர்ச்சி வீதம் (அ)




(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

## 2.3 நிறுவன ரீதியான துறைகளிலிருந்தான பங்களிப்பு

**உற்பத்தி அணுகுமுறைகளின் கீழ், நடைமுறை விலைகளில் மொத்தப் பெறுமதிகூட்டப்பட்ட மதிப்பீடுகளின்படி வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் பொருளாதாரத்திற்கு மிகப் பெரும் பங்களிப்பாளராக விளங்கின.** வீட்டலகுகள் மற்றும் இலாபமீட்டாத வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் துறை 2017இன் 10.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் நடைமுறை விலைகளில் 8.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 2018இன் மொத்த பெறுமதிகூட்டப்பட்ட பொருளாதாரத்தின் 49.8 சதவீதத்திற்கு வகைகூறியது. அதேவேளை, இலாபமீட்டாத பொருளாதாரத்தின் இரண்டாவது மிகப்பெரும் துறையாக விளங்கும் நிதியல்லா கூட்டுத்தாபனங்கள் துறை மொத்தப் பெறுமதிகூட்டலின் 34.7 சதவீதத்திற்குப் பங்களித்ததுடன் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 10.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 7.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. பொது அரச துறையில் பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதிகூட்டலில் 10.3 சதவீதத்திற்கு வகைகூறும் பொது அரசாங்கம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 6.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 17.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில், மொத்தப்

2

2

அட்டவணை 2.1

### நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)(ஆ)

| பொருளாதார நடவடிக்கை | வளர்ச்சி (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | | மொ.உ.உ இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 (இ) | 2018 | 2017 (இ) | 2018 | 2017 (இ) | 2018 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல்** | - 0.4 | 4.8 | - 0.7 | 10.2 | 6.9 | 7.0 |
| தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக) | - 12.6 | 2.8 | - 0.5 | 0.1 | 0.1 | 0.1 |
| அரிசியின் வளர்ச்சி | - 7.1 | 33.9 | - 1.2 | 5.5 | 0.5 | 0.7 |
| காய்கறிகளின் வளர்ச்சி | - 5.3 | 2.6 | - 1.0 | 0.5 | 0.6 | 0.6 |
| கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய நீண்ட காலமல்லாத பயிர்களின் வளர்ச்சி | - 12.9 | - 11.0 | - 0.1 | - 0.1 | 0.0 | 0.0 |
| பழவகைகளின் வளர்ச்சி | 7.4 | 11.2 | 1.1 | 1.9 | 0.5 | 0.6 |
| எண்ணெய்ப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி (தேங்காய், செவ்விளநீர், கமுகு) | - 19.7 | 6.3 | - 4.3 | 1.1 | 0.6 | 0.6 |
| தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்) | 4.5 | - 0.8 | 0.9 | - 0.2 | 0.7 | 0.7 |
| ஏனைய குடிப்பானப் பயிர்களின் வளர்ச்சி (கோப்பி, கொக்கோ போன்றவை) | - 6.4 | 25.6 | - 0.0 | 0.1 | 0.0 | 0.0 |
| வாசனைத்திரவியங்கள், நறுமணப்பயிர்கள், மருந்து மற்றும் மருந்தாக்க பயிர்களின் வளர்ச்சி | 0.4 | 5.3 | 0.1 | 1.1 | 0.7 | 0.7 |
| இறப்பரின் வளர்ச்சி | 4.9 | - 0.6 | 0.4 | - 0.1 | 0.3 | 0.2 |
| ஏனைய நீண்டகாலப் பயிர்களின் வளர்ச்சி | 1.4 | - 4.9 | 0.1 | - 0.3 | 0.2 | 0.2 |
| விலங்கு உற்பத்தி | 5.6 | 4.7 | 1.0 | 0.9 | 0.6 | 0.6 |
| தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மைக்கான துணை நடவடிக்கைகள் | - 7.3 | 1.7 | - 0.2 | 0.1 | 0.1 | 0.1 |
| காடாக்கலும் குத்திகளும் | 19.2 | - 0.9 | 3.3 | - 0.2 | 0.7 | 0.6 |
| மீன்பிடித்தல் | - 0.5 | - 0.8 | - 0.2 | - 0.3 | 1.3 | 1.2 |
| **கைத்தொழில்** | **4.1** | **0.9** | **32.0** | **7.8** | **26.7** | **26.1** |
| சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் | 9.1 | - 5.1 | 6.4 | - 4.0 | 2.5 | 2.3 |
| தயாரிப்பு | 3.3 | 3.0 | 14.9 | 14.4 | 15.5 | 15.5 |
| மின்சாரம், எரி வாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 2.6 | 4.1 | 0.8 | 1.3 | 1.0 | 1.0 |
| நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் | 4.6 | 4.0 | 0.2 | 0.2 | 0.1 | 0.1 |
| சாக்கடை, கழிவுப்பொருள் சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் நடவடிக்கைகள் | 7.9 | 7.0 | 0.7 | 0.6 | 0.3 | 0.3 |
| கட்டடவாக்கம் | 4.3 | - 2.1 | 9.1 | - 4.8 | 7.2 | 6.8 |
| **பணிகள்** | **3.6** | **4.7** | **59.4** | **83.3** | **56.8** | **57.7** |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியம் மற்றும் தங்குமிடம் மற்றும் உணவுப்பணி நடவடிக்கைகள் | 3.6 | 4.0 | 24.1 | 28.7 | 23.1 | 23.3 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 9.5 | 8.9 | 1.6 | 1.7 | 0.6 | 0.7 |
| நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துரிமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்துக்கள் நடவடிக்கைகள் | 6.7 | 8.2 | 25.4 | 33.8 | 13.3 | 14.0 |
| தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய ஆளணி பணி நடவடிக்கைகள் | 3.3 | 4.7 | 11.2 | 16.8 | 11.5 | 11.6 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | - 1.2 | 0.9 | - 3.0 | 2.3 | 8.3 | 8.1 |
| **அடிப்படை விலையில் கூட்டப்பட்ட மொத்த பெறுமதிகளுக்கு சமனானவை** | **3.4** | **3.6** | **90.6** | **101.2** | **90.4** | **90.8** |
| உற்பத்திகள் மீதான மானியங்கள் கழித்த வரி | 3.3 | - 0.4 | 9.4 | - 1.2 | 9.6 | 9.2 |
| **சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமனானவை** | 3.4 | 3.2 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | -3.6 | -6.6 | | | | |
| **சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானம்** | **3.4** | **3.1** | | | | |


(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலம் :* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

பெறுமதிகூட்டலில் 5.2 சதவீதத்திற்கு வகைகூறும் நிதியியல் கூட்டுத்தாபனங்கள் துறை 2017இல் பதிவுசெய்யப்பட்ட 28.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 3.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

**2018ஆம் ஆண்டுப்பகுதியில் வேளாண்மை மற்றும் பணிகள் நடவடிக்கைகளின் மொத்தப் பெறுமதிகூட்டலிற்கான முக்கிய பங்களிப்பு வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்களிலிருந்து கிடைத்த வேளையில் கைத்தொழில் நடவடிக்கைகளின் மொத்தப் பெறுமதிகூட்டல், நிதியல்லா கூட்டுத்தாபனங்கள் துறையின் பங்களிப்பிலிருந்து முக்கியமாகக் கிடைத்தது. இதன்படி, 2018இல் வேளாண்மை நடவடிக்கைகளின் மொத்தப் பெறுமதிகூட்டலில் 81.7 சதவீதம் வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்களிலிருந்து உருவாக்கப்பட்டு முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 16.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** அதேவேளை, 2018இல் பணிகள் நடவடிக்கைகளின் மொத்தப் பெறுமதிகூட்டலில் 52.1 சதவீதம் வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்குப் பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்களினால் உருவாக்கப்பட்டு 2017இல் பதிவுசெய்யப்பட்ட 8.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. அதேவேளை, நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் துறை கைத்தொழில் நடவடிக்கைகளின் மொத்தப் பெறுமதிகூட்டலில் 62.6 சதவீதத்திற்கு வகைகூறி, 2017இல் அவதானிக்கப்பட்ட 10.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 6.7 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்தது.

வரைபடம் 2.3
நிறுவனத்துறையினரின் மொத்த பெறுமதி சேர்ப்பின் பங்குச் சதவீதம் (2018 இல் நடைமுறைச்சந்தை விலைகளில்) (அ)




(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## 2.4 வெளியீடு, கொள்கைகள், நிறுவன ரீதியான உதவி மற்றும் பிரச்சனைகள்

### வேளாண்மை

**கடந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட எதிர்மறையான செயலாற்றத்திலிருந்து மீட்சியடைந்த பெறுமதிகூட்டப்பட்ட வேளாண்மை நடவடிக்கைகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 0.4 சதவீதம் கொண்ட சுருக்கத்திற்கு மாறாக 2018இல் 4.8 சதவீதத்தில் வளர்ச்சியடைந்தது.** ஆண்டு முழுவதும் முக்கிய பயிர்ச்செய்கைப் பிரதேசங்களில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகள் இவ்வாண்டுப்பகுதியில் அரிசி, பழவர்க்கங்கள், எண்ணெய்ப்பசைத்தன்மை கொண்ட பழவர்க்கங்கள் (தேங்காய், செவ்விளநீர், எண்ணெய்த் தாவரம்) மற்றும் வாசனைத்திரவியங்களில் ஆகியவற்றின் உற்பத்தியில் காணப்பட்ட கணிசமான அதிகரிப்புக்களினால் காட்டப்பட்டவாறு, வேளாண்மை நடவடிக்கைகளின் அதிகளவு மீட்சிக்குத் தூண்டுதலாக விளங்கின. மேலும், விலங்கு உற்பத்தி, காய்கறிகளின் உற்பத்தி, ஏனைய குடிபானப் பயிர்களின் உற்பத்தி (கோப்பி, கொக்கோ போன்றவை), தானிய வகைகளின் உற்பத்தி, தாவரங்களின் இனப்பெருக்கம் மற்றும் வேளாண்மை நடவடிக்கைகளுக்கான ஆதரவு என்பன வேளாண்மையின் வளர்ச்சிக்குச் சாதகமாகப் பங்களித்தன. எனினும், மீன்பிடி நடவடிக்கைகள், ஏனைய நீண்டகாலப் பயிர் வளர்ப்பு, தேயிலைப் பயிர்ச்செய்கை, காடாக்கல் மற்றும் மரக்குற்றிகளாக்குதல், கரும்புப் பயிர்ச்செய்கை, புகையிலை மற்றும் நீண்ட காலமல்லாத பயிர்கள் மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கை என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் சுருக்கமடைந்தன. சாதகமான தளத்தாக்கமும் வேளாண்மை நடவடிக்கைகளில் இவ்வுயர்ந்த வளர்ச்சிக்குப் பங்களித்தன.

### வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்

**வேளாண்மை மற்றும் மீன்பிடித் துறைகளின் வெளியீட்டினை அளவிடுகின்ற வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் 2017இன் 10.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 10.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** இச்சுட்டெண்ணிற்குள்ளே நெல், தெங்கு மற்றும் ஏனைய பயிர்களின் (பழவர்க்கங்கள், காய்கறிகள் மற்றும் ஏனைய களப்பயிர்கள்) துணைச் சுட்டெண்கள் அதிகரித்த

அட்டவணை 2.2
நடைமுறைச் சந்தை விலைகளில் நிறுவனத்துறையினரின் மொத்த சேர்ப்பு (அ)(ஆ)

| விடயம் | மொத்த பெறுமதி சேர்ப்பின் சதவீதமாக (%) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017 (இ) | | | | 2018 | | | |
| | நிதியல்லா கூட்டுத்தாபனம் | நிதியியல் கூட்டுத் தாபனங்கள் | பொது அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | நிதியல்லா கூட்டுத்தாபனம் | நிதியியல் கூட்டுத் தாபனங்கள் | பொது அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் |
| வேளாண்மை | 19.5 | - | - | 80.5 | 18.3 | - | - | 81.7 |
| கைத்தொழில் | 62.4 | - | 1.5 | 36.0 | 62.6 | - | 1.7 | 35.8 |
| பணிகள் | 23.7 | 8.8 | 14.8 | 52.7 | 23.7 | 8.3 | 15.8 | 52.1 |
| அடிப்படை விலையில் மொத்த பெறுமதி சேர்ப்பு | 35.0 | 5.4 | 9.5 | 50.1 | 34.7 | 5.2 | 10.3 | 49.8 |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலம்* : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2

அட்டவணை 2.3
வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (2007-2010 = 100)

| விடயம் | 2017 (அ) | 2018 (ஆ) | வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2016/17 (அ) | 2017/18 (ஆ) |
| வேளாண்மை மற்றும் மீன்பிடி | 113.6 | 125.8 | -10.7 | 10.7 |
| 1 வேளாண்மை | 104.3 | 119.2 | -13.6 | 14.3 |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 96.5 | 112.5 | -16.8 | 16.6 |
| நெல் | 63.7 | 105.1 | -46.1 | 65.0 |
| தேயிலை | 98.5 | 97.5 | 4.9 | -1.0 |
| இறப்பர் | 61.9 | 61.5 | 4.9 | -0.6 |
| தெங்கு | 86.5 | 92.6 | -18.6 | 7.1 |
| ஏனைய பயிர்கள் | 135.7 | 152.8 | -9.7 | 12.6 |
| மரக்கறிகள் | 123.4 | 145.3 | -12.6 | 17.7 |
| பழங்கள் | 164.0 | 183.9 | 12.5 | 12.1 |
| ஏனைய களப்பயிர்கள் | 117.9 | 134.2 | -14.9 | 13.8 |
| 1.2 கால்நடை வளர்ப்பு | 166.6 | 172.6 | 5.3 | 3.6 |
| 2 மீன்பிடி | 159.2 | 158.0 | 0.1 | -0.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வேளையில் தேயிலை, இறப்பர் துணைச் சுட்டெண்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, விலங்கு வளர்ப்புத் துறையின் நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்த வேளையில் மீன்பிடி நடவடிக்கைகளில் சுருக்கமொன்று பதிவுசெய்யப்பட்டது.

### நெல்

**2018இல் சாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக நாட்டின் மொத்த நெல் உற்பத்தி குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. 2017இல் மோசமான வானிலை நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட நெல் உற்பத்தி 64.9 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் மீட்சியடைந்து 2018ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் 3.9 மில்லியன் மெ.தொன்கள் கொண்ட உற்பத்தியை விளைவித்தது.** இவ்வாண்டுப் பகுதியில் அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு 884,555 எக்டேயர்களுக்கு 59.5 சதவீதத்தினால் அதிகரித்து எக்டேயரொன்றிற்கான சராசரி விளைச்சலை 4,443 கி.கிராம் கொண்ட அதிகரிப்பினைத் தோற்றுவித்தது. முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 2017/18 பெரும்போக காலத்தில் நெல் உற்பத்தி 2.4 மில்லியன் மெ.தொன்களுக்கு 62.6 சதவீதத்தினால் அதிகரித்தது. இப்பருவகாலத்தில் அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு 557,221 எக்டேயர்களாக விளங்கியது. இது, 2016/17 பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 62.6 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். இப்பருவகாலத்தில் சாதகமான வானிலை நிலைமைகளுடன் சேர்ந்து பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு நெல்லின் சராசரி விளைச்சலை முன்னைய பெரும்போகத்தில் பதிவுசெய்யப்பட்ட எக்டேயரொன்றிற்கான 4,301 கி.கிராம்களுடன் ஒப்பிடுகையில் எக்டேயரோன்றிக்கு 4,302 கி.கிராம்களுக்கு சிறிதளவால் அதிகரிப்பதற்கு உதவியது. அதேவேளை, 2018 சிறுபோக காலத்தில் நெல் உற்பத்தி 1.5 மில்லியன் மெ.தொன்களுக்கு 68.6 சதவீதத்தினால் அதிகரித்தது. 2018 சிறுபோக பருவகாலத்தில் அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு 327,334 எக்டேயர்களாக விளங்கியது. இது, முன்னைய பெரும்போக காலத்துடன் ஒப்பிடுகையில் 54.5 சதவீதம் கொண்ட விரிவாக்கமாகக் காணப்பட்ட வேளையில் நெல்லின் சராசரி விளைச்சல் 2017இன் சிறுபோக காலத்தின் எக்டேயரொன்றிற்கான சராசரி விளைச்சல் 4,291 கி.கிறாம்களிலிருந்து 2018இன் சிறுபோக காலத்தில் எக்டேயரொன்றிக்கு 4,683 கி.கிறாம்களுக்கு அதிகரித்தது. வரட்சியின் தாக்கம், பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்கம் என்பன காரணமாக பயிர்களில் சேதமடைந்த போதும் சிறுபோகம் மற்றும் பெரும்போக பருவகாலங்கள் இரண்டிலும் நெல் உற்பத்தி குறிப்பிடத்தக்களவு மேம்பட்டமைக்கு இக்காலப்பகுதியில் தூண்டுதலளித்த வானிலை நிலைமைகளும் போதுமானளவு நீர் கிடைத்தமையும் காரணங்களாக அமைந்தன.

**2018இல் உள்நாட்டு நெற் சந்தையில் போதுமான இருப்பு கிடைக்கத்தக்கதாக இருந்தமையின் காரணமாக**


அட்டவணை 2.4
நெல் துறை புள்ளிவிபரங்கள்

| விடயம் | அலகு | 2017 (அ) | | | 2018 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 543 | 249 | 792 | 667 | 374 | 1,041 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 383 | 236 | 619 | 620 | 363 | 983 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 343 | 212 | 555 | 557 | 327 | 885 |
| உற்பத்தி | '000 மெற்றிக்தொன் | 1,474 | 909 | 2,383 | 2,397 | 1,533 | 3,930 |
| | '000 புசல்கள் | 70,634 | 43,580 | 114,214 | 114,874 | 73,466 | 188,340 |
| சராசரி விளைச்சல் (இ) | கி.கி./ எக்டேயர்கள் | 4,301 | 4,291 | 4,297 | 4,302 | 4,683 | 4,443 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ.மில் | 3,391 | 2,170 | 5,562 | 3,986 | 2,893 | 6,878 |
| அரிசி இறக்குமதிகள் (ஈ) | '000 மெற்றிக்தொன் | வி.கி. | வி.கி. | 748 | வி.கி. | வி.கி. | 249 |
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசிற்கு சமனான நெல் (ஈ) | '000 மெற்றிக்தொன் | வி.கி. | வி.கி. | 1,069 | வி.கி. | வி.கி. | 356 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பெரும்போக மற்றும் சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்ற அதேவேளை மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் சராசரி விளைவு கணிப்பிடப்படுகின்றது.
(ஈ) ஆண்டுக்கான பெறுமதி

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.4
அரிசி: நிரம்பல் மற்றும் கேள்வி




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

**அரிசி இறக்குமதி குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டியது.** குற்றப்பட்ட மொத்த அரிசி 2.5 மில்லியன் மெ.தொன்களாக மதிப்பிடப்பட்டதுடன் இது நாட்டின் குடியிருப்பாளர்களது அரிசித் தேவைப்பாட்டில் ஏறத்தாழ 13 மாதங்களின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இருந்தது. இதன்படி, மொத்த அரிசி இறக்குமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 66.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 106.8 மில்லியன் மொத்தச் செலவில் 248,901 மெ.தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டதுடன் இவ்வரிசியில் ஏறத்தாழ 95 சதவீதம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்டதாகும்.

**குறிப்பிட்ட வகைகளைக் கொண்ட நெல் மற்றும் அரிசி விலைகள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்பட்டன.** சந்தையின் மட்டுப்படுத்தப்பட்ட நிரம்பலின் காரணமாக ஆண்டின் முதலரைப்பகுதியில் உயர்வடைந்து காணப்பட்ட சம்பா நெல்லின் விலைகள் 2017/2018 பெரும்போக காலத்தில் அதிகரித்த அறுவடையினைத் தொடர்ந்து ஆண்டின் பின்னரைப் பகுதியில் குறைவடைந்து செல்லும் போக்கைக் காட்டியது. சம்பா நெல்லின் சராசரி விலை 2018இன் காலப்பகுதியில் கி.கிறாமொன்றிறக்கு ரூ.51.04 இற்கு சிறிதளவால் அதிகரித்த வேளையில், நாட்டு நெல்லின் விலை 2017இன் கி.கிறாமொன்றிற்கான ரூ.49.57 இலிருந்து 2018இல் கி.கிறாமொன்றிற்கு ரூ.40.17 இற்கு வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. 2018இல் சம்பா மற்றும் நாட்டு வகைகளுக்கான உத்தரவாத நெல் கொள்வனவு விலை முறையே கி.கிறாமொன்று ரூ.41.00 ஆகவும் கி.கிறாமொன்றிற்கு ரூ.38.00 ஆகவும் காணப்பட்டது. அரிசியின் நிரம்பல் அதிகரித்த போதும், குறிப்பிட்ட அரிசி விலைகளின் சராசரி விலை 2018ஆம் ஆண்டுப்பகுதியில் அதிகரித்து போட்டித்தன்மை வாய்ந்த சந்தைக்கான தேவையை எடுத்துக்காட்டியது. 2018ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் சம்பா அரிசியின் சராசரி சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.109.24 ஆகக் காணப்பட்டது. இது முன்னைய ஆண்டினை விட 10.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் கொண்டிருந்தது. அதேவேளை, நாட்டு அரிசியின் சராசரி சில்லறை விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.91.94 ஆக விளங்கியது. இது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 1.1 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

2

## தேயிலை

**தேயிலை வளரும் பிரதேசங்களில் குறிப்பாக 2018ஆம் ஆண்டின் மே மற்றும் யூன் மாதங்களில் நிலவிய சாதகமற்ற வானிலை நிலைமைகள் மற்றும் பெருந்தோட்டத் துறையில் நிலவிய கூலி தொடர்பான தொழிற்சங்க நடவடிக்கைகள் என்பனவற்றின் காரணமாக இவ்வாண்டுப்பகுதியில் மொத்தத் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டது.** இதன்படி, மொத்தத் தேயிலை உற்பத்தி 2017இன் 307.1 மில்லியன் கி.கிறாம்களிலிருந்து 2018இல் 303.8 மில்லியன் கி.கிறாம்களுக்கு 1.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மொத்த உற்பத்தியில் 63.2 சதவீதத்திற்கு வகைகூறிய தாழ்நிலத் தேயிலை உற்பத்தி 192.0 மில்லியன் கி.கிறாம்களுக்கு 2.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் உயர் நிலத் தேயிலை மற்றும் மத்திய நிலத் தேயிலை உற்பத்திகள் முறையே 64.8 மில்லியன் கி.கிறாம்களுக்கு 1.3 சதவீதத்தினாலும் 47.0 மில்லியன் கி.கிறாம்களுக்கு 3.0 சதவீதத்தினாலும் அதிகரித்தன. அதேநேரம், தேயிலை சிறுஉடமையாளர் துறை தயாரிக்கப்பட்ட தேயிலையின் சராசரி விளைச்சலின் 2017இன் எக்டேயரொன்றிற்கு 1,995 கி.கிறாம்களிலிருந்து எக்டேயரொன்றிற்கு 1,958 கி.கிறாம்களுக்கு வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. மரபுவழித் தேயிலை மற்றும் பெறுமதிகூட்டப்பட்ட தேயிலை உற்பத்திகள் முறையே 1.9 சதவீதம் மற்றும் 1.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் வெட்டிக் கிழித்துச் சுருட்டப்பட்ட தேயிலை உற்பத்தி 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 9.6 சதவீதத்தினால் அதிகரித்தது.

**தேயிலை விலைகளில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கொன்றினை 2018இன் ஆரம்பத்தில் பதிவுசெய்யப்பட்டதுடன் இது ஆண்டின் இறுதி வரையும் தொடர்ந்தது. கொழும்பு தேயிலை ஏலங்களில் உயர், நடுத்தர மற்றும் தாழ்நிலத் தேயிலைகளில் சராசரி ஏல விலைகள், 2017இல் அவதானிக்கப்பட்ட தொடர்பான விலைகளிலும் பார்க்கக் குறிப்பிடத்தக்களவு குறைவானதாகக் காணப்பட்டது.** 2018ஆம் ஆண்டுப்பகுதியில் தேயிலையின் சராசரி விலைகள் கி.கிறாமொன்றிற்கு 2017இன் கி.கிறாமொன்றிற்கான ரூ.620.44 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு ரூ.581.58 இற்கு குறைவடைந்தது. கொழும்பு தேயிலை ஏலங்களில் தேயிலை விலைகளில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஏற்பட்ட உயர்ந்த வீழ்ச்சி மத்திய நிலத் தேயிலையிலும் (8.0 சதவீதம்) அதனைத் தொடர்ந்து உயர்நிலத் தேயிலையிலும் (6.3 சதவீதம்) மற்றும் தாழ்நிலத் தேயிலையிலும் (5.9 சதவீதம்) அவதானிக்கப்பட்டன. சராசரி ஏற்றுமதி விலை

2

(க.ஏ.பெ) 2017இன் கி.கிறாமொன்றிற்கான ஐ.அ.டொலர் 5.29 உடன் ஒப்பிடுகையில் 2018இல் கி.கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 5.06 இற்கு 4.4 சதவீதம் கொண்ட வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்டது. அதேவேளை, இலங்கைத் தேயிலையின் முக்கிய இறக்குமதியாளராக ஈராக்கும் அதனைத் தொடர்ந்து துருக்கியும் ருஷியாவும் காணப்பட்டன. 2018ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்றுமதியாளர்களிடமிருந்தான ஒப்பீட்டு ரீதியில் குறைந்த கேள்வி தேயிலை ஏற்றுமதிகளை மோசமாகப் பாதித்தது. இதன்படி, மொத்தத் தேயிலை ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டின் 289.0 மில்லியன் கி.கிறாம்களுடன் ஒப்பிடுகையில் 2018இல் 282.4 மில்லியனுக்கு கி.கிறாம்களுக்கு 2.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

## இறப்பர்

**2018இல் இறப்பர் உற்பத்தி 2017இல் உற்பத்தி செய்யப்பட்ட 83.1 மில்லியன் கி.கிறாம்களிலிருந்து 82.6 மில்லியன் கி.கிறாம்களுக்கு 0.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** பாலெடுக்கும் நாட்களில் பெருந்தோட்டப் பிரதேசங்களில் நிலவிய தொடர்ச்சியான மழை, உயர்ந்த உற்பத்திச் செலவு மற்றும் பெருந்தோட்டங்களில் நிலவிய மோசமான முகாமைத்துவம் என்பன ஒன்றுசேர்ந்து 2018இல் மொத்த இறப்பர் உற்பத்தி வீழ்ச்சியடைவதற்குப் பங்களித்தன. 2018இன் முதலரைப்பகுதியில் இறப்பர் உற்பத்தி வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கைக் காட்டிய வேளையில் அதன் பின்னர் முக்கியமாக இறப்பர் வளரும் பிரதேசங்களில் காணப்பட்ட சாதகமான வானிலை நிலைமைகளின் உதவியுடன் இறப்பர் உற்பத்தி கணிசமான முன்னேற்றத்தினைக் காட்டியது. மொத்த இறப்பர் உற்பத்தியில் ஏறத்தாழ 50.0 சதவீதப் பங்கிற்கு வகைகூறும் தட்டை இறப்பர் உற்பத்தி 2017இன் 41.5 கி.கிறாம்களிலிருந்து 41.3 கி.கிறாம்களுக்கு 0.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கிறேப் இறப்பர் உற்பத்தி 14.5 மில்லியன் கி.கிறாம்களாக அமைந்து 26.2 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. மொத்த இறப்பர் உற்பத்தியில் 32.4 சதவீதத்திற்கு வகைகூறும் ஏனைய வகை இறப்பரின் உற்பத்தி முன்னைய ஆண்டின் உற்பத்தியான 30.1 மில்லியன் கி.கிறாம்களுடன் ஒப்பிடுகையில் 26.8 மில்லியன் கி.கிறாம்களுக்கு 11.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கான இறப்பரின் உள்நாட்டுப் பாவனை 2018இல் 135.2 மில்லியன் கி.கிறாம்களுக்கு 5.6 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, மூலப்பொருள் வடிவிலான இறப்பரின் ஏற்றுமதிகள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 14.0 மில்லியன் கி.கிறாம்களாக அமைந்து 18.9 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. 2018இல் பன்னாட்டுச் சந்தை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் உள்நாட்டுச் சந்தையில் இறப்பரின் விலைகளும் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைக் காட்டின. கொழும்பு இறப்பர் ஏலங்களில் நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பர் இல.1 இறப்பரின் சராசரி விலை கி.கிறாமொன்றிற்கு ரூ.321.7இற்கு 8.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் லேட்டக்ஸ் கிறேப்பின் விலைகள் கி.கிறாமொன்றிற்கு ரூ.310.99 இற்கு 11.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட தாழ்ந்த இறப்பர் விலைகள் மற்றும் தாழ்ந்த உள்நாட்டு உற்பத்தி என்பன நாட்டின் பெறுமதி அடிப்படையிலான கைத்தொழில்கள் மீதான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு மூலப்பொருள் வடிவிலான இறப்பரின் இறக்குமதியினை 2017இன் 61.8 மில்லியன் கி.கிறாம்களிலிருந்து 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 65.76 மில்லியன் கி.கிறாம்களுக்கு அதிகரித்தது.

## தெங்கு

**2017இல் முக்கியமாக தெங்கு வளரும் பிரதேசங்களில் காணப்பட்ட சாதகமான மழைவீழ்ச்சியின் காலம் கடந்த தாக்கம் காரணமாக 2018இல் தெங்கு உற்பத்தி வீழ்ச்சியடைந்து செல்லும் அதன் போக்கிலிருந்து மீட்சியடைந்தது.** ஆண்டின் முதல் காலாண்டுப்பகுதியில் தெங்கு உற்பத்தி குறைவடைந்த நிலையில் காணப்பட்ட போதும் அதன் பின்னர் விரிவொன்றைப் பதிவுசெய்து 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 2,623 மில்லியன் காய்களுக்கு 7.1 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த வளர்ச்சியைத் தோற்றுவித்தது. ஆண்டின் முதலரைப்பகுதியில் குறைந்த நிரம்பலின் காரணமாக தெங்கினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் அளவு 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இல் வீழ்ச்சியடைந்தன. இதன்படி, தேங்காய்த் துருவல் உற்பத்தி 2018இல் 16.7 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. அதேபோன்று 2018இல் 14.6 சதவீதத்தினால் தேங்காய் எண்ணெய் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்கு உயர்ந்த உற்பத்திச் செலவின் காரணமாக சிறிய மற்றும் நடுத்தரளவு ஆலைகளின் தேங்காய் எண்ணெய் உற்பத்தி குறைவடைந்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். அதேவேளை, தேங்காய் எண்ணெய்க்கு மிக அணித்தான பதிலீடாக விளங்கும் தாவர எண்ணெய் இறக்குமதிகள் 2018இல் 11.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு குறைந்த உள்நாட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்தியும் உலகளாவிய தாவர எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் தூண்டுதலாக அமைந்தன. அதேவேளை, 2018இல் தேங்காய் கிறீம், தேங்காய் பால்மா, தேங்காய் பால் என்பனவற்றின் உற்பத்தி 13.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து இவ்வுற்பத்திகளுக்கான உயர்ந்த ஏற்றுமதிக் கேள்வியைப் பிரதிபலித்தன. மேலும், உற்பத்தியில் ஏற்பட்ட 13.1 சதவீத வீழ்ச்சியின் விளைவாக தேங்காய் எண்ணெயின் கிடைப்பனவு மட்டுப்படுத்தப்பட்டமையின் காரணமாக வேர்ஜின் தேங்காய் எண்ணெயின் உற்பத்தியும் பாதிக்கப்பட்டது. தேங்காய் உற்பத்திக்கான உள்நாட்டு தயாரிப்பாளர்களிடமிருந்து ஏற்பட்ட உயர்ந்த கேள்வியைப் பிரதிபலிக்கின்ற விதத்திலும் அதிகரித்த ஏற்றுமதிக் கேள்வி உலக சந்தையில் நிலவிய நிரம்பல் பற்றாக்குறை காரணமாக ஏற்றுமதிக்கான கேள்வி அதிகரித்தமையினையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் தேங்காய் விலைகள் குறிப்பாக, 2018இன் முதல்

### அட்டவணை 2.5
### முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்

| வகை | அலகு | 2017 (அ) | 2018 (ஆ) | மாற்றம் (%) 2016/17 (அ) | மாற்றம் (%) 2017/18 (ஆ) |
|---|---|---|---|---|---|
| **1. தேயிலை** | | | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 307.1 | 303.8 | 5.0 | -1.0 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 201 | 201 | -0.5 | - |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 193 | 193 | - | - |
| 1.4 உற்பத்திச் செலவு (ஈ) | ரூபா/கி.கி | 466.98 | 475.29 | -0.5 | 1.8 |
| 1.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 620.44 | 581.58 | 31.1 | -6.3 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 807.44 | 820.75 | 26.2 | 1.6 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 944 | 1,027 | -28.4 | 8.8 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 225 | 435 | 75.7 | 93.3 |
| 1.8 மொ.உ.உ.,இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.7 | 0.7 | - | - |
| **2. இறப்பர்** | | | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 83.1 | 82.6 | 5.1 | -0.6 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 137 | 136 | 2.9 | -0.4 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு (ஊ) | '000 எக்டேயர்கள் | 103 | 107 | 3.8 | 4.2 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 195.00 | 205.00 | 8.3 | 5.1 |
| 2.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 336.72 | 309.09 | 40.7 | -8.2 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 343.56 | 363.93 | 16.7 | 5.9 |
| 2.6 மீள்நடுகை (ஊ) | எக்டேயர்கள் | 1,338 | 870 | -8.8 | -35.0 |
| 2.7 புதிய பயிரிடுகை (ஊ) | எக்டேயர்கள் | 677 | 980 | 10.1 | 44.8 |
| 2.8 மொ.உ.உ இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.3 | 0.2 | - | -33.3 |
| **3. தெங்கு** | | | | | |
| 3.1 உற்பத்தி | காய்கள் மில் | 2,450 | 2,623 | -18.7 | 7.1 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 452 | 455 | -3.0 | 0.7 |
| 3.3 உற்பத்திச் செலவு | ரூபா/காய் | 16.69 | 18.84 | -0.1 | 12.9 |
| 3.4 சராசரி விலை | | | | | |
| - உற்பத்தியாளர் விலை | ரூபா/காய் | 62.71 | 60.68 | 95.2 | -3.2 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (எ) | ரூபா/காய் | 62.03 | 68.29 | 50.7 | 10.1 |
| 3.5 மீள்நடுகை/கீழ்பயிரிடுகை (ஏ) | எக்டேயர்கள் | 8,824 | 4,549 | 64.6 | -48.4 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 15,121 | 8,198 | 63.6 | -45.8 |
| 3.7 மொ. உ.உ.இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.6 | 0.6 | -14.3 | - |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குனர்களின் இலாபம் உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடுதல் மட்டும்
(ஊ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(எ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஏ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஐ) புதிதாக நடுகையிடப்பட்ட பரப்பானது ஒரு எக்டேயருக்கு 158 விதைகள் என்ற மாற்றல் வீதத்தில் தெங்குப் பயிர்ச்செய்கை சபையால் விநியோகிக்கப்பட்ட தெங்கு விதைகளின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது

*மூலங்கள்:* இலங்கைத் தேயிலைச் சபை
தேயிலை சிறுஉடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபை
பெருந்தோட்டகைத்தொழில் அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத்திணைக்களம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்
தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி அதிகார சபை
பெருந்தோட்ட கம்பனிகள்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

ஒன்பது மாத காலப்பகுதியில் அதிகரித்தன. எனினும், 2018இன் இறுதிக் காலாண்டில் நிரம்பல் அதிகரித்தமையின் காரணமாக தேங்காயின் சராசரி மொத்த விற்பனை விலை 2017இன் காயொன்றிற்கான ரூ.62.71 இலிருந்து 2018இல் காயொன்றிற்கு ரூ.60.68 இற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. பெரும்பாலும் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் அறிவிக்கப்பட்ட தேங்காயின் உயர்ந்த பண்ணை விலைகளுக்கு தேங்காயின் அதிகரித்துச் செல்லும் சில்லறை விலைகளும் அதேபோன்று தேங்காயை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் உற்பத்திச் செலவும் காரணங்களாக அமைந்தன. தேங்காயின் சராசரி சில்லறை விலை 2017இன் காயொன்றிற்கு ரூ.67.40 இலிருந்து 2018இல் காயொன்றிற்கு ரூ.69.71 இற்கு அதிகரித்த வேளையில் தேங்காய் எண்ணெயின் சராசரி விலை பெருமளவிற்கு மாற்றமின்றிக் காணப்பட்டது. தேங்காய்த் துருவலின் சராசரி க.ஏ.பெ விலை 2017இன் கிலோகிராமொன்றிற்கு ரூ.387.35 இலிருந்து 2018இல் கி.கிறாமொன்றிற்கு ரூ.430.84 இற்கு அதிகரித்தது. அதேவேளை, தேங்காய் துருவல் ஏற்றுமதியாளர்கள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் தேங்காய்த் துருவல் ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 28 சதவீதம் கொண்ட வீழ்ச்சியினால் பிரதிபலிக்கப்பட்டவாறு குறைந்த உள்நாட்டு உற்பத்தியின் காரணமாக அதிகரித்த விலைகளின் முழு நன்மைகளையும் தேங்காய்த் துருவல் ஏற்றுமதியாளர்களினால் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் போனது.

## சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

**2018இல் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் செயலாற்றம் முன்னைய ஆண்டினைப் போன்றே தொடர்ந்தும் நலிவடைந்து காணப்பட்டது.** கறுவா, கொக்கோ, பாக்கு, சிற்றரநெல்லா மற்றும் மஞ்சள் என்பனவற்றின் உற்பத்திகள் வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்த போதும் மிளகு, கராம்பு, ஏலக்காய், கோப்பி, சாதிக்காய், வெற்றிலை மற்றும் இஞ்சிக்கிழங்கு என்பனவற்றின் உற்பத்தி 2017 உடன் ஒப்பிடுகையில் 2018இன் காலப்பகுதியில் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. சிறுஏற்றுமதிப் பயிர்களின் கீழான நிலப்பரப்பு 1.9 சதவீதத்தினால் அதிகரித்த போதும் மொத்த உற்பத்தி 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 101,718 மெ.தொன்களுக்கு 14.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உற்பத்தியில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்கு வறண்ட வானிலையும் வளரும் பிரதேசங்களில் காணப்பட்ட மழைவீழ்ச்சி தன்மையில் ஏற்பட்ட வழமைக்கு மாறான மாற்றமும் முக்கிய காரணங்களாக அமைந்தன. இதன்படி, மிளகு உற்பத்தி, 20,135 மெ.தொன்களுக்கு 31.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பூக்கும் காலத்திலும் பழுக்கும் காலத்திலும் முக்கிய மிளகு வளரும் பிரதேசங்களில் காணப்பட்ட சாதகமற்ற வானிலை நிலைமைகளே முக்கிய காரணமாகும். அதேவேளை, மிளகின் பண்ணை மற்றும் ஏல விலைகள் ஏறத்தாழ 30 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமைக்கு உலக சந்தையில் விலையின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கும் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் மீள ஏற்றுமதி செய்யப்படுவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட மிளகின் தாழ்ந்த தரத்தின் காரணமாக உருவான பிரச்சனைகளும் காரணங்களாக அமைந்தன. எனினும், கொக்கோ உற்பத்தி 654 மெ.தொன்களுக்கு 38.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்ட வேளையில் கறுவா உற்பத்தி இவ்வாண்டுப்பகுதியில் 23,019 மெ.தொன்களுக்கு 3.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு அண்மைய ஆண்டுகளில் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு உதவியாக அமைந்தது. சிறு ஏற்றுமதிப் பயிர்களின் மொத்த ஏற்றுமதி

அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 360.2 மில்லியனுக்கு 11.3 சதவீதத்தினால் குறைவடைந்த வருவாய்களுடன் சேர்ந்து 19.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மிளகு, கராம்பு, ஏலக்காய், கொக்கோ, வெற்றிலை, பாக்கு போன்ற பல பயிர்களின் ஏற்றுமதிகள் 2018இல் வீழ்ச்சியடைந்த போதும் கறுவா ஏற்றுமதிகள் தொடர்ச்சியான வளர்ச்சியைக் காட்டி முன்னைய ஆண்டினை விட 5.5 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் 17,537 மெ.தொன்களை அடைந்தது. அதேவேளை, மிளகு, கொக்கோ, மஞ்சள் மற்றும் இஞ்சி என்பனவற்றை உள்ளடக்கிய சிறு ஏற்றுமதிப் பயிர்களின் இறக்குமதிகள் 12.0 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் இறக்குமதிச் செலவினம் 2018இல் ஏறத்தாழ 8.9 சதவீதத்தனால் அதிகரித்தது.

## ஏனைய களப் பயிர்கள்

**இவ்வாண்டுப்பகுதியில் நாட்டில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் ஒரு சில பகுதிகளில் நிலவிய பூச்சிகளின் தாக்கம் என்பனவற்றின் காரணமாக பயிர் இழப்புக்கள் ஏற்பட்டமைக்கு மத்தியிலும் ஏனைய களப் பயிர்களின் உற்பத்தி அதிகரித்தது.** ஏனைய களப் பயிர்களின் ஒட்டுமொத்த உற்பத்தி 2017இன் 509,076 மெ.தொன்களிலிருந்து 2018இல் 606,926 மெ.தொன்களுக்கு 19.2 சதவீதத்தினால் அதிகரித்தது. இது 2017/18 பெரும்போகத்தில் 42.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியினதும் 2018 சிறுபோகத்தில் 14.4 சதவீதம் கொண்ட வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாகும். சோளம், குரக்கன், உருளைக்கிழங்கு, பயறு, உழுந்து, கடலை மற்றும் தட்டைப் பயறு என்பனவற்றின் வெளியீடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் அதிகரித்த வேளையில் பெரிய வெங்காயம், சோயா அவரை, இறுங்கு என்பனவற்றின் உற்பத்தி எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இது இப்பயிர்களின் அதிகரித்த இறக்குமதிகளைத் தோற்றுவித்தது. இவ்வாண்டுப்பகுதியில் பெரிய வெங்காயத்தின் உற்பத்தி 47.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து அதன் விளைவாக பெரிய வெங்காயத்தின் இறக்குமதிகள் 246,237 மெ.தொன்களுக்கு 6.0 சதவீதத்தினால் அதிகரித்தன. 2018இல் உருளைக்கிழங்கு உற்பத்தி 21.2 சதவீதத்தினால் 88,897 மெ.தொன்களுக்கு அதிகரித்த போதும் உருளைக்கிழங்கின் இறக்குமதியும் 4.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அதிகரித்த உள்நாட்டுக் கேள்வியுடன் உலகளாவிய சந்தையில் காணப்பட்ட குறைந்த விலைகளும் உதவியாக அமைந்தன. ஏனைய களப்பயிர்களின் மேம்பட்ட உள்நாட்டு நிரம்பல் அத்தகைய உற்பத்திகளை பயன்படுத்தும் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் இறக்குமதி களுக்கான கேள்வியையும் குறைத்துவிடும். எனினும், உள்நாட்டு உணவுப் பாதுகாப்பினை வலுப்படுத்தும் பொருட்டு அருந்தல் கால உற்பத்திகளை மேம்படுத்தல், களஞ்சிப்படுத்தல் இயலளவினை விரிவுபடுத்தல், விரிவாக்கப் பணிகளை வலுப்படுத்தல் அதேபோன்று விதை உற்பத்தி, பூச்சிகொல்லி முகாமைத்துவம், தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுக்கும் பணிகள் மற்றும் காலநிலைக்குத் தாக்குபிடிக்கக்கூடிய வேளாண்மை தொடர்பில் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுதல் என்பனவற்றை மேம்படுத்துவதன் மூலம் அனைத்து மற்றைய களப்பயிர்களின் வழங்கலை அதிகரிப்பதற்கு மேலும் முயற்சிகள் தேவைப்படுகின்றன. அதேவேளை, சோளம் மற்றும் குரக்கன் உற்பத்திகள் இறுதிக் காலாண்டில் படைப்புளுவின் தாக்கம் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன் இதன் விளைவாக இப்பயிர்களின் உற்பத்தி 2018/19 பெரும்போகத்தில் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## காய்கறிகள்

**தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி, காய்கறி உற்பத்தி 2018இல் 1.7 மில்லியன் மெ.தொன்களுக்கு அதிகரித்து இவ்வாண்டின் சில காலங்களில் வானிலை தொடர்பான தடங்கல்கள் காணப்பட்டமைக்கிடையிலும் 13.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியை பதிவுசெய்தது.** 2017/18 பெரும்போகத்தில் காணப்பட்ட 20.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பும் 2018 சிறுபோக காலத்தில் காணப்பட்ட 4.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியும் உதவியாக அமைந்தன. அதேவேளை, நாட்டின் சில பகுதிகளில் நிலவிய வரட்சி மற்றும் வெள்ள நிலைமை ஆகிய இரண்டினதும் காரணமாக ஆண்டு முழுவதும் காய்கறிகளின் பரந்தளவு தளம்பல்கள் காணப்பட்டன. 2018இன் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் நிலவிய வானிலையுடன் தொடர்பான பின்னடைவுகள் பயிர்களில் சேதங்களை விளைவித்து சந்தை நிரம்பலைக் குறைவடையச் செய்ததுடன் பல்வேறு வகையான காய்கறிகளின் விலைகளையும் உயர்வடையச் செய்தது. அதேவேளை, 2018இன் மூன்றாம் காலாண்டுப்பகுதியில் அதிகரித்த விலைகள் கிரமமான பருவகால மாதிரிகளை எடுத்துக்காட்டிய வேளையில் மழையுடன் கூடிய வானிலை நிலைமைகள் அறுவடையையும் காய்கறிகள் கொண்டு செல்லப்படுவதையும் ஆண்டின் காலாண்டுப்பகுதியின் இறுதியில் கணிசமானளவிற்கு தடங்கலுறச் செய்தன. எனினும், காலநிலையுடன் தொடர்பான இவ்விடையூறுகளுக்கிடையிலும் பெரும்போகத்தின் உச்ச அறுவடைக் காலத்தின் போதும் அதேபோன்று சிறுபோக காலத்திலும் காய்கறிகளின் நிரம்பல் அதிகரித்து அதன் மூலம் விலைகளைக் குறைவடையச் செய்தது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.4.6 பில்லியன் பெறுமதியான 25.8 மில்லியன் கி.கிறாம்கள் கொண்ட காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்பட்ட வேளையில் ரூ.49.1 பில்லியன் கொண்ட 738.2 மில்லியன் கி.கிறாம்கள் கொண்ட காய்கறிகள் இறக்குமதி செய்யப்பட்டன. அதேவேளை, பூச்சிகளின் தாக்கம் காய்கறிகளின் பயிர்ச்செய்கையில் முக்கிய பிரச்சனையாக மாறியுள்ளதுடன் வேளாண்மையாளர்களையும் வாடிக்கையாளர்களையும் அதேபோன்று இத்துறையின் உறுதிப்பாட்டுத் தன்மையினையும் பாதுகாக்கும் பொருட்டு இப்பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வழிமுறைகள் தேவைப்படுகின்றன.

### பழவர்க்கங்கள்

**2018இல் பழவர்க்கங்களின் உற்பத்தி, அவகாடோ, தோடம்பழம், கொய்யாப்பழம், ரம்புட்டான் மற்றும் எலுமிச்சம்பழம் என்பனவற்றின் குறிப்பிடத்தக்கப் பங்களிப்புடன் அதிகரித்தது.** 2018இல் பழவர்க்கங்களின் உற்பத்தி முன்னைய ஆண்டின் 9.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 28.8 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்வாண்டுப்பகுதியில் ரூ.6.3 பில்லியன் பெறுமதியான 37.3 மில்லியன் கி.கிறாம் பழவர்க்கங்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட வேளையில் அப்பிள், மண்டறின், தோடம்பழம் மற்றும் திராட்சை என்பனவற்றை உள்ளடக்கிய ரூ.14.2 பில்லியன் பெறுமதியான 78.7 மில்லியன் கி.கிறாம் உடன்பழங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இலங்கையில் பழச்செய்கை 150,000 எக்டேயர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் பரந்து காணப்பட்ட வேளையில், இந்நிலப்பரப்பில் பெரும்பங்கு வீட்டுத்தோட்டங்களாகக் காணப்படுகின்றன. பழவர்க்கங்களின் பயிர்ச்செய்கையில் காணப்படும் மோசமான திட்டமிடல், விழிப்புணர்வு போதுமானதாக இல்லாமை என்பனவற்றின் காரணமாக தேசிய அபிவிருத்தியில் பழ உற்பத்திகளினது பங்களிப்பு இன்னமும் குறைவாகவே காணப்படுகிறது. பழச்செய்கையின் அதிகரித்துவரும் காத்திரமான தன்மை, உற்பத்திகளின் தரத்தினை உறுதிப்படுத்தல், பழங்களுக்கான சந்தைக் கேள்வியை பூர்த்தி செய்தல், பயிரிடும் நிலத்தின் நிலைமைகள் தொடர்பில் வேளாண்மையாளர்களிடையே சிறந்த விழிப்புணர்வினை ஏற்படுத்தல் என்பன இத்துறையின் அபிவிருத்திக்காக வலியுறுத்தப்பட வேண்டிய முக்கிய பிரச்சனைகளாகக் காணப்படுகின்றன.

### சீனி

**2017இல் சீனி உற்பத்தியில் காணப்பட்ட மெதுவான போக்கு 2018இலும் தொடர்ந்தது. மீளாய்விற்குரிய காலப்பகுதியில் மொத்த உள்நாட்டுச் சீனி உற்பத்தி 51,265 மெ.தொன்களாக விளங்கி 2017இல் பதிவுசெய்யப்பட்ட 9.3 சதவீதம் கொண்ட மெதுவான போக்குடன் ஒப்பிடுகையில் 7.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.** இதன்படி, 2018இல் பிழியப்பட்ட கரும்பின் அளவு, 2017இல் பதிவுசெய்யப்பட்ட 746,607 மெ.தொன்களுடன் ஒப்பிடுகையில் 720,259 மெ.தொன்களாகக் காணப்பட்டது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் செவனகல தொழிற்சாலையின் உற்பத்தி செய்யப்பட்ட மொத்தச் சீனி, முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 15,198 மெ.தொன்களுடன் ஒப்பிடுகையில் 14,709 மெ.தொன்களாகக் காணப்பட்டது. மழைவீழ்ச்சியை நம்பிய கரும்பு நிரம்பலில் தங்கியிருக்கும் பெல்வத்தை தொழிற்சாலையின் உற்பத்தி 28,061 மெ.தொன்களுக்கு 1.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் கல்லோயா தொழிற்சாலையின் உற்பத்தி (ஹிங்குரான) ஆய்விற்குரிய காலப்பகுதியில் 8,495 மெ.தொன்களுக்கு 33.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. ஒட்டுமொத்த தேசிய உற்பத்திக்கான செவனகல, பெல்வத்தை மற்றும் கல்லோயா (ஹிங்குரான) தொழிற்சாலைகளின் வெளியீட்டிலிருந்தான மதிப்பிடப்பட்ட பங்கு முறையே ஏறத்தாழ 29 சதவீதமாகவும் 54 சதவீதமாகவும் 17 சதவீதமாகவும் காணப்பட்டன. சீனித் துறையில் உற்பத்தித்திறன் மீதான குறிகாட்டியாகக் கருதப்படுகின்ற, சீனி பெறல் வீதம்[1] 2017இன் 7.4 சதவீதத்திலிருந்து 2018இல் 7.1 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. அதேவேளை, சீனி இறக்குமதியும் 2017இன் 497,952 மெ.தொன்களிலிருந்து 2018இல் 644,675 மெ.தொன்களுக்கு 29.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்குக் குறைந்த உள்நாட்டு உற்பத்தியும் பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட குறைந்த விலைகளும் காரணங்களாக அமைந்தன. ஒட்டுமொத்தமாக, உள்நாட்டுச் சீனித் தயாரிப்பாளர்கள் 2017இன் பத்து சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் நாட்டின் சீனிக்கான கேள்வியில் ஏறத்தாழ ஒன்பது சதவீதத்தினைப் பூர்த்தி செய்யத்தக்கதாக இருந்த வேளையில் எஞ்சிய உள்நாட்டுக் கேள்வி இறக்குமதிகளினூடாக நிறைவு செய்யப்பட்டது.

### மீன்பிடி

**மீன்பிடித்துறை 2018இல் சிறிதளவு பின்னடைவொன்றினைக் காட்டியது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் மொத்த மீன் உற்பத்தி 527,060 மெ.தொன்களாக விளங்கி 2017இல் பதிவுசெய்யப்பட்ட 0.1 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 0.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது.** மீன் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு கடல் மீன் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கிய காரணமாக இருந்தது. மொத்த மீன் உற்பத்தியில் ஏறத்தாழ 83 சதவீதத்திற்கு வகைகூறும் கடல் மீன் உற்பத்தி 2018இல் 439,370 மெ.தொன்களுக்கு 2.2 சதவீத வீழ்ச்சியைக் காட்டியமைக்கு கரையோர மற்றும் கடனீரேரிகளின் மீன் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியே பெரிதும் காரணமாகும். 2018இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் மேல் மற்றும் தென் கரையோரப்பகுதிகளில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகள் ஒரு நாள் படகுகளின் தொழிற்பாடுகளை மோசமாகப் பாதித்ததுடன் அதன் மூலம் கடல் மீன் உற்பத்தியைப் பாதித்தது. எனினும், மொத்த மீன் உற்பத்தியில் ஏறத்தாழ 17 சதவீதத்திற்குப் பங்களிக்கும் நன்னீர் மீன் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் 87,690 மெ.தொன்களுக்கு 7.1 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. 2018இன் தொடக்கப்பகுதியில் முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் உயர்வடைந்தமையினைத் தொடர்ந்து நீர்த்தேக்கங்களுக்குள் மீன்குஞ்சுகள் அதிகளவில் விடப்பட்டமை, நீரியில் மூலவள முகாமைத்துவத்தின் சிறந்த தன்மை, சரியான கண்காணிப்பு என்பன நன்னீர் மீன்பிடித் துறையின் மேம்பாட்டிற்குப் பெருமளவிற்குப் பங்களித்தது. 2018இல் ஏறத்தாழ 111.6 மில்லியன் மீன்குஞ்சுகள் உற்பத்தி

---

1 $$\text{சீனி பெறல் வீதம்} = \frac{\text{உற்பத்தி செய்யப்பட்ட மொத்தச் சீனி}}{\text{பிழியப்பட்ட கரும்பின் அளவு}} \times 100$$

**அட்டவணை 2.6**
**மீன் உற்பத்தி**

'000 மெற்றித்தொன்கள்

| துணைத்துறை | 2017 | 2018 (அ) | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2016/17 | 2017/18 (அ) |
| கடல் | 449 | 439 | -1.7 | -2.2 |
| கரையோரம் மற்றும் களப்பு | 260 | 249 | -5.3 | -4.1 |
| கடற்கரையிலிருந்து தொலைவில் | 190 | 190 | 3.8 | 0.3 |
| நன்னீர் மீன்பிடி | 82 | 88 | 10.7 | 7.1 |
| பிடிப்பு | 69 | 71 | 17.3 | 3.7 |
| பண்ணை மீன் வளர்ப்பு | 9 | 8 | -7.9 | -2.9 |
| இறால் வளர்ப்பு பண்னை | 5 | 8 | -23.2 | 76.7 |
| மொத்தம் | 531 | 527 | 0.1 | -0.8 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* வேளாண்மை, கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி கடற்தொழில் மூலவளங்கள் அபிவிருத்தி

செய்யப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 35 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். அதேவேளை, மீளாய்விற்குரிய காலப்பகுதியில் கூனி இறால் பண்ணை துணை வகையின் உற்பத்தியும் கணிசமாக அதிகரித்த வேளையில் நீரியல் வளர்ப்பு வகை உற்பத்தி 8,490 மெ.தொன்களுக்கு 2.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பதிலிறுத்தும் விதத்தில், பாரிய மீன் வகைகளின் விலைகள் 0.7 சதவீதம் கொண்ட சிறிதளவு அதிகரிப்பு பதிவுசெய்யப்பட்ட வேளையில் சிறிய மீன் வகைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 15.2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. அதேநேரம் பெறுமதி நியதிகளில் மீன் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 10.5 சதவீதத்தினால் ஐ.அ.டொலா் 265.8 மில்லியனுக்கும் அளவு நியதிகளில் 6.6 சதவீதத்தினால் 25,949 மெ.தொன்களுக்கும் அதிகரித்து ஐரோப்பிய ஒன்றியச் சந்தைக்கான மீன் ஏற்றுமதிகள் மீதான தடை அகற்றப்பட்டமையின் தொடர்ச்சியான தாக்கத்தினைப் பிரதிபலித்தது. அதேவேளை, 2018இல் மீன் இறக்குமதிகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 105,745 மெ.தொன்களிலிருந்து 84,206 மெ.தொன்களுக்கு 20.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

## கால்நடை வளர்ப்பு

**2018இன் மொத்தப் பால் உற்பத்தி குறிப்பிடத்தக்களவு விரிவாக்கத்தினைப் பதிவுசெய்தது.** இதன்படி, மொத்தப் பால் உற்பத்தி 2017இன் 396.2 மில்லியன் லீற்றருடன் ஒப்பிடுகையில் 2018இல் 471.6 மில்லியன் லீற்றா்களுக்கு 19.0 சதவீதத்தினால் அதிகரித்தது. பசுப்பால் உற்பத்தி 385.7 மில்லியன் லீற்றா்களுக்கு 17.7 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் எருமைப்பால் உற்பத்தி 2017 உடன் ஒப்பிடுகையில் 85.9 மில்லியன் லீற்றா்களுக்கு 25.3 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, தேசிய விலங்குவளா்ப்பு அபிவிருத்தி சபையின் பால் உற்பத்தி முன்னைய ஆண்டின் 15.0 மில்லியன் லீற்றா்களிலிருந்து 2018இல் 14.7 மில்லியன் லீற்றா்களுக்கு குறைவடைந்தது. கறவைப் பசுக்களின் எண்ணிக்கை 329,380 இற்கு 11.2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் கறவை எருமைமாடுகளின் எண்ணிக்கை 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 94,200 இற்கு 8.9 சதவீதத்தினால் அதிகரித்தது. அதிகரித்த உற்பத்திக்கு மத்தியிலும், பால்மா இறக்குமதிகள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் ரூ.50.3 பில்லியன் பெறுமதியில் 99,028 மெற்றிக்தொன்களுக்கு 6.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. உள்நாட்டுப் பால் உற்பத்தி நாட்டின் மொத்தக் கேள்வியில் ஏறத்தாழ 45 சதவீதத்தினை மட்டும் பூர்த்திசெய்ய போதுமானதாகவிருந்தமையினால் தற்போது நிலவும் பிரச்சனைகளை கட்டுப்படுத்துவது இன்றியமையாததாகவுள்ள வேளையில் பால் உற்பத்தியாளா்களை அவா்களது உற்பத்தி இயலளவினை அதிகரிப்பதற்கு தூண்டுதல் அளிப்பது அவசியமாகும். அதேவேளை, பால் உற்பத்தியின் சராசரிச் செலவு லீற்றறொன்றுக்கு ரூ.47.67 இற்கு அதிகரித்தமைக்கு செறிவூட்டப்பட்ட தீவனங்களின் விலை அதிகரித்தமையே முக்கிய காரணமாகவிருந்த வேளையில் சராசரிப் பண்ணை விலைகள் முன்னைய ஆண்டைப் போன்றே பெருமளவிற்கு மாற்றமின்றி லீற்றறொன்றுக்கு ரூ.66.88 ஆகக் காணப்பட்டது.

**2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் முட்டை உற்பத்தி வீழ்ச்சியடைந்த வேளையில் இறைச்சி உற்பத்தி கலப்பான செயலாற்றமொன்றைக் பதிவுசெய்தது.** முட்டை உற்பத்தி 2017இன் 2,072.9 முட்டைகளுடன் ஒப்பிடுகையில் 2018இல் 1,972.2 மில்லியன் முட்டைகளுக்கு 4.9 சதவீதத்தினால் வீழச்சியடைந்தது. அதேவேளை, பெரியளவு முட்டை உற்பத்தியாளா் ஒருவரின் உற்பத்திச் செலவு 2018இல் ரூ.12.80 இற்கு 3.7 சதவீதத்தினால் அதிகரித்தது. கோழிறைச்சியின் உற்பத்தி 2017இன் 200,980 மெற்றிக்தொன்களிலிருந்து 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் 205,820 மெற்றிக்தொன்களுக்கு

**அட்டவணை 2.7**
**கால்நடைத்துறை புள்ளி விபரங்கள்**

| துணைத்துறை | 2017 (அ) | 2018 (ஆ) | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|
| | | | 2016/17 (அ) | 2017/18 (ஆ) |
| 1. மொத்த மந்தைகள் (எண்ணிக்கை) (மில்) | 1.3 | 1.4 | 6.0 | 10.5 |
| கறவைப் பசுக்கள் | 1.0 | 1.1 | 5.9 | 11.0 |
| எருமைகள் | 0.3 | 0.3 | 6.3 | 8.9 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 396.2 | 471.6 | 3.2 | 19.0 |
| பசும்பால் | 327.6 | 385.7 | 3.1 | 17.7 |
| எருமைப்பால் | 68.6 | 85.9 | 3.7 | 25.3 |
| 3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்)(இ) | 42.6 | 45.1 | 15.4 | 5.8 |
| 4. உற்பத்தியாளர் விலை - பசும்பால்(ரூ./லீற்றர்) | 66.34 | 66.88 | 3.6 | 0.8 |
| 5. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 2,072.9 | 1,972.2 | 0.6 | -4.9 |
| 6. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி ('000 மெ.தொ) | 201.0 | 205.8 | 10.0 | 2.4 |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானது.
(இ) தேசிய கால்நடை அபிவிருத்திச்சபை. மற்றும் மில்கோ பிறைவேட் லிமிடட் என்பவற்றின் உற்பத்திகள் மாத்திரம் உள்ளடக்கப் படுகின்றது

மூலங்கள்: வேளாண்மை, கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி கடற்தொழில் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்
தேசிய கால்நடை அபிவிருத்திச்சபை
மில்கோ பிறைவேட் லிமிடெட்

2.4 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்த வேளையில் கோழிறைச்சியின் உற்பத்திச் செலவு 2018ஆம் ஆண்டுகாலப்பகுதியில் கி.கிறாமொன்றிற்கு ரூ.245.32 இலிருந்து கி.கிறாமொன்றிற்கு 265.85இற்கு அதிகரித்தது. மேலும், புரொயிலர் தாய்க் கோழியின் இறக்குமதிகள் 2017இன் 382,421 இலிருந்து 2018இல் 428,108இற்கு அதிகரித்த வேளையில் புரொயிலர் தாய்க்கோழியின் உள்நாட்டு உற்பத்தி 2017இன் 1.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 1.1 மில்லியனுக்கு அதிகரித்தது. அதேவேளை, பன்றிறைச்சி உற்பத்தி 10,430 மெ.தொன்களுக்கு 32.2 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், ஆட்டிறைச்சி உற்பத்தி 2018இல் 1,630 மெ.தொன்களுக்கு 14.8 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், மாட்டிறைச்சி உற்பத்தி 2017இல் பதிவுசெய்யப்பட்ட 30,130 மெ.தொன்களிலிருந்து 2018இல் 28,420 மெ.தொன்களுக்கு 5.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

## வேளாண்மைக் கொள்கைகளும் நிறுவன ரீதியான உதவியும்

**'தேசிய வோளாண்மைக் கொள்கை' இல் எதிர்பார்க்கப்பட்டவாறு வேளாண்மை மீதான அரச கொள்கை நாட்டில் உணவுப் பாதுகாப்பினை எய்தும் நோக்குடன் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.** இதன்படி, பயிர் உற்பத்தி மற்றும் எதிர்வுகூறல் நிகழ்ச்சித்திட்டம், தேசிய உணவு பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சேதன வளமாக்கி உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பன வேளாண்மைத் துறையின் நவீனமயப்படுத்தல் செயல்திட்டத்துடன் சேர்ந்து இவ்வாண்டிலும் தொடர்ந்தது. மேலும், உலக வங்கியினால் நிதியிடப்பட்ட காலநிலையினை எதிர்த்து நிற்கக்கூடிய நீர்ப்பாய்ச்சல் வேளாண்மைச் செயற்றிட்டம் நாட்டில் காலநிலைக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய வேளாண்மை முறைகளை நடைமுறைப்படுத்துகின்ற நோக்குடன் ஆறு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டது. மேலும், காட்டு விலங்குகளினால் பயிர்களின் பெரும்பங்கு சேதமாக்கப்படுவதனைக் கருத்திற்கொண்டு வேளாண்மை அமைச்சு காட்டு விலங்கினங்களை கட்டுப்படுத்துவதன் மீதும் பயிர் சேதங்களைத் தடுக்கும் பொருட்டும் விசேட கவனங்களைச் செலுத்தியது. அதேவேளை, அறுவடைக்குப் பின்னரான உயர்ந்தளவு இழப்புக்களை பரிசீலனையில் கொண்டு பொருத்தமான களஞ்சியப்படுத்தலை உறுதிப்படுத்துவதன் மூலம் பழுதடையக்கூடிய பண்ணை உற்பத்திகளின் நிரம்பலில் ஏற்படக்கூடிய தளம்பல்களின் விலைகளையும் குறைப்பதற்காக தம்புள்ள பொருளாதார மையத்துடன் இணைந்த விதத்தில் வெப்பத்தினைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் களஞ்சிய வசதிகளை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்தது. வேளாண்மைத் துறையினை மிகவும் உற்பத்தித் திறன்வாய்ந்த சூழல் - சிநேகபூர்வ தன்மையினைக் கொண்ட ஏற்றுமதி சார்ந்த துறைகளுக்கு நகர்த்துவதனை முக்கிய கவனத்தில் கொண்டு 2018 வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு அரசாங்கம் பல கொள்கை வழிமுறைகளை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. வரவுசெலவுத்திட்டம் 2019 தொழில்நுட்பங்களைப் புகுத்துவதற்கும் உயர்பெறுமதி கொண்ட பயிர்களை அபிவிருத்தி செய்வதற்குமாக வேளாண் வியாபார பெறுமதிச் சங்கிலிகளை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகளை முன்மொழிந்தது. அரசாங்கம் கட்டுநாயக்கா, எம்பிலிப்பிட்டிய, யாழ்ப்பாணம் மற்றும் கெப்பெட்டிபொல ஆகிய இடங்களில் நவீன காலநிலைக் கட்டுப்பாடுகளைக் கொண்ட களஞ்சியசாலை வசதிகளை ஏற்படுத்துவதற்கு ரூ.400 மில்லியனை ஒதுக்கியிருக்கிறது. மேலும், ஐந்து புதிய மாவட்டங்களில் வேளாண்மை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டங்களை விரிவாக்குவதற்கு ரூ.250 மில்லியன் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வரவுசெலவுத் திட்டம் கறுவா மற்றும் இறப்பர் கைத்தொழில்கள், தேங்காயை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், மீன்பிடித் துறை மற்றும் நீர்ப்பாசன உட்கட்டமைப்பு என்பனவற்றை அபிவிருத்தி செய்வதற்காக பல வழிமுறைகளை முன்மொழிந்திருக்கிறது.

அட்டவணை 2.8
முக்கிய உணவுப் பண்டங்கள் தொடர்பான உணவு ஐந்தொகை

| விடயம் | அலகு | 2010 | | | 2017 | | | 2018(அ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) |
| அரிசி (ஆ) | மெ.தொ'000 | 3,011 | 126 | 152 | 1,523 | 748 | 106 | 2,751 | 249 | 138 |
| சோளம் | மெ.தொ'000 | 162 | 16 | 9 | 196 | 191 | 18 | 270 | 133 | 19 |
| கோதுமை | மெ.தொ'000 | - | 1,051 | 51 | - | 1,250 | 58 | - | 1,297 | 60 |
| பெரிய வெங்காயம் | மெ.தொ'000 | 59 | 158 | 10 | 54 | 232 | 13 | 28 | 246 | 13 |
| சீனி | மெ.தொ'000 | 31 | 548 | 28 | 56 | 498 | 26 | 51 | 645 | 32 |
| உருளைக் கிழங்கு | மெ.தொ'000 | 52 | 130 | 9 | 73 | 151 | 10 | 89 | 159 | 11 |
| உடன் மீன் | மெ.தொ'000 | 385 | 14 | 19 | 531 | 28 | 26 | 527 | 19 | 25 |
| பசும்பால் | மில். லீற்றர் | 192 | - | 9 | 328 | - | 15 | 386 | - | 18 |
| தேங்காய் எண்ணெய் | மெ.தொ'000 | 65 | 3 | 3 | 13 | 10 | 1 | 11 | 12 | 1 |

அ) தற்காலிகமானது
ஆ) 1 மெற்றிக்தொன் நெல் = 0.7 மெற்றிக்தொன் அரிசி

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்

2

**இலங்கை தேயிலைச் சபை, தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்திச் சபை, தேயிலை ஆராய்ச்சிச் சபை என்பன 2018ஆம் ஆண்டு முழுவதும் உற்பத்தித்திறன் மற்றும் தொழில்நுட்பவியல் மேம்பாடுகளை வலியுறுத்துகின்ற விதத்தில் தேயிலைத் துறையின் மேம்பாட்டிற்காக தமது அபிவிருத்தி நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டன.** இலங்கை தேயிலைச் சபை வர்த்தகநாமத்தை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ் தொடர்ந்தும் நிதியுதவியை வழங்கியதுடன் நாட்டின் வர்த்தக நாமமாக 'சிலோன் தேயிலை' மற்றும் தனியாரின் தனிப்பட்ட நாமங்கள் இரண்டையும் ஊக்குவிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட சந்தைகளில் பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சிகளை நடாத்துவதற்கு தேயிலை ஏற்றுமதிக் கம்பனிகள் பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சிகளில் பங்கேற்பதற்கு ஏற்றுமதிக் கம்பனிகளுக்கு வசதிகளையும் வழங்கியது. இலங்கைத் தேயிலைச் சபை இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் சிலோன் தேயிலையை சிங்க சின்னத்துடன் பதிவுசெய்து புதுப்பிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இலங்கை தேயிலைச் சபை வர்த்தகக் கண்காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் ஆண்டின் மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் ஊக்குவித்ததுடன் ஊடகப் பிரச்சாரங்கள், வெளிப்புற விளம்பரங்கள், உலகளாவிய ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் மற்றும் சிலோன் தேயிலை மன்றம் மற்றும் சுவையினைப் பரிசோதித்தல் போன்ற ஊக்குவிப்பு நடவடிக்கைகளை நடாத்திய வேளையில், ருசியாவிலிருந்து வந்த பேராளர் குழுவிற்கு விருந்தோம்பல் வசதிகளையும் வழங்கியது. அதேவேளை, தேயிலை சிறுஉடமையாளர் அபிவிருத்தி அதிகார சபை 2018ஆம் ஆண்டுப்பகுதியிலும் அவற்றின் தேயிலை மீள்பயிரிடுகை பொதுப் பயிரிடுகை நிகழ்ச்சித்திட்டங்களையும் பயிர் புனரமைப்பு உதவுதொகை நிகழ்ச்சித்திட்டங்களையும் தொடர்ந்தும் நடைமுறைக்கிட்டது. தேயிலை சிறுஉடமையாளர் அபிவிருத்தி அதிகார சபை தேயிலை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் ஆர்வலர்களுக்காக விரிவாக்கும் மற்றும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. மேலும், தேயிலை சிறுஉடமையாளர் அபிவிருத்தி அதிகார சபை, தேயிலை சிறுஉடமையாளர்கள் அவர்களது உடமைகளில் முதலீடுகளை ஊக்குவிக்கும்பொருட்டு அவர்களுக்காக இலங்கை வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 'சிறப்பு வங்கிக் கடன்' திட்டத்தின் கீழ் தேயிலை மீள்பயிரிடுகை மற்றும் தேயிலை புதுப்பயிரிடுகை என்பனவற்றுக்கான கடன்களுக்கு விதந்துரைப்பை வழங்கியது. இதன்படி, 2018ஆம் ஆண்டுப்பகுதியில் எக்டேயர் ஒன்றிற்கு ரூ.500,000 உதவுதொகை வீதமொன்றின் கீழ் தேயிலை சிறுஉடமைகளில் 1,027 எக்டேயர்கள் மீளப்பயிரிடப்பட்ட வேளையில் 435 எக்டேயர்கள் புதிதாகப் பயிரிடப்பட்டன. தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் உபாயத்திட்டம் 2018 - 2020 இன்படி தேயிலைத் துறையை மேம்படுத்துவதற்காக தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உபாயங்களும் விரிவாக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. உபாயத் திட்டத்தின் கீழ், புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட தேயிலைப் பயிர்ச்செய்கை நிலங்களில் தரமான பயிரிடல் பொருட்களைப் பெருக்குவதற்கும் பரப்புவதற்கும் மற்றும் சிறுஉடமையாளர்களிடையே விதையுடன் தொடர்பான மூலப்பொருட்களை மேம்படுத்துவதற்கும் சிறப்பு செயற்றிட்டங்கள் நிறுவப்பட்டன. ஒருங்கிணைக்கப்பட்ட மண் வளமாக்கிப்படுத்தல் முகாமைத்துவ அணுகுமுறை மற்றும் வேளாண்பொருளியல் நடைமுறைகள், சிறுஉடமைத் துறையில் பொறிகள் மூலமான அறுவடைகளையும் ஏனைய சாதனங்களையும் பிரபல்யப்படுத்தல் மற்றும் சிறந்த தரங்களைக் கொண்ட உற்பத்திகளை பன்முகப்படுத்தல் என்பனவூடாக நிலத்தின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக இவ்வாண்டுப்பகுதியில் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், மலைநாட்டுப் பிராந்தியங்களுக்காக தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் 5,000 தொடர்களைக் கொண்ட நான்கு நிலப்பண்படுத்தி இயந்திரங்களை அபிவிருத்தி செய்து பரப்புவதற்கு செயற்றிட்டமொன்றை முன்னெடுத்தது. உற்பத்தித் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக பௌதீகம், இரசாயனம், மண்ணின் உயிரியல் தன்மைகள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டதுடன் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் கருந்தேயிலை மற்றும் பச்சைத் தேயிலையின் பதனிடலில் மிகமுக்கியமான கட்டுப்பாட்டு புலனாய்வுகளையும் தேயிலையின் இரசாயனம் மற்றும் நுண்ணுயிர்த் தன்மைகளின் தரங்கள் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தினால் மண்ணின் தரச்சுட்டெண் ஒன்று உருவாக்கப்பட்டது. தேயிலை நிலங்களின் குறைந்த உற்பத்தித்திறன், தொழிலாளர் பிரச்சனைகள், உயர்ந்த உற்பத்திச் செலவு, அறுவடைக்குப் பின்னரான சேதங்கள், தேயிலை தொழிற்சாலைகளின் வசதிகள் போதுமானதற்றதாக உள்ளமை. தரம்குறைந்த தேயிலை உற்பத்தி மற்றும் உறுதியற்ற தேயிலை விலைகள் என்பன தேயிலை உற்பத்தியை மோசமாகப் பாதிப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும், தேயிலை உற்பத்தி உயர்ந்தளவிற்கு தொழிலாளர் செறிவினைக் கொண்டதாகவிருப்பதுடன் இத்தொழில் குறைந்த தொழிலாளர் உற்பத்தித்திறன், தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் உயர்ந்த கூலிச் செலவு அதேபோன்று தொழிற்சங்க நடவடிக்கைகள் என்பனவற்றினை 2018ஆம் ஆண்டுப்பகுதியிலும் எதிர்நோக்கியது.

**இறப்பர் உற்பத்தித் திணைக்களம் மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் என்பன இயற்கை இறப்பர் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்குடன் அவற்றின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை 2018 இலும் தொடர்ந்தன.** தேயிலை அபிவிருத்தித் திணைக்களத்தின் உபாயத்திட்டம் தற்போதைய இயற்கை இறப்பரின் ஆண்டு உற்பத்தியான ஏறத்தாழ 83,000 மெ.தொன் உற்பத்தியை 2040ஆம் ஆண்டளவில் ஆண்டிற்கு 200,000 மெ.தொன்களுக்கு அதிகரிப்பதனை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. உற்பத்தித்திறன்

மேம்பாடு மற்றும் பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர்ச்செய்கையை விரிவாக்கியமை என்பன 2018ஆம் ஆண்டுப்பகுதியில் இது தொடர்பில் நடைமுறைக்கிடப்பட்ட முக்கிய வழிமுறைகளாகக் காணப்பட்டன. சந்தையில் நிலவிய தாழ்ந்த இறப்பர் விலைகளுக்கு இழப்பீடு செய்யும் விதத்தில் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் மேலதிக வருமானத்தினை வேளாண்மையாளர்கள் பெறுவதனை இயலச்செய்யும் விதத்தில் பயிரிடல் முறைமைகளை அறிமுகப்படுத்தியமை, தொழிலாளர் செலவினையும் ஒட்டுமொத்த உற்பத்திச் செலவினையும் குறைக்கும் விதத்தில் பாலெடுக்கும் முறைமையின் கால அளவினை குறைக்கும் முறைமையினைப் பிரபல்யப்படுத்தியமை மற்றும் கூடியளவு வருமானத்தினை உருவாக்குவதற்காக இறப்பர் பெருந்தோட்டங்களில் மழைத்தடுப்பிகளைப் பிரபல்யப்படுத்தியமை என்பன காணப்பட்டன. ஊடு பயிர் வகைகளுடன் கூடிய நீடித்துநிலைத்திருக்கும் இறப்பர் பயிர்ச்செய்கையை உருவாக்குவதற்காக இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் சிறப்பு மூலதனச் செயற்றிட்டமொன்றினைப் பெற்றிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி, வவுனியா, மொனராகலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் ஏழு வேளாண்மையாளர் களங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. தேசிய ஆராய்ச்சிச் சபையிடமிருந்து உயிரற்ற அழுத்த நிலைமைகளின் கீழ் வளர்ச்சியையும் விளைச்சலையும் அதிகரிப்பதற்காக இறப்பர் மரங்களின் பௌதீக சமூகவியல் மற்றும் நுண்ணாய்வு உயிரியல் அம்சங்கள் என்பன பற்றி புலனாய்வு செய்வதற்காக ஆராய்ச்சிக் கொடையொன்று பெறப்பட்ட வேளையில் லேட்டக்ஸ் மற்றும் வரண்ட இறப்பர் மீதான வாயு தூண்டலின் தாக்கத்தினை பகுப்பாய்வு செய்வது தொடர்பாக புதிய செயற்றிட்டமொன்று அகலவத்தையிலுள்ள பிம்புறா பெருந்தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மூலப்பொருள் வடிவிலான இறப்பரின் பெறுமதிகூட்டல் தொடர்ச்சியாக ஊக்குவிக்கப்பட்ட போதும் இறப்பர் உற்பத்தித் துறை ஏற்றுக்கொள்ளத்தக்க வேளாண் முகாமைத்துவ நடைமுறைகளை பின்பற்றுவது போதாமல் இருந்தமையின் காரணமாக குறைந்த உற்பத்தி மட்டங்களின் காரணமாக போட்டித்தன்மை குறைவாக இருந்தமையினால் பாதிக்கப்பட்டது. மேலும், இயற்கை இறப்பருக்கான குறைந்ததும் தளம்பல் மிக்கதுமான சந்தை விலைகள், உயர்ந்த உற்பத்திச் செலவு, உயர்ந்த தொழிலாளர் செலவு, தேர்ச்சிபெற்ற பாலெடுப்பவர்கள் பற்றாக்குறையாக இருப்பது உள்ளிட்ட தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் மோசமான வானிலை நிலைமைகள் என்பன இறப்பர் துறையிலுள்ள ஆர்வலர்களினால் எடுத்துக்காட்டப்பட்ட முக்கிய பிரச்சனைகளாகும்.

**தெங்குத் துறையில் புதிய பயிரிடல் மற்றும் மீளப்பயிரிடல், தரமுயர்த்தல் மற்றும் தொடர்பான நிறுவனங்களில் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்தல் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு பழக்கப்படுத்திக் கொள்வதனூடாக உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு வழிமுறைகளை நடைமுறைக்கிடுதல் என்பனவற்றிற்காக நிறுவன ரீதியான ஆதரவு மேலும் பலப்படுத்தப்பட்டது.** மீளப்பயிரிடல் மற்றும் புதிதாகப் பயிரிடலுக்கான உதவுதொகைத் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ ரூ.274 மில்லியன் இவ்வாண்டுப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதன்படி, மீள்பயிரிடல் மற்றும் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 4,549 எக்டேயர்களாக விளங்கிய வேளையில் புதிய பயிரிடல் பரப்பு 8,198 எக்டேயர்களாக விளங்கியது. அதேவேளை, 2017 யூனிலிருந்து நடைமுறையிலிருந்த உடன் காய் ஏற்றுமதிகள் மீதான ஒப்புதலை வழங்குதல் உள்நாட்டுச் சந்தையில் உடன் தேங்காய்க்கு நிலவிய கடுமையான பற்றாக்குறையின் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டதன் பின்னர் துறையில் ஏற்பட்ட திருப்திகரமான செயலாற்றத்தினைப் பரிசீலனையில் கொண்டு 2018 செத்தெம்பர் 1ஆம் நாளிலிருந்து இது அகற்றப்பட்டது. உற்பத்தி மட்டம் மீட்சியடைந்தமையுடன் உடன்காய் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் தெங்கு அதிகாரசபையினால் உடன்காய்களின் ஏற்றுமதி மீது சேகரிக்கப்பட்ட பணிகள் கட்டணம் காயொன்றிற்கு ரூ.15.00 இலிருந்து ரூ.8.00இற்குக் குறைக்கப்பட்டது. மேலும், இவ்வாண்டுப்பகுதியில் தேங்காய் எண்ணெய் மீதான இறக்குமதித் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.130.00 இலிருந்து கி.கிறாமொன்றிக்கு ரூ.170.00 இற்கு அதிகரித்த வேளையில் உள்நாட்டு தேங்காய் எண்ணெய்க் கைத்தொழிலினைப் பாதுகாக்கும் நோக்குடன் மசகு தாவர எண்ணெய் மீதான இறக்குமதித் தீர்வை கி.கிறாமொன்றிற்கு ரூ.110.00 இலிருந்து ரூ.150.00 இற்கு அதிகரிக்கப்பட்டது. தீர்வையில் செய்யப்பட்ட திருத்தங்கள் உள்நாட்டு எண்ணெய்க் கைத்தொழிலின் மீது சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருக்கக்கூடுமென தோன்றுகின்ற போதும் உயர்ந்த உடன்காய்களினது விலைகள் காரணமாக ஆண்டின் தொடக்கப்பகுதியில் எண்ணெய் ஆலைகளின் உற்பத்தி நிறுத்தப்பட்டதன் பின்னர் தேங்காய் எண்ணெயின் உற்பத்தி முழுமையாக மீட்சியடையவில்லை. அதேவேளை, தெங்குத் துறை அபிவிருத்திக்காக அரச நிறுவனங்களினால் உறப்பட்ட மூலதனச் செலவினம் 2017இன் ரூ.772 மில்லியன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.844 மில்லியனாகக் காணப்பட்டது. மேலும், தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காகவும் பயிர் பாதுகாப்பு மற்றும் புதிய தெங்கினை அடிப்படையாகக் கொண்ட புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்காகவும் அதன் ஆராய்ச்சி நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்ட வேளையில் வெலிகம தென்னோலை வெள்ளைப் புள்ளி நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான பங்களிப்புக்களையும் வழங்கியது. தொழில்நுட்பத்தினை மாற்றல் செய்யும் நடவடிக்கைகளின் கீழ் தெங்கு பயிரிடுவோருக்காக தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் வருடாந்தம் 'தெங்குப் பயிர்ச்செய்கை பெறுமதிகூட்டல் மீதான சான்றிதழ் பாடநெறி' ஒன்றினை நடத்தியதுடன் அரச மற்றும் தனியார் துறை தெங்குப் பெருந்தோட்டங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மீது தொடர்ச்சியான செயலமர்வுகளை நடத்தியதுடன் பன்னாட்டு தெங்கு சமூகத்துடன் இணைந்து முதலாவது 'தெங்கு பெருந்தோட்ட

2

2

## சிறப்புக்குறிப்பு 4
## வேளாண்மைத் துறையின் தாக்குபிடிக்கும் தன்மையினை அதிகரிப்பதற்கு வலுவான வேளாண்மை தொற்றுத்தடைகாப்புக் கட்டமைப்பு

**வேளாண்மை தொற்றுத்தடைக்காப்புக் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டிய தேவை**

2018இன் பிந்திய பகுதியில் நாட்டின் சோள உற்பத்தியினை கடுமையாக சேதப்படுத்திய படைப்புழு நோய்ப் பீடிப்பின் அண்மைய திடீர் நோய்த்தாக்கமானது அடிக்கடி ஏற்படும் வெளிவாரியாக தோற்றம் பெறுகின்ற இடையூறுகளால் இலங்கையின் வேளாண்மைத் துறை பாதிக்கப்படக்கூடிய தன்மையினை மீண்டும் ஒரு தடவை எடுத்துக்காட்டியுள்ளது. நிலம் மற்றும் தொழிலாளர் சந்தை மறுசீரமைப்புகள் ஊடாக நீண்டகாலமாக தீர்க்கப்படவேண்டிய தேவையாக இருந்துவருகின்ற கட்டமைப்புச் சார்ந்த பிரச்சனைகளின் காரணமாக வேளாண்மைத் துறை குறைந்த உற்பத்தித் திறன் மட்டங்களிலிருந்து வருந்துகின்ற அதேவேளை, கடுமையான வானிலை நிலைமைகள், தொற்றுநோய்கள் மற்றும் பீடைத்தாக்கங்களிலிருந்து தோன்றுகின்ற பாதகமான விளைவுகளின் பீடிப்புக்கள் நாட்டின் உணவுப் பாதுகாப்பினை வலுப்படுத்துவதற்கு வேளாண்மைத் துறையினை பாதுகாக்க வேண்டிய முயற்சிகளில் கவனம் செலுத்தவேண்டிய தேவையினை எடுத்துக்காட்டுகின்றது. வேளாண்மை உற்பத்தியினை பாதுகாத்தலானது அளவுக்கு மீறிய உணவு விலைகள் மற்றும் வாழ்க்கைச் செலவு என்பவற்றைக் குறைத்தல், உணவு, களைக்கொல்லிகள் மற்றும் பீடை கொல்லிகள் போன்வற்றின் இறக்குமதிச் செலவினைக் குறைத்தல் அதேபோன்று வேளாண்மைத் துறையின் உண்மையான ஏற்றுமதி வாய்ப்பினை இனங்காணல் என்பவற்றுக்கு அத்தியாவசியமானதாகும்.

நாடுகளுக்கும் பிராந்தியங்களுக்குமிடையிலான பன்னாட்டு வர்த்தகம் மற்றும் போக்குவரத்தின் வளர்ச்சி என்பன பீடைகள், நோய்கள் மற்றும் களைகள் உலகளவில் பரவுகின்ற இடர்நேர்வுகளை அதிகரித்துள்ளன. இயற்கையான செயன்முறைகள் மூலம் குறுகிய தூரத்திற்கே பரவக்கூடிய இயலளவினை முன்னர் கொண்டிருந்த உயிரினங்கள் தற்போது ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு அல்லது ஒரு புவியியல் பிராந்தியத்திலிருந்து இன்னொன்றுக்கு மிக இலகுவாக இடமாறக் கூடியவனவாகவிருக்கின்றன. கடந்த காலத்தில் அசைகின்ற ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதும், வர்த்தக நடவடிக்கைகள் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட துரிதமாகப் பரவும் பீடைகள் உலகில் வேறுபட்ட பாகங்களில் பயிர்களை சேதமாக்கி பஞ்சத்தினையும்கூட தோற்றுவித்துள்ளன. 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இடம்பெற்ற மத்திய அமெரிக்காவிலிருந்து பிந்திய வெளிறல் நோய்க் கிருமி அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கை மொத்தமாக செயலற்றுப்போனமையின் விளைவாக அயர்லாந்துப் பஞ்சம், ஏற்பட்டிருந்தது. மேலும், 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் விரைவான தொடராக அமெரிக்காவிலிருந்து பூஞ்சனம் அறிமுகப்படுத்தப்பட்டமை பிரான்சின் திராட்சைப்பழ வைன் கைத்தொழிலினை கிட்டத்தட்ட அழிவடையச் செய்தது. இலங்கையில் 1868இல் கோப்பி இலைத் துரு நோய் பரவியதன் மூலம் ஏற்பட்ட அழிவின் காரணமாக கோப்பிற்குப் பதிலாக தேயிலை பெருந்தோட்டப் பயிராக மாற்றீடு செய்யப்பட்ட அதேவேளை, மலேரியாவிற்கு சிகிச்சை அளிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சிங்கோனா, கெலோப்பீளிஸ் அன்டோனிசோ மூலம் அழிவடைந்தது. மேலும், இலங்கையில் சுமார் 20,000 எக்டேயர்ஸ் தென்னம் தோட்டங்கள் 1960 களின் பிந்திய பகுதிகளின் போது தென்னோலைச் சுரங்கமறுப்பானின் திடீர் பரவலின் மூலம் அழிவடைந்தது. மிக அண்மையில், பையிட்டோபிளாஸ்மாவினால் தோற்றுவிக்கப்பட்ட வெலிகம தென்னோலை வாடல் நோய் தென்னிலங்கையில் தென்னந்தோட்டங்களை அழிவடையச் செய்தது. இலங்கையின் சோளப் பயிரில் அழிவடையும் நாச விளைவினைத் தோற்றுவித்திருந்த படைப்புழு, அமெரிக்க அயன மற்றும் உபஅயனப் பிராந்தியங்களுக்கான சுதேசிய இனமாகுமென்பதுடன் முதலில் ஆபிரிக்காவில் பரவியிருந்ததுடன் 2016 சனவரியில் நைஜீரியாவில் இது கண்டுபிடிக்கப்பட்டு அதன்பின்னர் உப சகாரா ஆபிரிக்கப் பிராந்தியங்கள் முழுவதும் பரவியது. அதன்பின்னர் இப்பீடை ஆசியாவில் பரவியதுடன் இந்தியாவிலிருந்தான வர்த்தகம் மற்றும் விமானப் போக்குவரத்து வழிகளினூடாக 2018இல் இது இலங்கையில் பரவியது என நம்பப்படுகின்றது. ஒருங்கிணைக்கப்பட்ட பீடை முகாமைத்துவ முறைமையின் உதவியுடன் மேலும் பயிர் சேதமடைவதைத் தவிர்ப்பதற்கு பீடைக்கெதிரான கட்டுப்பாட்டு வழிமுறைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், முக்கிய ஏற்றுமதி அடைவிடங்களால் இலங்கையின் சில வேளாண்மை சார்ந்த ஏற்றுமதிகள் மீது விதிக்கப்பட்ட அண்மைய தடைகள் தேவைக்குறைவான தொற்றுத்தடைக்காப்பு நடைமுறைகளின் காரணமாக இலங்கை எதிர்கொள்கின்ற பாதிப்புக்களை காண்பிக்கின்றன. அத்தகைய அதிகரித்த இடர்நேர்வுகளும் பாதிக்கப்படும் தன்மைகளும் உணவுப் பொருட்கள், விதைகள், தாவரங்கள் அதேபோன்று உயிருடனான விலங்குகள் என்பவற்றின் இறக்குமதியூடாக அறிந்தோ அல்லது அறியாமலோ நாட்டிற்கு அறிமுகமாகின்ற அயல்நாட்டு உயிரினங்களிலிருந்து தோன்றுகின்ற வேளாண்மைத் துறை மீதான பாதகமான விளைவுகளைக் குறைக்கும் பொருட்டு எல்லைகளில் நாட்டின் தாவரப்

பாதுகாப்புக் கட்டமைப்பினையும் தொற்றுத்தடைக்காப்பு நடவடிக்கைகளையும் வலுப்படுத்துவதற்கான உடனடித் தேவையினை எடுத்துக்காட்டுகின்றது.

**இலங்கையின் தொற்றுத்தடைக்காப்பு ஒழுங்குவிதிகள்**

உலகம் முழுவதும் வேளாண்மை உற்பத்திகளின் பாதுகாப்பான வர்த்தகத்தை உறுதிசெய்யும் நோக்குடன் உலகளாவிய அடிப்படையில் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளின் போது பரிணமித்த தேசிய மற்றும் பன்னாட்டு உடன்படிக்கைகள் தாவர தொற்றுதடைக்காப்புச் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், மற்றும் சேவைகளை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன. இலங்கையின் தாவர தொற்றுத்தடைக்காப்பு முறைமையானது 1880களில் பிரித்தானிய ஆட்சியின் கீழ் தோற்றம் பெற்றதுடன் தற்போது, பீடைகளின் நுழைவு, தாபனம் மற்றும் பரவலைத் தடுப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள பல எண்ணிக்கையான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் இலங்கையில் காணப்படுகின்றன. கமத்தொழில் திணைக்களத்தின் விதை சான்றுபடுத்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு நிலையத்தின் கீழ் தொழிற்படுகின்ற தேசிய தாவர தொற்றுத்தடைக்காப்பு சேவையானது தாவர தொற்றுத்தடைக்காப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானதாகும். தேசிய தாவர தொற்றுத்தடைக்காப்பு சேவையானது, உள்நாட்டு பீடைக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள், தொற்றுத்தடைக்காப்பு முக்கியத்துவப் பீடைகளை இல்லாதொழிப்பதற்கான சிகிச்சைத் தொழில்நுட்பங்களை உருவாக்குதல் மற்றும் ஆரோக்கியமான தாவரங்கள் மற்றும் தாவர உற்பத்திகளின் இறக்குமதியினையும் ஏற்றுமதியினையும் ஊக்குவித்தல் என்பவற்றில் ஈடுபடுகின்றது. மேலும், பீடை நோய்நிர்ணயங்கள் மற்றும் கண்டுபிடித்தல், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், தாவர தொற்றுத்தடைக்காப்பு தொடர்புபட்ட ஆராய்ச்சி போன்ற சேவைகள் தேசிய தாவரத் தொற்றுத்தடைக்காப்புச் சேவையினால் மேற்கொள்ளப்படுகின்றது. தேசிய தாவர தொற்றுத்தடைக்காப்பு சேவை நிலையங்களும் இறக்குமதி நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு தாவரங்கள் மற்றும் தாவர உற்பத்திகளின் இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், தாவர ஆரோக்கியச் சான்றிதழ்களை வழங்குதல், தாவர மற்றும் தாவர உற்பத்திகளின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிச் சரக்குகளைப் பரிசோதித்தல், நுழைவுக்குப் பிந்திய தொற்றுத்தடைக்காப்புச் செயற்பாடுகளைக் கையாளுதல், தாவர தொற்றுத்தடைக்காப்புக் கருமங்கள் மற்றும் ஆலோசனைச் சேவைகள் தொடர்பாக ஆர்வலர்களுடன் ஒருங்கிணைத்தல், இறக்குமதி இடர்நேர்வுப் பகுப்பாய்வு, நோய்கள், பீடைகள் மற்றும் கிருமிகளை இனங்காணுதல் போன்ற தொற்றுத்தடைக்காப்புச் செயன்முறைகளை வழங்குகின்றன.

துரிதமாகப்பரவும் பீடைகள் தொடர்பில் பிரச்சனைகளை தடுத்து நிறுத்துவதற்கு இலங்கையில் கிடைக்கப்பெறுகின்ற சட்டரீதியான முக்கிய சாதனங்களாக 1909இன் 4ஆம் இலக்க நீர்ச்சாதாளை கட்டளைச் சட்டம், 1937இன் 2ஆம் இலக்க விலங்கு மற்றும் தாவரயின பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் (திருத்தப்பட்டவாறான) 1996இன் 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வழங்கல் சட்டம் (திருத்தப்பட்டவாறான) 1999இன் 35ஆம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டம், 2007இன் 11ஆம் இலக்க நுளம்புப் பெருக்கத்தினைத் தடுத்தல் சட்டம் மற்றும் 2008இன் 35ஆம் இலக்க கடல்சார் மாசு தடைச் சட்டம் என்பன காணப்படுகின்றன. தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் புதிய ஒழுங்குவிதிகள் இன்னும் வழங்கப்படவில்லை என்பதனால் தாவரப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டவை இன்னும் செயற்பாட்டிலுள்ளன. தாவரப் பாதுகாப்புச் சட்டமானது இலங்கையில் காணப்படுகின்ற தாவரங்களுக்கு ஏதேனும் காயமேற்படுத்துகின்ற அல்லது ஆபத்து விளைவிக்கின்ற அல்லது தாவரங்களை நாசப்படுத்துகின்ற ஏதேனும் நுண்ணங்கிகளின் அறிமுகத்தினையும் பரவலினையும் தடுப்பதற்கு முனைகின்றது. தாவர வாழ்க்கைக்கு ஆபத்தினை உண்டுபண்ணக்கூடிய அனைத்து செயற்பாடுமிக்க, செயற்பாடற்ற அத்துடன் வாழ்வின் உறங்குநிலைக் கட்ட வடிவங்கள் என்பவற்றை உள்ளடக்குவதற்கு இச்சட்டம் 'ஊடுருவல்கள்' என வரைவிலக்கணம் செய்கின்றது. இது தாவரங்களை மாத்திரமன்றி நுண்ணங்கிகளையும் உள்ளடக்குகின்றது. மேலும், இலங்கையில் பல்வேறு அரசாங்க நிறுவனங்கள் பீடைத் தொற்றுத்தடைக்காப்புக்களுடன் தொடர்புபட்டவை உள்ளடங்கலான பிரச்சனைகளைத் தடுத்துநிறுத்துவதற்கு தேசிய வனசீவராசிக் கொள்கை, தேசிய சுற்றாடல் கொள்கை, தேசிய கமத்தொழில் கொள்கை போன்ற கொள்கைக் பொறிமுறைக் கூற்றுக்களை உருவாக்கியுள்ளன. எனினும், பீடைகளை முகாமை செய்வதற்கான நாட்டின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு காத்திரமான கட்டமைப்பொன்றினை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு அரசாங்கமானது துரிதமாகப்பரவும் அயல்நாட்டு உயிரினங்கள் மீது புதிய தேசியக் கொள்கையொன்றுக்காக ஒப்புதல் அளித்தலுடன் அதன் நடைமுறைப்படுத்தலுக்கான உபாயங்களும் நடவடிக்கைத் திட்டமும் 2016 மாச்சில் அனுமதிக்கப்பட்டது. எனினும், நடவடிக்கைத் திட்டம் இன்னும் அமுல்படுத்த வேண்டியுள்ளது.

**தாவர பாதுகாப்பு மீதான பன்னாட்டு தரநியமங்கள்**

துரிதமாகப்பரவும் பீடைகளுக்கெதிராக உடனடி நடவடிக்கை எடுப்பதற்கான கட்டமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதிலும் வலுப்படுத்துவதிலும் இலங்கையின் தரநியமங்கள் தொடர்புடைய உலக சமவாயத்திற்கு அமைவாகக் காணப்படுகின்றன என்பதனை உறுதிசெய்வது முக்கியமானதாகும். உலக வர்த்தக அமைப்பு, உயிரியல் பல்லினத் தன்மை மீதான

2

2

சமவாயம், பன்னாட்டு தாவரப் பாதுகாப்புச் சமவாயம் மற்றும் கப்பல்களிலிருந்தான மாசுபடுதலினைத் தவிர்ப்பதற்கான சமவாயம் என்பன தாவரப் பாதுகாப்பின் மீது கவனம் செலுத்துகின்ற முக்கிய பன்னாட்டு அமைப்புக்களும் சமவாயங்களுமாகும். பன்னாட்டு தாவரப் பாதுகாப்புச் சமவாயமானது சமவாயத்தின் நடைமுறைப்படுத்தலினை மேற்பார்வை செய்கின்ற தாவர ஆரோக்கிய வழிமுறைகள் மீதான ஆணைக்குழு என அறியப்படும் ஆளுகை அமைப்பொன்றினை உருவாக்கியுள்ளது. சமவாயமானது, தாவர ஆரோக்கியத்திற்கான ஒரேயொரு பன்னாட்டு தரநியமத்தினை நிர்ணயிக்கின்ற அமைப்பாக சுகாதார மற்றும் தாவர ஆரோக்கிய வழிமுறைகளின் பிரயோகத்தின் மீதான உலக வர்த்தக அமைப்பின் உடன்படிக்கை மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு தாவரப் பாதுகாப்புச் சமவாயத்தின் அடிப்படை நோக்கு, பன்னாட்டு வர்த்தகத்தில் தாவரங்கள் மற்றும் தாவர உற்பத்திகளின் அசைவின் மீது கவனம் செலுத்துவதாகும். பன்னாட்டு தாவரப் பாதுகாப்புச் சமவாயத்தின் உறுப்பு நாடுகள் ஏற்றுமதிக்காக பரிசோதனை நடைமுறைகளைப் பேணுவதற்கும் புதிய பீடைத்தொற்று நிகழ்கையில் இல்லாதொழித்தல் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றன. பன்னாட்டு தாவரப் பாதுகாப்புச் சமவாயமானது ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து அவசியமான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அரசாங்கங்களை ஊக்குவிக்கின்ற அதேவேளை, பாதுகாப்பான வேளாண்மை வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கு நாட்டினுள் தேசிய தாவரப் பாதுகாப்பு அமைப்பொன்றினை நிறுவுவதற்கு உறுப்பு நாடுகள் வேண்டப்பட்டுள்ளன. பன்னாட்டு தாவரப் பாதுகாப்புச் சமவாயத்தின் தாவர ஆரோக்கிய வழிமுறைகளுக்கான பன்னாட்டு தர நியமங்கள் தாவர தொற்றுத்தடைக்காப்பிற்கான பன்னாட்டு தரநியமங்களின் உருவாக்கச் செயன்முறையினை வசதிப்படுத்துவதற்கான முக்கிய அடிப்படைக் கூறுகளாகக் காணப்படுகின்றன. இந்நிகழ்ச்சித்திட்டமானது வர்த்தகத்தை வசதிப்படுத்துகின்ற அத்துடன் வர்த்தகத்திற்கு தடைகளாகத் தொழிற்படுகின்ற நியாயப்படுத்தமுடியாத வழிமுறைகளை பயன்படுத்துவதனைத் தவிர்க்கின்ற நோக்குடன் தாவர ஆரோக்கிய வழிமுறைகளின் பன்னாட்டு ஒத்திசைவினை எய்துவதற்கான தரநியமங்கள், வழிகாட்டல்கள் மற்றும் பணிப்புரைகளை உணவு வேளாண்மை அமைப்பின் அங்கத்துவ நாடுகளுக்கும் வேறு ஆர்வமிக்க தரப்பினருக்கும் கிடைக்கச்செய்கின்றது.

**இலங்கையின் தொற்றுத்தடைக்காப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள்**

இலங்கை பன்னாட்டு தாவரப் பாதுகாப்பு சமவாயத்தின் உறுப்பு நாடொன்றாகவிருந்து தாவர ஆரோக்கிய வழிமுறைத் தரநியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுகின்ற போதிலும், பயிர்சேதம் தொடர்பான பல்வேறு நிகழ்வுகள் குறிப்பாக அண்மைக்காலங்களில் நிகழ்ந்தவை தொற்றுத்தடைக்காப்புச் செயற்பாடுகளிலுள்ள பன்னாட்டு தரநியமங்களை நடைமுறைப்படுத்துவதில் நாடு பின்தங்கிக் காணப்படுகின்றது என்பதனை காண்பிக்கின்றன. தேசிய சட்ட மற்றும் நிறுவனசார் கட்டமைப்புக்களை வலுப்படுத்தல், ஆராய்ச்சிக் கொள்ளளவினைக் கட்டியெழுப்புதல், சுற்றாடல் சார்ந்த இடர்நேர்வுப் பகுப்பாய்வு முறைமையொன்றினை விருத்திசெய்தல், பொதுமக்கள் விழிப்புணர்வினையும் ஈடுபாட்டினையும் அதிகரித்தல் மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பினை ஊக்குவித்தல் என்பன இலங்கையின் தொற்றுத்தடைக்காப்புச் சேவைகளை அதிகரிப்பதற்குத் தேவையான உபாயங்களாக காணப்படுகின்றன. தொற்றுத்தடைக்காப்புச் சேவைகளை தேவைப்படும் மட்டத்திற்குத் தரமுயர்த்துவதற்கு தொழில்நுட்பம், உபகரணங்கள் மற்றும் பயிற்றப்பட்ட தொழிற்படை போதாமையினால் தாவரப் பாதுகாப்பு நிறுவனங்கள் தடைப்பட்டுள்ளன. இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கான கொள்கை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு என்பன இன்னும் போதுமானளவு விருத்திசெய்யப்படாதவையாகவும் சிறப்பாக ஒருங்கிணைக்கப்படாமலும் காணப்படுகின்றன. தேசிய தாவர தொற்றுத்தடைக்காப்புச் சேவைக்கு துணையளிப்பதற்கும் சுயாதீன அரச முகவராண்மையொன்றாக அதனை வலுப்படுத்துவதற்கும் தற்போதுள்ள சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளை தேசிய மட்டத்தில் வகுத்து மீளாய்வு செய்யவேண்டிய அவசியமொன்று காணப்படுகின்றது. பொறுப்புடைய நிறுவனங்கள் தேசிய மட்ட தொற்றுத்தடைக்காப்புக் கட்டமைப்பொன்றினைக் கட்டியெழுப்புதற்கு கொள்கைகளுடனும் ஒழுங்குவிதிகளுடனும் இணங்கிச்செல்ல வேண்டும். வேளாண்மை தொற்றுத்தடைக்காப்புக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான பொருத்தமான ஊக்குவிப்பு பொறிமுறையினை அறிமுகப்படுத்துவது நாட்டின் வேளாண்மை உற்பத்தியினைப் பாதுகாப்பதற்கான அத்தியாவசியமான படிமுறையொன்றாகவும் விளங்குகின்றது. மேலும், துரிதமாகவும் பீடைகளினால் தோற்றுவிக்கப்படும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு பயிர்சார்ந்த விசேட நிபுணர்கள், பூச்சியலாளர்கள், சூழலியலாளர்கள் மற்றும் தாவரதொற்றுத்தடைக்காப்பு விசேட நிபுணர்கள் போன்றோரின் கொள்ளளவைக் கட்டியெழுப்புவதற்கும் வலையமைப்பை ஏற்படுத்துவதற்குமான தேவையொன்றும் காணப்படுகின்றது. கொள்ளளவைக் கட்டியெழுப்பும் முயற்சிகள் குடிவரவு அதிகாரிகள், தொற்றுத்தடைக்காப்பு அலுவலர்கள், சுங்கம், உணவுப் பரிசோதனை அதிகாரிகள் மற்றும் ஆர்வலர்கள் மத்தியில் பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களூடாக அடிப்படை விழிப்புணர்வினைக் கட்டியெழுப்புவதை மையப்படுத்தியிருக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக, இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் பொதுமக்கள் போன்றோருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக

தேசிய தாவர வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் தேசிய தாவர ஆரோக்கிய ஒழுங்குவிதிகள் என்பவற்றின் முக்கியத்துவம் பற்றி அவர்களுக்கு அறிவூட்டுவது அவசியமாகும். மேலும், இடர்நேர்வுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கான ஆராய்ச்சிக் கொள்ளளவினை வலுப்படுத்தல் மற்றும் சுற்றாடல் ரீதியாக நிலைபெறத்தக்க உபாயங்கள் ஊடாக துரிதமாகப்பரவும் பீடைகளை இல்லாதொழிப்பதற்கு மேம்படுத்தப்பட்ட நுட்பங்களை உருவாக்குதல் என்பனவும் தேவைப்படுகின்றன. பீடைகளை தடுப்பதற்கும் இல்லாதொழிப்பதற்கும் தகவல் பரிமாற்றம், மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் முன்கூட்டிய எச்சரிக்கை முறைமைகளுக்கான செயல்திறன்மிக்க பொறிமுறையொன்று அனைத்து ஆர்வலர்களினதும் உதவியுடன் உருவாக்கப்பட வேண்டும். மேலும், ஆரம்ப பரிசோதனை நடைமுறைகளின் போதும் கள மேற்பார்வையின் போதும் பீடைகளின் உடனடிக் கண்டுபிடிப்பு அத்தியாவசியமானதாகும். டிஜிட்டல் பிம்பப்படுத்தல், கதிர்வீச்சு ஸ்கேனிங் நுட்பங்கள், மோப்பநாய்கள் போன்றவற்றினைப் பயன்படுத்தி தூரத்திலிருந்து பீடையினை அடையாளப்படுத்தல் போன்ற பீடைக் கண்டுபிடிப்பதற்கான புதிய முறைகள் இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். துரிதமாகப்பரவும் பீடைகளின் தீடீர் படையெடுப்பினை தடுத்துநிறுத்துவதற்கு பொருத்தமான இடர்நேர்வுப் பகுப்பாய்வு மற்றும் சுற்றாடல் மதிப்பீடு என்பவற்றுடன்கூடிய துரித பதிலிறுத்தல் பொறிமுறைகள் மிகக் காத்திரமான தொற்றுத்தடைக்காப்புச் செயன்முறைகளைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமானதாகக் காணப்படுகின்றன. மேலும் உள்நாட்டு விதை உற்பத்திகளை ஊக்குவிதலானது இலங்கைக்கென மிகப் பொருத்தமானதாகக் காணப்படுகின்ற வேளாண்மை உற்பத்திகளை உருவாக்குவதற்கும் உதவியளிக்கின்ற அதேவேளை, விதை இறக்குமதிகள் ஊடாக நுழையக்கூடிய பீடைகளைக் குறைப்பதற்கு உதவும். பொருளாதாரத்தில் ஆற்றல்மிக்க துறையொன்றாக வேளாண்மைத் துறை முன்னேற்றமடைய வேண்டுமாயின் மேலே கலந்துரையாடப்பட்ட விடயங்களை உள்ளடக்குகின்ற செயற்றிறன்மிக்க தொற்றுத்தடைக்காப்புக் கட்டமைப்பு அவசியமாகும்.

2

முகாமைத்துவத்தின் மீதான பன்னாட்டுச் சான்றிதழ் பாடநெறி' இனை வெற்றிகரமாக நிறைவு செய்தது.

**ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்களின் விளைச்சலையும் உற்பத்தியையும் அதிகரிப்பதற்காக பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகள் முக்கியமாக புதிய பயிரிடல் நடவடிக்கைகளை விரிவாக்குவதனை முக்கிய இலக்காகக் கொண்டிருந்த வேளையில் ஏற்கனவேயுள்ள பயிர்ச்செய்கையின் விளைச்சலையும் மேம்படுத்துவதாக இருந்தது. மேலும், ஏற்றுமதி வேளாண்மைத் துறை 2018இல் பயிர்ச்செய்கையாளர்களுக்காக தொழில்நுட்ப உதவிகளையும் விரிவாக்கப் பணிகளையும் சேர்த்து, உயர்தர பயிரிடல் மூலப்பொருட்களை உதவுதொகை வீதத்தில் தொடர்ந்தும் வழங்கியது. அதேவேளை, பெண்களின் வீட்டுத்தோட்டங்களில் ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்களைப் பயிரிடுவதனூடாக பெண்களின் பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட ஜனசவிய பொருளாதார வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டம் 2018இலும் தொடர்ந்தது.

**இவ்வாண்டுப்பகுதியில் வேளாண்மைத் திணைக்களம் சுயதேவைப் பூர்த்தியை எய்துவதற்கும் அதேவேளை, வேளாண்மை உற்பத்திகள் மீதான காலநிலை மாற்றங்களிலிருந்து தோன்றுகின்ற தாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கும் உள்நாட்டு வேளாண்மையை ஊக்குவிப்பதன் மீதான கவனத்துடன் தொடர்ந்தும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.** 2018 காலப்பகுதியில் புதிய வரட்சிக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய விதை நெல் வகைகள் உள்ளூர் பயிர்ச்செய்கைக்கு விடுவிக்கப்பட்ட வேளையில் ஏனைய களப்பயிர்களின் (வெங்காயம்/பயறு) மூன்று புதிய வகைகளும் வெளியிடப்பட்டன. மேலும், விதை உற்பத்தியை உறுதிப்படுத்தல் மற்றும் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம், பயிர் தொற்றுக்களிலிருந்து பாதுகாக்கும் பணி மற்றும் சிறந்த வேளாண்மை நடைமுறைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் 2018இலும் தொடர்ந்து இடம்பெற்றன. ஆர்வலர்களினால் செய்யப்பட்ட கோரிக்கைகளைப் பரிசீலனையில் கொண்டு வளமாக்கிக் காசுக் கொடைத் திட்டத்திற்குப் பதிலாக 2018 சிறுபோக பருவகாலத்திலிருந்து வளமாக்கி உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தினை மீள அறிமுகப்படுத்துவதற்கான வழிமுறைகளை அரசாங்கம் எடுத்தது. மேலும், ஆய்வுகூடப் பணிகளை வலுப்படுத்துவதற்காக வீட்டுத்தோட்ட பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தில் மத்திய பகுப்பாய்வு ஆய்வுகூடமொன்று நிறுவப்பட்டது. அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் 2018இலும் தொடர்ந்ததுடன் இவ்வாண்டுப்பகுதியில் பதினாறு ஆராய்ச்சிச் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், தொழில்நுட்பத்தினைப் பரப்புவது தொடர்பில் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் விரிவாக்க நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்றன. அதேவேளை, அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைக்கும் நோக்குடன் தெரிவுசெய்யப்பட்ட காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்களுக்காக ஈரப்பதன் இழப்பு வெற்றிட தொழில்நுட்பமொன்றினை அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பவியல் நிறுவகம் அறிமுகப்படுத்தியது. மேலும், பதினைந்து வர்த்தக ரீதியான பழவர்க்கக் கிராமங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் 'பழவர்க்கக் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்' கீழ் ஏற்கனவேயுள்ள பழவர்க்கக்

2

கிராமங்களைப் பேணுவதற்கு வேளாண்மைச் சாதனங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. வேளாண்மைத் திணைக்களம் உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு நிதியியல் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் நெற் பயிர்ச்செய்கைக்காக சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதித் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டமொன்றினை உருவாக்கியது. இச்செயற்றிட்டத்தின் முதற்கட்டம், மாதிரி அடிப்படையில், 2018இல் வவுனியா மாவட்டத்திலும் அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள மகாவலி எச் வலயத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், 2018ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கிணங்க நெல், சோயா, உருளைக்கிழங்கு, சோளம், பெரிய வெங்காயம் மற்றும் மிளகாய் என்பனவற்றிற்கு கட்டாய காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. படைப்புழுவின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பண்ணைகளுக்கான இழப்பீடாக அரசாங்கம் ரூ.250 மில்லியனை ஒதுக்கீடு செய்ததுடன் பாதிக்கப்பட்ட பண்ணைகளுக்கு எக்டேயரொன்றிற்கு ரூ.40,000 செலுத்தப்பட்டது. தொழில்சார் நிபுணத்துவம் மிக்க வேளாண்மையினை ஊக்குவிக்கும் நோக்குடன் உலகின் அதிநவீனத்துவம் வாய்ந்த புத்தாக்கம் மிக்க வேளாண்மைத் தொழில்நுட்பத்தினை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் இலங்கையில் வேளாண்மைத் துறையினை நவீனமயப்படுத்துவதற்கு வேளாண்மை அமைச்சு 'வேளாண்மைத் துறை நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம்' என்பதன் கீழ் நவீன வேளாண்மைக் கண்காட்சியான 'அறுவடை 2018' இனை ஒழுங்கு செய்தது.

**கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் உள்நாட்டு சீனிக் கைத்தொழிலைப் பலப்படுத்தும் நோக்குடன் அதன் ஆராய்ச்சி நடவடிக்கைகளையும் விரிவாக்கப் பணிகளையும் தொடர்ந்தும் மேற்கொண்டது.** சீனித் தொழிற்சாலைகளின் கீழ் நாற்றுமேடைகளை உருவாக்குதல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், கரும்புப் பெருந்தோட்டங்களைக் கண்காணித்தல் என்பன தொடர்ந்தும் இடம்பெற்ற வேளையில் கரும்புச் செய்கையின் மீது முக்கியமாக சேனைப்புழுவின் தாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக கிருமிநாசினிகள் விசுறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, பயிர்ச்செய்கையாளர் மற்றும் ஆலையாளர்களின் வருமானத்தினையும் நலன்புரியினையும் உயர்த்துவதற்காக உள்நாட்டு சீனிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு பொருத்தமான வழிமுறைகளை மேற்கொள்வதற்கு அவர்களை இயலுமைப்படுத்தும் விதத்தில் 'இலங்கை சீனிக் கைத்தொழில் குழு' ஒன்றினை ஏற்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்தது. மேலும், சீனி ஆராய்ச்சி நிறுவனம் வர்த்தக ரீதியான பயிர்ச்செய்கைக்காக உயர்ந்த தாக்குப்பிடிக்கக்கூடியதும் உயர் சீனி விளைச்சலைத் தரக்கூடியதுமான கரும்பு வகைகளை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்தது. வர்த்தக ரீதியான கரும்புப் பயிர்ச்செய்கை இலங்கையில் பல தசாப்தங்களுக்கு முன்னதாகவே ஆரம்பித்த போதும் உள்நாட்டுச் சீனிக் கைத்தொழில் பல அமைப்பியல் பிரச்சனைகளை எதிர்கொண்டு வருகிறது. குறைந்த விளைச்சல், குறைந்த சீனி பெறும் வீதம், அதிகரித்த உற்பத்திச் செலவு, தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் பற்றாக்குறை, அதிகரித்த வளமாக்கி விலைகள், புதிய தொழில்நுட்பங்கள் போதுமானளவில் இல்லாமை, கரும்பு பிழியும் பருவகாலம் குறுகியதாக இருத்தல், போதுமானதற்ற நீர்ப்பாசன வசதி மற்றும் உயர்தர விதைப்பொருட்கள் உரிய நேரத்தில் போதுமானளவில் கிடைக்காமை என்பன உள்நாட்டுச் சீனிக் கைத்தொழிலின் உற்பத்தித்திறனை பாதித்து வருகின்றன. எனவே, உள்நாட்டுச் சீனிக் கைத்தொழிலை ஆற்றல் வாய்ந்த நிலைமைக்குக் கொண்டுவரும் பொருட்டு பொருத்தமான பயிர்ச்செய்கைத் திட்டங்கள், சிறந்த வேளாண்மை நடைமுறைகள் மற்றும் சீனியின் உயர்மட்டத்தினைக் கட்டுப்படுத்துகின்ற காலநிலைக்கு தாக்குபிடிக்கக்கூடிய கரும்பு வகைகளை அறிமுகப்படுத்தல் என்பனவற்றின் மூலம் கரும்பின் கிடைப்பனவினை மேம்படுத்துவது அவசியமானதொன்றாகும். மேலும், 25 ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டிருக்கும் கந்தளாய் சீனித் தொழிற்சாலையை மீளெழுச்சிப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

**வேளாண்மை அமைச்சு, கிராமிய பொருளாதார அலுவல்கள், விலங்குவளர்ப்பு அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி மற்றும் நீரியல் மூலவள அபிவிருத்தி மற்றும் தேசிய மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை என்பன உள்நாட்டு மீன்பிடித் துறைக்கு ஆதரவளிப்பதற்காக பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டன.** 2018ஆம் ஆண்டுப்பகுதியில் அமைச்சு மீன்பிடித் துறையின் நீண்ட காலம் நிலைத்திருக்கும் தன்மையினை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கை நீரில் மீன்களை வாரிச்செல்லும் றோலர் மீன்பிடி, டைனமைட் வெடி மற்றும் தங்கூசி வலைகள் போன்றன பெருமளவு சேதங்களை ஏற்படுத்தி மீன்பிடி முறைகளைத் தொடர்ந்தும் ஊக்கமிழக்கச் செய்து வருகிறது. ஆழ்கடல் மீன்பிடி பகுதிகளின் மீன் உற்பத்தியினை அதிகரிப்பதற்கும் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளை உயர்த்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில், மீன்பிடிப் படகுகளில் நவீன தொழில்நுட்பங்களைப் பொருத்துவதன் மூலம் மீன்பிடிச் சாதனங்கள் வலுப்படுத்தப்பட்டன. 'தியவர திறிய' கடன் திட்டத்தின் கீழ், 2018இல் ரூ.236 மில்லியன் செலவில் 97 நன்மைபெறுநர்களுக்கு நிதியியல் உதவிகள் வழங்கப்பட்டன. ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தான ரூ.32 பில்லியன் நிதியியல் உதவியுடன் வடமாகாணத்திலுள்ள ஆழ்கடல் மீன்பிடிக்கு வசதியளிக்கும் நோக்குடன் மீன்பிடி துறைமுகங்கள், நங்கூரமிடும் துறைகளின் கட்டுமானம் தரமுயர்த்தல் என்பன 2018ஆம் ஆண்டுப்பகுதியில் தொடர்ந்தன. அதேவேளை, அமைச்சு அதன் மீன்பிடித் துறை வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்ததுடன் சட்டத்திற்கு மாறான,

அறிவிக்கப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் எடுத்தது. அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான நோர்வே முகவரிடமிருந்தான நிதியியல் உதவியுடன் கடந்த நான்கு தசாப்தங்களுக்குப் பின்னர் இலங்கையின் கரையோர நீரில் கடற்சூழல் - முறைமை அளவீடு வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அளவீட்டில் கண்டறியும் விடயங்கள் கடல் மூலவளங்களை முகாமைப்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் பயன்படுத்தப்படும். அதேவேளை, தேசிய நீரியல் மூலவள அபிவிருத்தி அதிகாரசபை, பெருந்தோட்டங்களிலும் பெருந்தோட்ட நீர்த்தேக்கங்களில் மீன்வளர்ப்புக்களிலும் மீன் குளங்களை பெருந்தோட்ட சமூகத்தினரின் ஈடுபாட்டுடன் அமைப்பதற்கு உதவும் விதத்தில் சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. பெருந்தோட்ட நீர்த்தேக்கங்களில் மீன்வளர்ப்பு நுவரெலியா, கண்டி மற்றும் புத்தளம் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 401,750 மீன் குஞ்சுகள் பெருந்தோட்ட நீர்த்தேக்கங்களில் விடப்பட்டன. கடல் அட்டை வளர்ப்பினை ஊக்குவித்து அபிவிருத்தி செய்யும் பொருட்டு தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபை கடலட்டை அடைகாப்பகங்களின் கட்டடவாக்க வேலைகளைத் தொடங்கியதுடன் தனியார் அடைகாப்பகங்களில் கடலட்டைகளை இனப்பெருக்கம் செய்வதற்கான நிபுணத்துவத்தையும் வழங்கியது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் குளங்கள் மற்றும் மீன் அடைப்புக்களிலிருந்து 105,000 கடலட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் 196 மெ.தொன்கள் அறுவடை செய்யப்பட்டன. தேசிய நீரியல் மூலவள அபிவிருத்தி அதிகாரசபை வடமாகாணத்தில் சமூகங்களின் பங்கேற்புடன் கடற்பாசி பண்ணைக்கும் வசதியளித்தது. மேலும், தேசிய நீரியல் மூலவள அபிவிருத்தி அதிகாரசபை இரண்டு தனியார் அடைகாப்பு இடங்களில் சேற்று நண்டுகளின் இனப்பெருக்கத்திற்கு நிபுணத்துவ உதவிகளை வழங்கியதுடன் 89,350 நண்டுகள் உற்பத்தி செய்யப்பட்டன. உள்நாட்டு நீரியல் மீன்வளர்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு நீரியல் மீன்வளர்ப்பிற்கான வெளிநாட்டு உள்நாட்டு முதலீடுகளைக் கவர்வதற்குமாக தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபை 'ஜலாய்ஜிபி உதான' நீரியல் வள மாநாடும் முதலீட்டாளர் ஆய்வரங்கும் ஆய்விற்குரிய காலப்பகுதியில் ஒழுங்கு செய்யப்பட்டன.

**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் விலங்குவளர்ப்புத் துறைக்கு ஆதரவளிப்பதற்காக பல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.** 2018ஆம் ஆண்டுப்பகுதியில் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், விலங்கு வளர்ப்புத் துறை முதன்மைத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு, பாற்பண்ணைத் துறை அபிவிருத்திக்கான அரசாங்க கொள்கைக் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் அவற்றின் நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. விலங்குவளர்ப்பு (பண்ணை) இனப்பெருக்க செயற்றிட்டத்தின் கீழ், உள்நாட்டுப் பால் உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு நாடு முழுவதும் செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையங்களை நடைமுறைப்படுத்தல் செயற்கை முறை சினப்படுத்தல் நிலையங்களை வலுப்படுத்தல் மற்றும் பேணுதல், இயற்கையான இனப்பெருக்கத்திற்காக எருதுக்கன்றுகளின் இனப்பெருக்க ஆற்றலைப் பரீட்சித்தல், மேய்ச்சல் நிலங்களின் அபிவிருத்தி என்பன மேற்கொள்ளப்பட்டன. கன்னிப் பசுக்கன்றுகளின் வளர்ப்புச் செயற்றிட்டத்தினூடாக செயற்கை முறையில் பிறந்த பசுக்கன்றுகளுக்கு உணவூட்டி அதனை வளர்ப்பதற்கு பண்ணையாளர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. இச்செயற்றிட்டத்தின் கீழ் மொத்தமாக, 25,602 கன்றுக்குட்டிகள் 2018இல் பதிவுசெய்யப்பட்டன. விலங்குகளுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டதுடன் மாட்டுவாய் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, நாடு முழுவதும் ஏழு விலங்கு மருத்துவ நிலையங்கள் நிறுவப்பட்டதுடன் இரண்டு புதிய விலங்கு மருத்துவப் பணி அலுவலகங்கள் நுவரெலியா மாவட்டத்தில் பூண்டுலோயாவிலும் பதுளை மாவட்டத்திலுள்ள ஹலிஎலவிலும் 2018இல் ஆரம்பிக்கப்பட்டன. உயர்ந்த பறவைக் காய்ச்சல் நோயிக்கு உட்பட்ட விலங்குகளை தன்மைப்படுத்தி அவற்றைக் கண்காணிக்கும் நடவடிக்கைகள் 2018இலும் தொடர்ந்தன. மேலும், தேசிய விலங்குவளர்ப்பு அபிவிருத்திச் சபை ஒட்டுமொத்த பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக 2018இல் தெங்கு முக்கோணப் பகுதியில் ஐரோப்பிய மாட்டு வளர்ப்பினை அறிமுகப்படுத்தியது. பொலனறுவை, திகன மற்றும் அம்பேவல ஆகிய இடங்களில் அமைந்துள்ள மில்கோ பிறைவேற் லிமிடெட்டினால் முகாமைப்படுத்தப்படும் தொழிற்சாலைகளின் நவீனமயப்படுத்தல் 2018இல் நிறைவடைந்தது. இது உள்நாட்டு பாற்பண்ணை உற்பத்தியில் உயர்ந்த பதனிடல் இயலளவிற்கு உதவும். விலங்குவளர்ப்பு வேளாண்மையாளர்களுக்கான தேவையினைப் பூர்த்திசெய்யும் நிறுவனங்களை மேம்படுத்தல், அரச விலங்கு மருத்துவ வலையமைப்பினை பலப்படுத்தல் மற்றும் விலங்குவளர்ப்பு பண்ணை சமூகத்தினருக்கான பணி வழங்கல் முறைமையை மேம்படுத்தல் என்பன எதிர்காலத்தில் விலங்கு வளர்ப்புத் துறையினை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கைத்தொழில்

**பெறுமதிகூட்டப்பட்ட கைத்தொழில் நடவடிக்கைகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 4.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 0.9 சதவீதத்தினால் சிறிதளவில் வளர்ச்சியடைந்தன.** கைத்தொழில் நடவடிக்கைகளில் ஏற்பட்ட இம்மெதுவான போக்கிற்கு கைத்தொழில் நடவடிக்கைகளில் 35.1 சதவீதம் கொண்ட முக்கிய பங்கிற்கு வகைகூறும் கட்டடவாக்கம், மற்றும் சுரங்கமகழ்தல் என்பனவற்றில் ஏற்பட்ட சுருக்கமே முக்கிய காரணமாகும். அதேநேரம், 2018இல் தயாரிப்பு நடவடிக்கைகள் மிதமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. ஏனைய கைத்தொழில் நடவடிக்கைகளைப் பரிசீலனையில்

கொள்கையில், மின்வலுவுடன் தொடர்பான நடவடிக்கைகள், வடிகான்கள், கழிவுப்பொருட்களைக் கையாளுதல் மற்றும் அகற்றும் நடவடிக்கைகள், நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் இவ்வாண்டுப்பகுதியில் சாதகமான வளர்ச்சிக்கு தொடர்ந்தும் பங்களித்தன.

## சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்


**சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 9.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 5.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. கட்டடவாக்க நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட குறைவடைந்த செயலாற்றம் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல நடவடிக்கைகளின் வளர்ச்சியை மோசமாகப் பாதித்தன.** மேலும், துறைமுக நகர அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் நிலமீட்பு இறுதிக்கட்டத்தினை அடைந்திருப்பதன் காரணமாக மணல் அகழ்வு நடவடிக்கைகளில் ஏற்பட்ட கணிசமாக வீழ்ச்சியும் இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்திருக்கிறது. மேலும், கனிப்பொருள் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 18.8 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2018இல் 5.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இரத்தினக்கல், வைரம் மற்றும் ஆபரண ஏற்றுமதி அளவுச் சுட்டெண்ணும் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 0.3 சதவீதம் கொண்ட சரிவுடன் ஒப்பிடுகையில் 2018இல் 13.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. எனினும், பொசுபேற்று மற்றும் கனிப்பொருள் மணல் குறிப்பாக, இல்மனைற் மற்றும் ரூரைல் உற்பத்திகள் இவ்வாண்டுப்பகுதியில் வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

## தயாரிப்பு

**பெறுமதிகூட்டப்பட்ட தயாரிப்பு நடவடிக்கைகள், 2017இல் பதிவுசெய்யப்பட்ட 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 3.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வாண்டுப்பகுதியில் வேளாண்மை நடவடிக்கைகளில் காணப்பட்ட கணிசமான மீட்சியிலிருந்தான நன்மைகளினால் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு நடவடிக்கைகளில் காணப்பட்ட வளர்ச்சியின் முக்கிய பங்களிப்பின் காரணமாக 2017இல் பதிவுசெய்யப்பட்ட 0.9 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 5.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மேலும், புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோலுடன் தொடர்பான உற்பத்திகளின் தயாரிப்பும் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 3.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 3.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு தயாரிப்பு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சி பெருமளவிற்கு உதவியாக அமைந்தது. எனினும், கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், தளபாடத் தயாரிப்பு, இரசாயன உற்பத்திகளின் தயாரிப்பு மற்றும் அடிப்படை மருந்தாக்கல்

வரைபடம் 2.5

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (அ)**




(அ) கொ.மு.சுட்டெண்ணானது புலனுணர்வு அளவீட்டு அடிப்படையிலான கடந்த மாதத்துடன் ஒப்பிட்டு மாதாந்த அபிவிருத்திகளை வெளிக்காட்டும் விதத்தில் அமைந்தது ஆகும். இந்த வியாபித்தல் சுட்டெண்ணானது 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியினை கொண்டிருப்பதோடு பொதுவான நடுநிலையான 50 இற்கு மேலான சுட்டெண் பெறுமதியானது பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு விரிவாக்கத்தைக் குறிக்கும் வேளையில் 50 இற்கு கீழான சுட்டெண் பெறுமதியானது சுருக்கத்தினையும் குறிக்கின்றது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

உற்பத்திகள், தாள் உற்பத்திகளின் தயாரிப்பு, ஊடக உற்பத்திகளின் அச்சிடல், மீள்தயாரிப்பு மற்றும் பொறி மற்றும் கருவிகளின் தயாரிப்பு என்பனவற்றின் எதிர்க்கணியச் செயலாற்றம் தயாரிப்பு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியை தளர்வுறச் செய்தது. தயாரிப்புத் துறையின் அனைத்து ஏனைய துணை நடவடிக்கைகளும் ஒட்டுமொத்த வளர்ச்சி பதிவுசெய்யப்படுவதற்கு சாதகமாகப் பங்களித்தது. தயாரிப்பு நடவடிக்கைகளுடன் தொடர்பான குறிகாட்டிகளைப் பரிசீலனையில் கொள்கையில் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (கை.உ.சுட்டெண் 2015 = 100) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் தயாரிப்பு நடவடிக்கைகளின் விரிவாக்கம் மெதுவான வேகத்திலேனும் இடம்பெற்றமையை எடுத்துக்காட்டியது. அதேவேளை, இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட தயரிப்பு நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் மாதாந்த அடிப்படையில் இவ்வாண்டுப்பகுதியில் தயாரிப்புத் துறையில் ஒட்டுமொத்த விரிவாக்கமொன்றினை எடுத்துக்காட்டியது.

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

**2018இல் தயாரிப்புத் துறை சிறிதளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின்படி[2], 2018இல் ஒட்டுமொத்தத் தயாரிப்புத் துறை முன்னைய ஆண்டின் 2.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.8 சதவீதத்தினால் விரிவடைந்தது.** கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் உணவு உற்பத்திகளின் தயாரிப்பு, குடிபானங்கள், அணியும் ஆடைகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் புடவைகள் என்பனவற்றை உள்ளடக்கிய கைத்தொழில்

2 கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் ஆனது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் அடியாண்டு 2015ஆக காணப்படுவதுடன் பன்னாட்டு நியம கைத்தொழில் வகைப்படுத்தலின் மீள்திருத்தம் 4இன் அடிப்படையில் வகைபடுத்தப்பட்டு தொகுக்கப்படுகின்றது.

அட்டவணை 2.9
**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்**
**2015=100**

| | பிரிவு | 2017 | 2018 (அ) | மாற்றம் (%) 2016/17 | மாற்றம் (%) 2017/18 (அ) |
|---|---|---|---|---|---|
| 1 | உணவு உற்பத்திகள் (35.2%) | 105.0 | 106.1 | 3.3 | 1.0 |
| 2 | குடிபானங்கள் (3.8%) | 91.5 | 99.8 | -11.7 | 9.1 |
| 3 | புகையிலை உற்பத்திகள் (1.7%) | 106.3 | 92.7 | 1.2 | -12.9 |
| 4 | புடவை (3.3%) | 106.4 | 110.2 | 2.3 | 3.6 |
| 5 | அணியும் ஆடைகள (19.8%) | 110.7 | 115.1 | 4.7 | 3.9 |
| 6 | தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகள் (0.3%) | 111.9 | 117.0 | 5.6 | 4.5 |
| 7 | தளபாடம் தவிர்ந்த மரம் மற்றும் மரசார் உற்பத்திகள், அடைப்பான்கள் தயாரித்தல், வைக்கோல் பொருட்கள் மற்றும் பின்னல் பொருட்கள் தயாரிப்பு (0.2%) | 93.7 | 98.6 | -5.5 | 5.3 |
| 8 | தாள் மற்றும் தாள் உற்பத்திகள் (1.7%) | 108.4 | 86.8 | -2.3 | -19.9 |
| 9 | அச்சுப் பதிப்பு மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு (1.4%) | 106.9 | 106.5 | 3.2 | -0.4 |
| 10 | சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் (7.4%) | 94.3 | 97.5 | -4.8 | 3.4 |
| 11 | இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள(4.1%) | 96.6 | 92.7 | -7.2 | -4.1 |
| 12 | மருந்தாக்கற் பொருட்கள், மருத்துவ இரசாயனவியல் மற்றும் தாவரவியல் உற்பத்திகள (0.1%) | 111.1 | 100.1 | 1.8 | -9.9 |
| 13 | இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் (5.7%) | 108.0 | 112.0 | 4.2 | 3.7 |
| 14 | ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் (7.8%) | 111.5 | 108.9 | 6.5 | -2.4 |
| 15 | அடிப்படை உலோகங்கள் (2.4%) | 120.8 | 128.3 | 11.7 | 6.2 |
| 16 | பொறி மற்றும் இயந்திரம் தவிர்ந்த உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (1.3%) | 115.8 | 125.4 | 16.7 | 8.3 |
| 17 | இலத்திரனியல் சாதனங்கள் (2.0%) | 99.9 | 81.8 | 1.7 | -18.1 |
| 18 | பொறி மற்றும் இயந்திரங்களின் உற்பத்தி (0.7%) | 112.4 | 102.0 | 5.4 | -9.2 |
| 19 | தளபாட உற்பத்தி (0.8%) | 105.2 | 90.6 | -3.3 | -13.9 |
| 20 | ஏனைய உற்பத்திகள் (0.3%) | 98.4 | 95.1 | -3.4 | -3.4 |
| | **கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்** | **105.8** | **106.7** | **2.5** | **0.8** |

(அ) திருத்தப்பட்டது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

துணைச் சுட்டெண்ணின் பல பாரிய துணைத் துறைகள் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் சாதகமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. எனினும், புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு, தாள் மற்றும் தாள் உற்பத்திகள், இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள், மின்னியல் சாதனங்கள் மற்றும் தளபாட உற்பத்திகள் என்பனவற்றினை உள்ளடக்கிய கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் சில சிறிய துணைத் துறைகள் ஆய்விற்குரிய காலப்பகுதியில் உற்பத்தியில் வீழ்ச்சியைக் காட்டின.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் மூன்றிலொரு பங்கிற்கு மேல் வகைகூறும் உணவு உற்பத்திகளின் தயாரிப்புத் துணைத் துறை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 1.0 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைக் காட்டியது.** உணவு உற்பத்திகள் துணைத் துறையின் விரிவாக்கத்திற்கு கோதுமை மா, விசுக்கோத்து, தகரத்திலடைக்கப்பட்ட மீன், கருந்தேயிலை மற்றும் அரிசி என்பனவற்றின் உயர்ந்த உற்பத்திகள் உதவியாக அமைந்தன. உணவுத் தயாரிப்பு நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்கு வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட சாதகமான அபிவிருத்தியும் உள்நாட்டுக் கேள்வியும் உதவியாக அமைந்தன. அதேவேளை, குடிபான துணைத் துறை 2017இல் பதிவுசெய்யப்பட்ட 11.7 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 9.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்திருக்கிறது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் வன்மை மற்றும் மென்மையான பியர் மீதான கலால் தீர்வைக் குறைக்கப்பட்டமையும் மேம்பட்ட இயலளவுப் பயன்பாடும் அதிகரித்த உற்பத்திக்கு உதவியாக அமைந்தன.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் இரண்டாவது மிகப் பெரிய துணைத் துறையான அணியும் ஆடைகள் தயாரிப்பு 2017ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 4.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 3.9 சதவீதம்** கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இவ்வளர்ச்சிக்கு 2017இல் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை (ஜிஎஸ்பி+) திட்டம் மீளக் கிடைக்கப்பெற்றமையின் சாதகமான தாக்கம் பகுதியளவிற்கு உதவியாக அமைந்தது. அதேவேளை, புடவைகளின் தயாரிப்பு முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 2.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 3.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. அணியும் ஆடைகள் மற்றும் புடவைகள் துணைத் துறைகள் இரண்டும் சேர்ந்து 2018இல் தயாரிப்புத் துறையில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வளர்ச்சியில் ஏறத்தாழ 78 சதவீதத்திற்குப் பங்களித்தன. உள்நாட்டு ஆடை மற்றும் புடவைக் கைத்தொழில்கள் மேலும் விரிவடைவதற்கான உள்ளார்ந்த வளத்தைக் கொண்டிருந்த போதும் பொருளியல் சிக்கனமற்ற தன்மை, உட்கட்டமைப்புத் தடைகள் மற்றும் உயர்ந்த உள்ளீட்டுச் செலவுகள் என்பன இக்கைத்தொழிலின் போட்டிப் பலத்தினை மோசமாகப் பாதிக்கின்றன. மேலும், இப்பிராந்தியத்தில் தோற்றம் பெற்றுவரும் ஒப்பீட்டு ரீதியில் புதிய புடவைத் தயாரிப்பு மையங்கள் இயக்கவாற்றல்மிக்க உலகளாவிய சந்தையில் இலங்கையின் நிலைமைக்கு தொடர்ச்சியாக சவால்விடுப்பனவாக இருக்கின்றன. ஜிஎஸ்பி+ திட்டம் மீளக்கிடைத்தமை அண்மைக் காலத்தில் ஏற்றுமதிக்

வரைபடம் 2.6
**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**





*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

கேள்விக்கு ஆதரவாக அமைந்த போதும் ஆடைக் கைத்தொழில் அத்தகைய திட்டங்களில் தொடர்ச்சியாக தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கு வலுவான வழிமுறைகளை எடுப்பது ஆடைக் கைத்தொழில் வெளிநாட்டுக் காரணிகளினால் பாதிக்கப்படக்கூடிய தன்மையை எதிர்த்து நிற்பதனை இயலுமைப்படுத்தும்.

**ஏனைய உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகளின் தயாரிப்புத் துணைத் துறை 2017ஆம் ஆண்டின் 6.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் அண்டுப்பகுதியில் 2.4 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** 2018ஆம் ஆண்டுப்பகுதியில் புறோசலின் மேசைப்பொருட்கள், கூரை ஓடுகள், சிமெந்து மற்றும் நெழிந்த கூரைத்தகடுகள் என்பனவற்றின் தயாரிப்பு முன்னைய காலத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. கண்ணாடி வலுச்செறிவுமிக்க கைத்தொழில் என்பதனால் குறிப்பாக திரவப் பெற்றோலிய வாயு, உலை எண்ணெய் என்பனவற்றின் உயர்வடைந்து செல்லும் வலுச் செலவு குடிபானங்கள், குடிவகைப் பிரிவுகளின் மீதான புதிய வரிகளும் தீர்வைகளும் அறிமுகப்படுத்தப்பட்டமையுடன் சேர்ந்த 2018இல் கண்ணாடி உற்பத்தியினை மோசமாகப் பாதித்தன. அதேவேளை, கட்டடவாக்கத்துடன் தொடர்பான மூலப்பொருட்களின் கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி 2018ஆம் ஆண்டுப்பகுதியில் கட்டடவாக்க நடவடிக்கைகளின் மிதமான தன்மைக்குக் காரணமாக அமைந்தன. மேலும், உயர்ந்த உள்நாட்டுச் சந்தை வட்டி வீதங்கள் மற்றும் அதிகரித்த இறக்குமதி செலவு ஐ.அ.டொலரிற்கெதிராக ரூபா தேய்வடைந்தமையின் காரணமாக சூளைக்கற்களின் அதிகரித்த உற்பத்திச் செலவு என்பனவற்றின் விளைவாக 2018இல் வீட்டலகுத் துறைகளிலிருந்தான சிமெந்திற்கான குறைந்த கேள்வியைத் தோற்றுவித்தது.

**2015இலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளாகச் சுருக்கமடைந்த கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் உற்பத்தி 2018இல் விரிவொன்றினைப் பதிவுசெய்தது.** இதன்படி, தன்னியக்க டீசல், உலை எண்ணெய் மற்றும் பிற்றுமின் என்பனவற்றின் அதிகரித்த உற்பத்தியின் காரணமாக கரியின் தயாரிப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் துணைத் துறையின் தயாரிப்பு 2017இல் காணப்பட்ட 4.8 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 3.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. 2017 யூன் காலப்பகுதியில் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு 2018இன் தொடக்கப் பகுதியில் புத்தாக்கம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து உற்பத்தியில் விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்தது. இதன்படி, சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பிலிருந்து ஒட்டுமொத்த வெளியீடு உள்நாட்டுக் கேள்வியில் ஏறத்தாழ 30-35 சதவீதத்தினைப் பூர்த்திசெய்யப் போதுமானதாக இருந்த வேளையில், எஞ்சிய கேள்வி இறக்குமதிகளினூடாகப் பூர்த்தி செய்யப்பட்டது.

வரைபடம் 2.7
2018இல் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் முக்கிய பிரிவுகளின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு



*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகளின் தயாரிப்பு பன்னாட்டுச் சந்தைகளில் இறப்பரின் தாழ்ந்த விலைகள் மற்றும் உள்நாட்டு இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றிற்கிடையிலும் அதன் வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடர்ந்தது.** இத்துணைத் துறை 2017இல் பதிவுசெய்யப்பட்ட 4.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 3.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இறப்பர் மற்றும் பிளாத்திக்குத் துணைத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு ஏற்றுமதிக்கான டயர் மற்றும் தட்டை இறப்பரின் அதிகரித்த உற்பத்திகளே முக்கிய காரணமாக அமைந்தன. இலங்கை திண்ம டயர் கைத்தொழில் குறிப்பிடத்தக்களவு உள்ளார்ந்த வளர்ச்சியைக் கொண்டிருந்த போதும் உள்நாட்டு மூலப்பொருட்களின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி இத்துறையின் விரிவாக்கத்தினை மட்டுப்படுத்தியது.

**இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் மற்றும் புகையிலை உற்பத்திகள் என்பனவற்றின் தயாரிப்புக்களை உள்ளடக்கிய கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணிலுள்ள ஏனைய துணைத் துறைகள் 2018இல் வீழ்ச்சியைக் காட்டின.** இதன்படி, இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள் தயாரிப்புத் துணைத் துறை 2017ஆம் ஆண்டில் காணப்பட்ட 7.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கெதிராக 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 4.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு வளமாக்கி மற்றும் சுண்ணாம்பு வகைகளின் குறைவான உற்பத்தியே முக்கிய காரணமாகும். அதேவேளை, அடிப்படை உலோகத் தயாரிப்பு மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் தயாரிப்பு என்பன 2017இன் முறையே 11.7 சதவீதம் மற்றும் 16.7 சதவீதம் கொண்ட அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 2018இல் முறையே 6.2 சதவீதத்தினாலும் 8.3 சதவீதத்தினாலும் அதிகரித்தன. ஈயம் மற்றும் அலுமினியச்

சட்டங்களின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு அடிப்படை உலோகங்களின் விரிவாக்கத்திற்குப் பங்களித்த வேளையில் அலுமினியச் சட்டங்கள், உருக்குத் தளபாடங்கள் மற்றும் உருக்கு உற்பத்திகளின் வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு, உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் தயாரிப்பின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தது. அதேவேளை, புகையிலை உற்பத்திகளின் உற்பத்தி 2017இன் 1.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 12.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு அதிகரித்த சிகரெட் விலைகளே பெருமளவிற்குக் காரணமாகும். புகையிலை உற்பத்திகளின் விளம்பரப்படுத்தல் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் புகையிலையுடன் தொடர்பான சுகாதாரப் பிரச்சனைகளின் பெருமளவு விழிப்புணர்வு என்பன சிகரெட்டின் கேள்வி குறைவடைவதற்குப் பங்களித்தது. அதேவேளை, தோல் மற்றும் அதனுடன் தொடர்பான உற்பத்திகளின் தயாரிப்பு, தளபாடங்கள் தவிர்ந்த மர உற்பத்திகளின் தயாரிப்பு என்பன ஒன்றுசேர்ந்து கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் 0.5 சதவீதத்திற்கு வகைகூறி 2018ஆம் ஆண்டுப்பகுதியின் முறையே 4.5 சதவீதத்தினாலும் 5.3 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. முடிவடைந்த தோலின் அதிகரித்த உற்பத்தி முன்னைய வகையின் சாதகமான மேம்பாட்டிற்குப் பங்களித்ததுடன் பின்னைய வகை புகைவண்டி கிடைக்கட்டைகளின் உற்பத்தி, அரிவு ஆலை மற்றும் திட்டமிடல் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக வளர்ச்சியடைந்தது. அதேவேளை, தாள் மற்றும் தாள் உற்பத்திகள் (-19.9 சதவீதம்), அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள் மற்றும் மருந்தாக்கல் தயாரிப்புக்கள் (-9.9 சதவீதம்), மின்னியல் சாதனங்கள் (-18.1 சதவீதம்), தளபாடங்கள் (-13.9 சதவீதம்) ஆகிய தயாரிப்புத் துணைத் துறைகளின் உற்பத்தி அளவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் வீழ்ச்சியடைந்தன.

**உள்நாட்டுக் கேள்வி, தயாரிப்புத் துறையினை தூண்டியிருக்கின்ற வேளையில் முன்னோக்கிப் பார்க்கையில் உலகளாவிய கேள்வி நாட்டின் தயாரிப்புத் துறையின் விரிவாக்கத்தில் பாரிய வகிபாகமொன்றினை ஆற்றும்.** எனவே, இலங்கையின் தயாரிப்புக்களின் ஏற்றுமதிகள் நீடித்த நிலையானதொரு அடிப்படையில் போட்டித்தன்மை கொண்டனவாக இருக்குமென்பதனை உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும். அதிகளவான உயர்ந்த தொழில்நுட்பத் துறைகள் மற்றும் உற்பத்திகளின் வர்த்தக நாமம், வர்த்தகத்தில் முனைப்பான பங்கினைக் கொண்டிருக்கின்றமை என்பனவற்றின் காரணமாக உலகளாவிய வர்த்தகச் சூழல் மிகச் சவாலுக்குரியதொன்றாக மாறி வருவதனால் புடவைகள், இறப்பர் மற்றும் தோல் உற்பத்திகளை உள்ளடக்கிய பாரம்பரிய துறைகளுக்கு ஆதரவளிப்பது நாட்டிற்கு அவசியமானதொன்றாகும். தோற்றம் பெற்றுவரும் துறைகள் எதிர்காலத்தில் உலகளாவிய வர்த்தகத்தில் முனைப்பானதொன்றாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## கைத்தொழில் கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

**கைத்தொழில் துறையின் நடவடிக்கைகளை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்ட நிறுவன ரீதியான ஆதரவு 2018ஆம் ஆண்டுப்பகுதியிலும் தொடர்ந்தது.** கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, அபிவிருத்தி உபாயம் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சு என்பன தயாரிப்புத் துறையினை மேம்படுத்தும் நோக்குடன் பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டது. கைத்தொழில் வர்த்தக அமைச்சின் விதந்துரைப்புக்களின் மீது அரசாங்கம் தயாரிப்புக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படுகின்ற உயர் தொழில்நுட்பப் பொறிகளின் இறக்குமதிக்காக துறைமுகங்கள் மற்றும் வானூர்தி அபிவிருத்தித் தீர்வை மீது 75 சதவீத தளத்தல்களை வழங்கியது. அதேவேளை, கைத்தொழில் வர்த்தக அமைச்சு இந்தியாவின் முதலீட்டுடன் வடமாகாணத்திலுள்ள அச்சுவேலி கைத்தொழில் வலையத்தை விரிவாக்குவதற்கு எதிர்பார்க்கிறது. கைத்தொழில் வர்த்தக அமைச்சு உந்து ஊர்திகள் தயாரிப்பு, பொருத்தல் மற்றும் கூறுகள் தயாரிப்புக் கைத்தொழில்கள் என்பனவற்றிற்கான தொழிற்பாட்டு நியமங்களைத் தயாரிப்பதிலும் இத்துறைக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதிலும் ஈடுபட்டிருந்தது. அதேவேளை, 2018 மேயில் இலங்கை முதலீட்டுச் சபையினால் தனியொரு கூரையின் கீழான முதலீட்டு வசதிப்படுத்தல் செயலணியொன்றிற்கான நுழைவாயிலொன்று ஏற்படுத்தப்பட்டது. முதலீட்டுச் சபை 2018ஆம் ஆண்டுப்பகுதியில் பின்கிரிய, மாவத்தகம, மிலேனியா மற்றும் சார்லி மவுண்ட் எஸ்ரேற் உட்பட ஏற்றுமதிப் பதனிடல் வலயங்களில் அபிவிருத்தி வேலைகளைத் தொடங்கியது. தொடர்பான ஆர்வலர்களின் ஒத்தழைப்புடன் முதலீட்டுச் சபை 'தேர்ச்சி அபிவிருத்திச் செயலணிக் குழு' ஒன்றனை நிறுவியது. இது தொழிற்சாலை வேலையாட்களின் சமூக ஏற்பினை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொள்கின்ற வேளையில் தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சுடன் சேர்ந்த தீவு முழுவதும் வேலை வாய்ப்புச் சந்தைகளை நடாத்தியது. அதேவேளை, தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு தொழில்தருநர்களின் கோரிக்கையின் பேரில் தனியார் துறை தயாரிப்புக் கைத்தொழில்களுக்காக ஐந்து நாள் வேலை வாரத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஓராண்டிற்கு நிர்வாக ரீதியான தளர்த்தல்களை வழங்கியது. இம்முன்னெடுப்புக்கள் தொழிலாளர் சமச்சீரான வாழ்க்கையை முன்னேற்ற உதவுமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் தொழில்தருநர்களினால் உறப்படுகின்ற மேலதிகச் செலவுகளையும் குறைக்கிறது.

**ஏனைய பல அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள், கைத்தொழில் சம்மேளனங்கள் மற்றும் தொடர்பான சங்கங்கள் என்பன தயாரிப்புத் துறைக்கு உதவியளிப்பதற்காகவும் கொள்கை வடிவமைப்பிற்கு ஆதரவளிப்பதற்காகவும் பல்வேறு முன்னெடுப்புக்களையும் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தின.** வியாபார சமூகத்தினரின் நன்மைக்காக வர்த்தக சம்மேளனம்

2

2

பல்வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இக்காலப்பகுதியில் பல ஆய்வரங்குகளையும் செயலமர்வுகளையும் நடத்தியது. மேலும், தேசிய வர்த்தக சம்மேளனம் இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதுவர்களுடன் 'தூதுவர்களைச் சந்தியுங்கள்"' என்ற பெயரில் நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடத்தியது. இதன் மூலம் வியாபாரச் சமூகம் அந்நாடுகளிலுள்ள வர்த்தக வசதிகள் தொடர்பான கூடுதலான தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவும் அவர்களது வியாபாரத்தினை மேம்படுத்தக்கூடியவர்களாகவுமிருந்தனர். அதேவேளை, தேசிய வரவு செலவுத்திட்டம் 2018இல் அறிவிக்கப்பட்டவாறு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை சந்தை வசதிகளை அணுகுவதற்கு ஆதரவளிக்கின்ற விதத்தில் 2018 யூலையில் நிகழ்ச்சித்திட்டமொன்றினைத் தொடங்கியது. இது, நவீனமயப்படுத்தல் உற்பத்திகள் மற்றும் பணிகளைத் தரமுயர்த்தல் என்பனவூடாக தமது சந்தைப்படுத்தலை விரிவாக்கிக் கொள்வதற்கும் இலங்கையின் மேம்பட்ட பெறுமதிகூட்டப்பட்ட உற்பத்திகள் மற்றும் பணிகளை மேம்படுத்துவதனூடாக சந்தையை அணுகும் தன்மையினை அதிகரித்துக் கொள்ளும் ஆர்வமுடைய தொழில்முயற்சிகளை ஊக்குவிக்க எதிர்பார்க்கிறது.

**தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, உள்நாட்டு தயாரிப்புக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு உதவுவதற்காக கொள்கைகளையும் திட்டங்களையும் வடிவமைப்பதில் தொடர்ந்தும் ஈடுபட்டது.** தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கட்டமைப்பில் தரப்பட்டுள்ள கொள்கை விதந்துரைப்புக்களின் அடிப்படையாகக் கொண்டு அடிப்படை விஞ்ஞான ஆராய்ச்சி மீதான கொள்கை வரைவொன்று 2018இல் நிறைவு செய்யப்பட்டது. இக்கொள்கையானது நாட்டின் அடிப்படை விஞ்ஞான ஆராய்ச்சி மீது உரிய அங்கீகாரத்தினையும் வலியுறுத்தல்களையும் வழங்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதேவேளை, விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கட்டமைப்பின் கொள்கை விதந்துரைப்புக்களின் அடிப்படையில் மரபுத்தொகுதி நிலையங்களையும் தேசிய மரபுத்தொகுதி தரவுக் களஞ்சியங்கள் மீது தேசிய கொள்கை ஆவணமொன்றினைத் தயாரித்துள்ளது. தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை ஆணைக்குழு தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக் கொள்கையினை இற்றைப்படுத்தும் வேளையில் ஈடுபட்டிருக்கின்ற வேளையில் விஞ்ஞான, தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு கனிமத்தினை அடிப்படையாகக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கைத்தொழில்களுக்குத் தூண்டுதலளிக்கும் சூழலை உருவாக்குவதற்காக தேசிய கனிம கொள்கையினை வடிவமைப்பதற்காக தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு உள்ளீடுகளை வழங்கியது. அதேவேளை, விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக பல முன்முயற்சிகளையும் மேற்கொண்டது. இதற்கமைய, விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சு தொழில்முயற்சியாளர்களினதும் தொழில்முயற்சியாளர்களாக வரக்கூடியவர்களினதும் தொழில்நுட்பத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்யும் பொருட்டு விதாதா மூலவள நிலையங்களினூடாக நாடு முழுவதும் தொழில்நுட்ப மாற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றையும் நடத்தியது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் இலத்திரனியல், கணனி, உணவுத் தொழில்நுட்ப பிரிவு, வேளாண்மை, சுற்றாடல், வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் மற்றும் ஏனைய துறைகளிலுள்ள 140,606 நன்மைபெறுநர்களுக்காக ஏறத்தாழ 3,696 தொழில்நுட்ப மாற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. தொழில்நுட்ப மாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ், தொழில்முயற்சியாளர்களுடன் தொடர்பான தொழில்நுட்பவியல் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் நிறுவனங்களிடையேயான வியாபார ஒத்துழைப்பதற்காக மேலும் உதவிகளை வழங்குவதற்காகவும் விதாத தொழில்நுட்ப உதவி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அதேவேளை, விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சு கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனம் மற்றும் இலங்கை தர நிறுவனம் என்பனவற்றின் ஒத்துழைப்புடன், சந்தைக்குத் தரமான உற்பத்திகள் சென்றடைவதனை உறுதிப்படுத்துவதற்காக உணவு உற்பத்திகள் தொடர்பில் பரீட்சிப்பு அறிக்கைகளையும் தரச்சான்றிதழ்களையும் வழங்குகிறது. அதேவேளை, இலங்கை நனோ தொழில்நுட்பவியல் நிறுவனம் வேளாண்மை, ஆடை, கனிப்பொருள் பணிகள் மற்றும் நனோ மருந்து என்பன உள்ளிட்ட முக்கிய துறைகளின் ஆராய்ச்சி மீது அதன் வலியுறுத்தல்களைத் தொடர்ந்தும் வழங்கியது. 2018ஆம் ஆண்டுப்பகுதியில் தேசிய விஞ்ஞான நிறுவனம் புதிய உற்பத்தி அபிவிருத்தி முன்னெடுப்புக்களுக்கு வசதியளிக்கின்ற விதத்தில் விஞ்ஞானிகளுக்குப் பல புலமைப்பரிசில்களையும் ஆராய்ச்சிக் கொடைகளையும் தொடர்ந்தும் வழங்குகிறது.

**கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனம் புதிய உற்பத்தி அபிவிருத்தி மற்றும் செயன்முறைப் புத்தாக்கம் என்பனவற்றில் ஈடுபட்டிருந்த வேளையில், தொழில்நுட்பவியல் மேம்பாடுகளினூடாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கும் ஆதரவளிக்கிறது.** இலங்கை தொழில்முயற்சியாளர்களினால் தயாரிக்கப்பட்டு சந்தைப்படுத்தக்கூடிய உற்பத்திகளின் அபிவிருத்திக்காக தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனம் தொழில்நுட்பவியல் மாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது. தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனம் சிறந்த தயாரிப்பு நடைமுறைகளுடனும் பன்னாட்டு தரமிடல் அமைப்பு நியமங்களுடனும் இணங்கிச் செல்லும் விதத்தில் பொருத்தமான பொறிகளைப் பொருத்துவதனை அறிமுகப்படுத்துவதன் மூலம் உணவுக் கைத்தொழில்களைத் தரமுயர்த்துவதன் மீது அதன் நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொண்டது. அதேவேளை, ஏற்றுமதி வருவாய்களை அதிகரிக்கின்ற நோக்குடன், பொருத்தமான அறுவடைக்குப் பின்னரான

கையாளல் தொழில் நுணுக்கம் மற்றும் உணவு பதனிடல் தொழில் நுணுக்கம் என்பன தொடர்பில் கைத்தொழில் பங்கேற்பாளர்கள், தொழில்முயற்சியாண்மையாளர்கள், ஏற்றுமதியாளர் ஆகியோருக்கு பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனமும் இலங்கை மூலப்பொருட்களை உள்ளீடாகப் பயன்படுத்தும் கைத்தொழில்களுக்கு உதவும் விதத்தில் பல முயற்சிகளை மேற்கொண்டது. இம்முன்னெடுப்புக்கள் கணியத்தினை அடிப்படையாகக் கொண்ட நனோவினைப் பயன்படுத்துகின்ற இறப்பரின் வெப்பக்கடத்தி மேம்பாடு, சுகாதார உணவு மற்றும் மூலிகை மருத்துவ உற்பத்திகள், உடனடியாகக் கிடைக்கத்தக்க இலங்கை இயற்கையான பளிங்குக் கற்களை இலத்திரனியல் கைத்தொழில்களில் பிரயோகிப்பதற்காக சூரியசக்தி தர சிலிக்கோனுக்கு மாற்றுதல் என்பனவற்றின் முன்னேற்றங்களை உள்ளடக்கியிருந்தன. மேலும், விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் மற்றும் புத்தாக்கத்திற்கான இணைப்புச் செயலகத்திலுள்ள தொழில்நுட்பவியல் மற்றும் புத்தாக்க ஆதனநிலையம் புலமைச்சொத்து உரிமைகளை பாதுகாப்பதனையும் முகாமைப்படுத்துவதனையும் நோக்காகக் கொண்ட வழிமுறைகளினூடாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளித்தது. தேசிய ஆராய்ச்சி ஆணைக்குழுவினால் நிதியிடப்பட்ட அரச தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையினை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டது. தேசிய சுத்திகரிப்பாளர் உற்பத்தி நிலையத்தின் ஒத்துழைப்புடன் தேசிய வடிவமைப்பு நிலையம் மற்றும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை என்பன சுத்திகரிப்பாளர் உற்பத்தி நடைமுறைகளினூடாக பன்னாட்டு தரமிடல் அமைப்பு 14001 சான்றிதழைப் பெறுவதற்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வசதியளிப்பதற்கான திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளன. அதேவேளை, இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை நுண்பாக மற்றும் குடிசைக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் 'திவியத உதானய' என்ற பெயரில் தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடத்தியது.

**பல்வேறுபட்ட அமைச்சுக்கள் மற்றும் தொடர்பான நிறுவனங்களினால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான தூண்டுதலளிக்கும் சூழலை உருவாக்குகின்ற வேளையில் தொழில்முயற்சிகளில் போட்டித்தன்மையினையும் மேம்படுத்துவதற்காகப் பல பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.** தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு 54 தர தூதுவர்களின் நியமனம் மற்றும் தேசிய இணைப்புக் குழுவின் நிறுவனம் 49 பயிற்சி நிலையங்களில் தரமேம்பாட்டு முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டது. தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு தொழில் வாய்ப்புக்களுடன் இணைந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொண்டதுடன் நான்கு முன்னுரிமைத் துறைகளின் கீழ் 2,564 பயிற்சியாளர்களைச் சேர்த்துக் கொண்டது. தேர்ச்சி அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு பெண்கள் தொழிற்படைப் பங்கேற்பினை அதிகரிப்பதற்கும் அதேவேளையில் தொழிலாளர் பற்றாக்குறையினை குறிப்பாக, சுற்றுலாவிடுதி, சுற்றுலா மற்றும் தயாரிப்புக் கைத்தொழில்களிலுள்ள தொழிலாளர் பற்றாக்குறையினைக் கட்டுப்படுத்துவதற்கும் பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்டது. அதேவேளை, ஆரம்பப் பிள்ளைப் பருவக் கவனிப்பினையும் பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பினையும் முன்னேற்றும் பொருட்டு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு ஏறத்தாழ 2,000 பிள்ளை நலக் காப்பகங்களை நாடு முழுவதும் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்ட வேளையில் அரச நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ள நாள் நலக்காப்பங்களின் வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, தேசிய உற்பத்தியாக்கச் செயலகம் மற்றும் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை என்பன உற்பத்தியாக்க மேம்பாடுகளூடாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வலுவூட்டுகின்ற நோக்குடன் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் பல பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்திய வேளையில் காத்திரமான நிறுவன ரீதியான உத்தரவாதத்தினூடாக தொழில்முயற்சிகளின் போட்டித்தன்மையினை மேம்படுத்துவதற்கான சூழலைத் தூண்டும் நடவடிக்கைகளும் உருவாக்கப்பட்டன.

**இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலின் அபிவிருத்தி, ஊக்குவிப்பு மற்றும் ஒழுங்குபடுத்துதலுக்குப் பொறுப்பான நிறுவனம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை 2018ஆம் ஆண்டுப்பகுதியில் இக்கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.** இரத்தினக்கற்களை வெட்டுதல், ஆபரணங்களை வடிவமைத்தல் மற்றும் தயாரிப்புத் துறைகளில் வளர்ந்துவரும் தொழில் வாய்ப்புக்களின் காரணமாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை ஆர்வலர்களுக்காக பல விசேட கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்திய வேளையில் இத்தொழில் துறையில் காணப்பட்ட தொழிலாளர் பற்றாக்குறையினையும் கட்டுப்படுத்தியது. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை புலமைப் பரிசில்களை வழங்குவதனூடாக பள்ளிக்கூடத்தினை விட்டு வெளியேறுவோருக்காக தேசிய தொழில்பயிற்சி தகைமை மட்டத்திலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளது. அதேவேளை, சந்தைக்கு இரத்தினக்கற்கள் தொடர்ச்சியாக வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை சுரங்கமகழ்தல் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்களுக்கு மிகக் காத்திரமான மற்றும் வினைத்திறன்மிக்கப் பணிகளை வழங்குவதற்காக நடமாடும் பணிகளையும் வழங்கியது.

2

**கைத்தொழில் துறையின் அபிவிருத்தியை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு வரவு செலவுத்திட்டம் 2019இல் பல கொள்கை வழிமுறைகள் முன்மொழியப்பட்டுள்ளன.** சலுகை வட்டி வீதத்தில் மூலதனத்தினை வழங்குவதன் மூலம், குறிப்பாக இளைஞரிடையே, தொழில்முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்குடன் 2018 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 'தொழில்முயற்சி இலங்கை' நிகழ்ச்சித்திட்டம் 2019 வரவு செலவுத்திட்டத்தில் மேலும் வலுப்படுத்தப்பட்டது. வங்கியினால் கோரப்படுகின்ற பிணைகளை வழங்குவதில் சவால்களை எதிர்நோக்கிய சிறியளவு தொழில்முயற்சியாளர்களின் அத்தகைய சவால்களைக் கட்டுப்படுத்துவதற்காக வரவு செலவுத்திட்டம் 2019 சிறுதொழில்முயற்சியாளர்கள் துறை, வேளாண்மையாளர்கள் மற்றும் வேளாண்மையினை அடிப்படையாகக் கொண்ட கம்பனிகளுக்கு உத்தரவாதங்களை வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கியின் கீழ் நிதியமொன்றினை உருவாக்குவதற்கு முன்மொழியப்பட்டது. ஏனைய முன்மொழிவுகளிடையே இலங்கை நிறுவனங்களின் புதிய உற்பத்திகள் மற்றும் தொழில்நுட்பவியல் புத்தாக்க அபிவிருத்திக்கு உதவியளிக்கக்கூடிய தொழில்முயற்சி புத்தாக்க நிகழ்ச்சித்திட்டம் முன்மொழியப்பட்டதுடன் இது மூன்றாண்டு காலப்பகுதிக்கு நடைமுறைப்படுத்தப்படும். அதேவேளை, அரசாங்கம் கைத்தொழில் அபிவிருத்திச் சபைகளின் கீழ் காங்கேசன்துறை, மாந்தை கிழக்கு, பரந்தன், கொண்டாச்சி, கிண்ணியா, சம்மாந்துறை மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் கைத்தொழில் பேட்டைகளை நிறுவ முன்மொழிந்துள்ளது. வரவு செலவுத்திட்டம் - 2019உம் கூட ஏற்றுமதியுடன் தொடர்பான கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்காக பல முன்மொழிவுகளைக் கொண்டுள்ளது. இம்முன்மொழியப்பட்ட வழிமுறைகள் உள்நாட்டுக் கைத்தொழில் துறைகளை உத்வேகப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் தேசிய உற்பத்திக்கும் வழிவகுக்கின்றது. அதேவேளை, உலக வங்கியினால் திரட்டப்பட்ட வியாபாரம் செய்யுங்கள் தரமிடலை இலகுபடுத்தல் 2018இல் காணப்பட்ட தரமிடல் 111 உடன் ஒப்பிடுகையில் 2019இல் 100 ஆவது தரமிடலுக்கு முன்னேறியுள்ளமையானது இலங்கையின் வியாபாரச் சூழல் மேம்பட்டமையினை எடுத்துக்காட்டியது. எனினும், இலங்கையில் தொழில்முயற்சியாளர்களுக்கு வியாபாரம் செய்வதனை இலகுபடுத்துவதற்குத் தேவையான வியாபரச் சூழலையும் போட்டித்தன்மையினையும் மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்ட ஒழுங்குமுறைப்படுத்தல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் முயற்சிகள் அவசியமாகவுள்ளன.


## மின்வலு, நீர் மற்றும் கழிவுகளைச் சுத்திகரித்தல்

**2018இல் பெறுமதிகூட்டப்பட்ட மின்வலு, நீர் மற்றும் கழிவு சுத்திகரிப்பு நடவடிக்கைகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்வகைக்கான முக்கிய பங்களிப்பாளரான மின்வலுவுடன் தொடர்பான நடவடிக்கைகள், 2017இல் பதிவுசெய்யப்பட்ட 2.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 4.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இது தொடர்பில் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் மொத்த வலு உருவாக்கம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 3.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மின்வலு உருவாக்கத்தின் வளர்ச்சி, முக்கியமாக, இவ்வாண்டுப்பகுதியில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளின் ஆதரவுடன் நீர்மின்வலு உருவாக்கத்தில் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் 12.1 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 68.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியினால் தூண்டப்பட்டது. 2018இல் நீர்மின்வலு உருவாக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் உலை எண்ணெய் மற்றும் நிலக்கரியினை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கம், முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட முறையே 13.1 சதவீதம் மற்றும் 1.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் முறையே 28.1 சதவீதத்தினாலும் 6.7 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்தன. அதேவேளை, பெறுமதிகூட்டப்பட்ட நீர்சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள் 2017இன் 4.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 4.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, நுகர்வோர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கையினால் பிரதிபலிக்கப்பட்டவாறு நீர்வழங்கல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 6.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 4.9 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட நீரின் அலகு 2017இல் பதிவுசெய்யப்பட்ட 3.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 4.8 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேநேரம், வடிகான், கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டல் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 7.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 7.0 சதவீதத்தினால் அதிகரித்தது.

## கட்டடவாக்கம்

**கட்டடவாக்க நடவடிக்கைளின் பெறுமதிகூட்டல் 2017இல் அவதானிக்கப்பட்ட 4.3 சதவீத வளர்ச்சிக்கெதிராக 2018இல் 2.1 சதவீதம் கொண்ட சுருக்கம் பதிவுசெய்யப்பட்டது.** பாரியளவு கட்டடவாக்க நடவடிக்கைகளில் குறிப்பாக உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் தொடர்பான நடவடிக்கைகளின் குறைவடைந்த செயலாற்றமானது இவ்வாண்டுப்பகுதியில் ஒட்டுமொத்த கட்டவாக்க நடவடிக்கைகளை மெதுவடையச் செய்தது. கட்டடவாக்க நடவடிக்கைகளின் பின்னடைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மொத்த சிமெந்துக் கிடைப்பனவு 2017இல் பதிவுசெய்யப்பட்ட 6.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் மொத்தச் சிமெந்துக் கிடைப்பனவு 6.3

வரைபடம் 2.8
சீமெந்து கிடைப்பனவு



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. இது தொடர்பில் 2018இல் உள்நாட்டு சிமெந்து உற்பத்தி 2017இன் 4.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.8 சதவீதத்தினால் சிறிதளவிற்கு வளர்ச்சியடைந்த வேளையில் சிமெந்து இறக்குமதிகள் முன்னைய ஆண்டின் 7.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 9.9 சதவீதம் கொண்ட கணிசமான சுருக்கத்தினைப் பதிவுசெய்தது. மேலும், கட்டட மூலப்பொருட்களின் இறக்குமதி அளவுச்சுட்டெண்ணும் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 6.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 3.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் கட்டடவாக்க நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி 2017இல் பதிவுசெய்யப்பட்ட 22.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 14.1 சதவீதத்தினால் மெதுவடைந்தது. குறிப்பாக, தனிப்பட்ட வீடமைப்பு, கட்டவாக்க நடவடிக்கைகளுக்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடனின் வளர்ச்சி 2017இல் பதிவுசெய்யப்பட்ட 21.4 சதவீதத்திலிருந்து 2018இல் 13.1 சதவீதத்திற்கு மெதுவடைந்தது.

## பணிகள்

**பெறுமதிகூட்டப்பட்ட பணி நடவடிக்கைகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 3.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டுப்பகுதியில் விரிவடைந்து 4.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியை பதிவுசெய்தது.** பணிகள் நடவடிக்கைகளில் காணப்பட்ட இவ்வளர்ச்சிக்கு முக்கியமாக நிதியியல் பணிகளின் உத்வேகம்மிக்க வளர்ச்சி தூண்டுதலாக அமைந்தது. மேலும், ஏனைய தனியாள் பணிகளில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட தொடர்ச்சியான விரிவாக்கம் என்பன பணிகள் நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்குப் பங்களித்தன. மேலும், போக்குவரத்து நடவடிக்கைகள், உண்மைச் சொத்து, காப்புறுதி, கடன்வசதி, தொழில்நிபுணத்துவப் பணிகள், கல்வி, தொலைத்தொடர்பூட்டல், மனித நலம் மற்றும் தகவல்தொழில்நுட்ப நிகழ்ச்சிப்படுத்தல் நடவடிக்கைகள் என்பனவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி பணிகள் நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சிச் செயலாற்றத்திற்கு ஆதரவளித்தன. எனினும், 2018இல் சுருக்கமடைந்த பொது நிருவாகப் பணிகள் மற்றும் நிகழ்ச்சிப்படுத்தல் மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைகள் பணி நடவடிக்கைகளின் விரிவாக்கத்தினை மிகவும் குறைத்துவிட்டன. பணிகள் நடவடிக்கைகளில் காணப்பட்ட விரிவாக்கம் மாதாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்படும் பணிகள் நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணில் விவரிக்கப்பட்டிருக்கிறது. இது ஆண்டு முழுவதும் பணி நடவடிக்கைகளின் விரிவாக்கமொன்றைக் காட்டுகிறது.

## மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்

**2018இல் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் தொடர்ந்தும் விரிவடைந்து, பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 3.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.0 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தன.** உள்நாட்டு வேளாண்மை உற்பத்திகளில் ஏற்பட்ட மீட்சி வேளாண்மையுடன் தொடர்பான வர்த்தக நடவடிக்கைகளுக்கத் தூண்டுதலை வழங்கின. எனினும், உள்நாட்டு நாணயத்தின் தொடர்ச்சியான தேய்வு, வர்த்தக அளவுச் சுட்டெண்களினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில் இறக்குமதி வர்த்தக நடவடிக்கைகளின் மீது சில அழுத்தங்களைத் தோற்றுவித்தது. இதற்கமைய 2018இல் இறக்குமதி அளவுச் சுட்டெண், 2017இல் பதிவுசெய்யப்பட்ட 8.1 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1.8 சதவிதம் கொண்ட மெதுவான வேகத்தில் அதிகரித்தது. இறக்குமதி அளவுச் சுட்டெண்ணின் துணை வகைகளைப் பரிசீலனையில் கொள்கையில், நுகர்வுப்பொருள் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 6.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2018இல் 9.6 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு ஆண்டின் முதலரைப்பகுதியில் உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் உந்து ஊர்திகளில் இறக்குமதியில் ஏற்பட்ட பெருமளவு உயர்வே பெருமளவிற்குக் காரணமாக இருந்தது. அதேவேளை, இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2017இன் 11.3 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2018இல் 2.3 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்தது. எனினும், முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதி அளவுச் சுட்டெண் 2017இல் பதிவு செய்யப்பட்ட 0.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 0.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேநேரம் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 7.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2018இல் 0.5 சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்தமைக்கு வேளாண்மை ஏற்றுமதிகளில் குறிப்பாக

தோல், இறப்பருடன் தொடர்பான ஏற்றுமதிகளில் ஏற்பட்ட சுருக்கத்துடன் கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட மிதமான சுருக்கம் சேர்ந்து கொண்டமையே பெருமளவிற்குக் காரணமாகும்.

## போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல்

2

**களஞ்சிப்படுத்தல் நடவடிக்கைகள் உட்பட பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்தின் பெறுமதிகூட்டல் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 3.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 2.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. போக்குவரத்துடன் தொடர்பான குறிகாட்டிகளைப் பரிசீலனையில் கொள்கையில், போக்குவரத்துப் பணிகளை வழங்குவோரினால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர் இவ்வாண்டுப்பகுதியில் கணிசமான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது.** இதற்கமைய, தரைப் போக்குவரத்தினைப் பொறுத்தவரை இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் துறை பேருந்து தொழிற்பாட்டாளர்களினால் தொழிற்படுத்தப்பட்ட மொத்தப் பயணிகள் கிலோமீற்றர் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 1.4 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 6.7 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், இலங்கைப் புகைவண்டிப் பகுதியினால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 1.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 2.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மேலும், வாடகை ஊர்திகளின் இணைப்புக்கள் மூலமாக வாடிக்கையாளர்களுக்கு அதேநேர அடிப்படையில் போக்குவரத்துப் பணிகளை இணைக்கின்ற வசதிகளுடன் கூடிய போக்குவரத்துடன் தொடர்பான புதிய பணிகளும் போக்கவரத்துப் பணிகளுக்கு பெறுமதிகூட்டல்களை வழங்கின. வான் போக்குவரத்தினைப் பொறுத்தவரையில், சிறிலங்கன் எயார்லையின்சின் மூலம் பயணம் செய்த மொத்தப் பயணிகள் கிலோமீற்றர் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 10.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 14.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, வான் போக்குவரத்து நடவடிக்கைகளை விரிவடைந்தமையினை பிரதிபலித்தன. மேலும், சிறிலங்கன் எயார்லையின்சினால் கொண்டு செல்லப்பட்ட சரக்குத் தொன் கிலோமீற்றர் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 9.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 9.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. கொள்கலன் போக்குவரத்து நடவடிக்கையுடன் தொடர்பான குறிகாட்டிகளைப் பரிசீலனையில் கொள்கையில், இலங்கை துறைமுகங்களின் கொள்கலன் போக்குவரத்தும் (இருபது அடிக்குச் சமனான அலகு) சரக்குக் கையாளலும் 2017இன் முறையே 8.3 சதவீதம் மற்றும் 8.5 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 2018இல் முறையே 13.5 சதவீதத்தினாலும் 11.8 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. அதேநேரம், பெறுமதிகூட்டப்பபட்ட அஞ்சல் மற்றும் கூரியர் நடவடிக்கைகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 3.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 1.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

## தங்குமிடம் மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள்

**2018இல் பெறுமதிகூட்டப்பட்ட தங்குமிடம், உணவு மற்றும் குடிபான பணி நடவடிக்கைகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 5.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** சுற்றுலா தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்பட்ட உத்வேகம் இவ்வாண்டுப்பகுதியில் ஏற்பட்ட இவ்விரிவாக்கத்திற்குத் தூண்டுதலாக அமைந்தன. இதன்படி, சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 3.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 10.3 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. மேலும், சுற்றுலாக் கைத்தொழிலில் ஏற்பட்ட சாதகமான வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2018இல் ஐ.அ.டொலர் 4.4 பில்லியனுக்கு அதிகரித்து 11.6 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. மேலும், மொத்த உள்நாட்டுச் செலவினத்தில் காட்டப்பட்டவாறு உணவகங்கள் மற்றும் சுற்றுலாவிடுதிகளின் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் உயர்வடைந்து தங்குமிட வசதி மற்றும் உணவக வசதிகளுக்கான அதிகரித்த கேள்வியைப் பிரதிபலித்தன. இது இவ்வாண்டுப்பகுதியில் தங்குமிட வசதி மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்குத் தூண்டுதலை வழங்கியிருக்கலாம். எனினும், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட தரமிடப்பட்ட சுற்றுலாவிடுதிகளின் அறைகளில் தங்கியிருக்கும் வீதம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 73.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 72.8 சதவீதத்திற்கு மெதுவாக வீழ்ச்சியடைந்தது.

## தகவல் மற்றும் தொடர்பூட்டல்

**2018இல் தகவல் மற்றும் தொடர்பூட்டல் நடவடிக்கைகள் பெறுமதிகூட்டல் நடவடிக்கைகளில் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 9.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 8.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு முக்கியமாக, 2017இல் பதிவுசெய்யப்பட்ட 12.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 9.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்த தொலைத்தொடர்பூட்டல் நடவடிக்கைகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கம் பெருமளவிற்குத் தூண்டதலாக அமைந்தது. நாட்டிலுள்ள தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கையினைப் பரிசீலனையில் கொள்கையில் செல்லிடத் தொலைபேசி வாடிக்கையாளர்கள் அதேபோன்று நிலையாகப் பொருத்தப்பட்ட கம்பி இணைப்புக்கள் என்பன தொடர்ந்தும் அதன் வேகத்தில் வளர்ச்சியடைந்த போதும் நிலையாகப் பொருத்தப்பட்ட கம்பிவழி இணைப்புக்களில் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அதேநேரம் தரவுகளுக்காக அதிகரித்துச் செல்லும் கேள்வியின் காரணமாக இணையத்தள வசதிகள் உயர்ந்த வேகத்தில் விரிவடைந்தன. இதற்கமைய, இவ்வாண்டுப்பகுதியில் நிலையாகப் பொருத்தப்பட்ட மற்றும் செல்லிட அகன்றபட்டை

வலையமைப்பு வகைகள் இரண்டினதும் மின்னஞ்சல் மற்றும் இணையத்தளப் பணிகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தன. தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்ட ஆலோசனை மற்றும் தொடர்பான நடவடிக்கைகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 4.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 10.8 சதவீதம் கொண்ட உயர்ந்த வேகத்தில் வளர்ச்சியடைந்தன. தகவல் தொழில்நுட்பப் பணிகளுக்கான அதிகரித்துவரும் கேள்வி பல துறைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட டிஜிட்டல் மயப்படுத்தப்பட் முன்னெடுப்புக்களுடன் சேர்ந்து பொருளாதாரத்திலுள்ள தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான விரிவாக்கத்திற்கு பங்களித்தன. எனினும், நிகழ்ச்சித் தயாரிப்பு, ஒலிபரப்பு நடவடிக்கைகள் மற்றும் செவிப்புல மற்றும் கட்புல தயாரிப்பு நடவடிக்கைகள் 2017இல் 0.9 சதவீத சிறிதளவு சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 7.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.

### நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்

**நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டல் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 6.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 8.2 சதவீதத்தினால் விரிவடைந்தது.** நிதியியல் பணி நடவடிக்கைகள் மற்றும் துணை நிதியியல் பணிகளின் உத்வேகம் மிக்க தொடர்ச்சியான வளர்ச்சி 2017இல் பதிவுசெய்யப்பட்ட 9.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 11.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தமை இவ்விரிவாக்கத்திற்கு பெருமளவு உதவியாக அமைந்தது. நிதியியல் பணிகளுடன் தொடர்பான குறிகாட்டிகளைப் பரிசீலனையில் கொள்கையில் வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களிலுள்ள மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 16.1 சதவீதம் மற்றும் 10.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் முறையே 19.6 சதவீதத்தினாலும் 8.7 சதவீதத்தினாலும் அதிகரித்தன. மேலும், வங்கிகள் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் வைப்புத் தளம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட முறையே 17.5 சதவீதம் மற்றும் 29.4 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 2018இல் முறையே 14.8 சதவீதத்தினாலும் 4.4 சதவீதத்தினாலும் அதிகரித்தன. அதேநேரம், வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 3.8 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியங்களுடன் தொடர்பான நடவடிக்கைகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 2.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 10.0 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. காப்புறுதிக் கைத்தொழிலினால் உழைக்கப்பட்ட கட்டுப்பணம் மற்றும் உறப்பட்ட கோரல்கள் 2018இல் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்து காப்புறுதி தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்பட்ட சாதகமான அபிவிருத்திகளைப் பிரதிபலித்தன.

### தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணி நடவடிக்கைகள்

**தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணிகளின் கூட்டப்பட்ட பெறுமதி 2017இல் அவதானிக்கப்பட்ட 3.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 4.7 சதவீதத்தினால் விரிவடைந்தது. ஏனைய தனிப்பட்ட பணி நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் தொழில்சார் பணிகளிலிருந்தான சாதகமான பங்களிப்புக்களினால் உதவியளிக்கப்பட்ட பிரிவிற்குள்ளான வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாளராக விளங்கியது.** இதற்கமைய ஏனைய தனிப்பட்ட பணி நடவடிக்கைகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 3.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 4.8 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தினால் வளர்ச்சியடைந்து அத்தகைய பணிகளுக்கான அதிகரித்த கேள்வியைப் பிரதிபலித்தன. அதேநேரம் தொழில்சார் பணிகள், விஞ்ஞானம், தொழில்நுட்பம், நிருவாகம் மற்றும் ஆதரவுப் பணி நடவடிக்கைகள் தொடர்ந்தும் அவற்றின் சாதகமான வளர்ச்சியைப் பதிவுசெய்து 2017இல் பதிவுசெய்யப்பட்ட 4.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 4.1 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை பதிவுசெய்து பிரிவிற்குள் அதன் வளர்ச்சியை வலுப்படுத்தியது.

### பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள்

**பொது நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 1.2 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 0.9 சதவீதத்தினால் சிறிதளவினால் வளர்ச்சியடைந்தன.** இப்பிரிவிற்கிடையில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சிக்கு பொது நிருவாகம், பாதுகாப்பு மற்றும் கட்டாய சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட சுருக்கம் பெருமளவிற்குக் காரணமாக அமைந்ததுடன் இது 2017இல் பதிவுசெய்யப்பட்ட 4.8 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 0.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. மேலும், மனித நல நடவடிக்கைகள் வதிவிட நலக்கவனிப்பு மற்றும் சமூகப் பணி நடவடிக்கைகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 7.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 2.2 சதவீதம் கொண்ட மெதுவான வளர்ச்சியைப் பதிவுசெய்தன. அதேவேளை, கல்விப் பணிகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 0.5 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 3.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

2

## 2.5 செலவினம்

**நடைமுறை விலைகளில் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினங்களை உள்ளடக்கிய மொத்த உள்நாட்டுச் செலவினம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 11.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 7.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** இதன்படி மொத்த உள்நாட்டுச் செலவினம் 2018இல் ரூ.15,511.8 பில்லியனாக விளங்கியது. இதற்கு 2017இல் பதிவுசெய்யப்பட்ட 10.3 சதவீதம் மற்றும் 15.8 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் முறையே 8.3 சதவீதத்தினாலும் 6.8 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்த நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினங்கள் இரண்டிலும் ஏற்பட்ட வளர்ச்சியே ஆதரவாக விளங்கியது. தொடர்ந்து நிலையாகக் காணப்படும் விலைகளைப் பரிசீலனையில் கொள்கையில் மொத்த உள்நாட்டுச் செலவினம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 3.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 3.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இது தொடர்பில் முதலீட்டுச் செலவினம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 8.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 6.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. எனினும், நுகர்வுச் செலவினம் நிலையான விலைகளில் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 1.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 1.6 சதவீதம் கொண்ட மெதுவான வளர்ச்சியைப் பதிவுசெய்தது. நடைமுறை மற்றும் சந்தை விலை நியதிகளில், நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினத்தின் வளர்ச்சி வீதங்களைப் பரிசீலனையில் கொள்கையில், விலை அழுத்தம் 2018இல் முதலீட்டுச் செலவினத்திலும் பார்க்க நுகர்வுச் செலவினத்தின் மீது கூடியளவு அழுத்தினைக் கொண்டிருந்தமையைக் காட்டுகிறது. அதேவேளை, நடைமுறை விலைகளில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் 2017இன் 14.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 13.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதி 2017இல் பதிவுசெய்யப்பட்ட 13.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 12.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் உண்மை நியதிகளில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளிலும் பார்க்க உயர்ந்த பெறுமதியைப் பிரதிபலிப்பதனால் நடைமுறை விலைகளில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி 2017இல் பதிவுசெய்யப்பட்ட 10.1 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 10.3 சதவீதத்தினால் சுருக்கடைந்தது. நிலையான விலைகளில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 7.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 0.5 சதவீதத்தினால் சிறிதளவால் அதிகரித்த வேளையில் பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 7.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 1.8 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இதன்படி, நிலையான விலைகளில் தேறிய வெளிநாட்டுப் பெறுமதி 2017இல் பதிவுசெய்யப்பட்ட 6.5 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 3.5 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் சுருக்கமடைந்தது. மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தேறிய வெளிநாட்டுக் கேள்விகளுக்காகச் சீராக்கம் செய்யப்பட்ட மொத்த உள்நாட்டுச் செலவினத்தினை உள்ளடக்கிய மொ.உ.உற்பத்தி நடைமுறை விலைகளில் 2018இல் ரூ.14,449.9 பில்லியனாக விளங்கி, 2017இன் 11.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 7.7 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்தது. நிலையான விலைகளில் மொ.உ.உற்பத்தி 2017இன் 3.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 3.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

அட்டவணை 2.10
மொத்த கேள்வி (அ)

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகள் (ரூ.மில்) | | | நிலையான (2010) விலைகள் (ரூ.மில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2016 (ஆ) | 2017 (ஆ)(இ) | 2018 (இ) | 2016 (ஆ) | 2017 (ஆ)(இ) | 2018 (இ) |
| அ. உள்நாட்டுக் கேள்வி | | | | | | |
| நுகர்வு | 9,529,202 | 10,513,141 | 11,381,403 | 7,036,082 | 7,160,351 | 7,277,006 |
| (% மாற்றம்) | 14.0 | 10.3 | 8.3 | 6.9 | 1.8 | 1.6 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 3,341,171 | 3,867,947 | 4,130,406 | 3,156,162 | 3,416,093 | 3,642,658 |
| (% மாற்றம்) | -2.1 | 15.8 | 6.8 | 5.0 | 8.2 | 6.6 |
| **மொத்த உள்நாட்டு கேள்வி** | **12,870,372** | **14,381,088** | **15,511,809** | **10,192,244** | **10,576,444** | **10,919,663** |
| **(% மாற்றம்)** | **9.3** | **11.7** | **7.9** | **6.3** | **3.8** | **3.2** |
| ஆ. வெளிநாட்டுக் கேள்வி | | | | | | |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 2,540,049 | 2,909,720 | 3,292,414 | 1,593,234 | 1,714,147 | 1,722,612 |
| (% மாற்றம்) | 10.4 | 14.6 | 13.2 | -0.7 | 7.6 | 0.5 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 3,414,338 | 3,872,521 | 4,354,292 | 2,749,649 | 2,945,752 | 2,997,547 |
| (% மாற்றம்) | 9.2 | 13.4 | 12.4 | 7.9 | 7.1 | 1.8 |
| **தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-874,289** | **-962,801** | **-1,061,878** | **-1,156,414** | **-1,231,605** | **-1.274,935** |
| **(% மாற்றம்)** | **-6.0** | **-10.1** | **-10.3** | **-22.6** | **-6.5** | **-3.5** |
| **இ. மொத்த கேள்வி** | **11,996,083** | **13,418,287** | **14,449,931** | **9,035,830** | **9,344,839** | **9,644,728** |
| **(% மாற்றம்)** | **9.5** | **11.9** | **7.7** | **4.5** | **3.4** | **3.2** |

(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## நுகர்வு

நடைமுறை விலைகளில் நுகர்வுச் செலவினம் பொருளாதாரத்தின் மொத்தச் செலவினத்தில் ஏறத்தாழ 78.8 சதவீதத்திற்கு வகைகூறி 2017இல் பதிவுசெய்யப்பட்ட 10.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 8.3 சதவீதத்தினால் விரிவடைந்தது. தனியார் மற்றும் அரச நுகர்வுச் செலவினம் இரண்டிலும் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் இவ்வளர்ச்சிக்குப் பங்களித்துள்ளன. இதன்படி தனியார் நுகர்வுச் செலவினம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 10.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் மொத்த நுகர்வுச் செலவினத்தில் 88.6 சதவீதத்திற்கு வகைகூறி 7.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, அரச நுகர்வுச் செலவினம் 2017இன் 11.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 15.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சிக்கு, அரசாங்கத்தின் கூட்டு மற்றும் தனிப்பட்ட நுகர்வுச் செலவினம் இரண்டும் 2018இல் முறையே 19.8 சதவீதத்தினாலும் 4.6 சதவீதத்தினாலும் பங்களித்தன.

## தனியார் நுகர்வுச் செலவினம்

உணவு மற்றும் வெறியமல்லாக் குடிபானங்கள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம், நடைமுறை விலைகளில் 2017இன் 6.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 6.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதியைக் கவனத்தில் கொள்கையில் இறக்குமதி ரூபா பெறுமதிச் சுட்டெண்ணின்படி 2017இல் பதிவுசெய்யப்பட்ட 18.4 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2018இல் 7.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இது, உள்நாட்டு வேளாண்மை உற்பத்தி மற்றும் உணவுடன் தொடர்பான தயாரிப்பு நடவடிக்கைகளின் வளர்ச்சி என்பனவற்றுடன் இசைந்து செல்வதாகக் காணப்பட்டது. உணவு உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு 2018இல் உணவு மற்றும் குடிபான வகைகளுடன் தொடர்பான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் (தே.நு.வி.சு 2013 ஸ்ரீ 100) 2017இன் 11.3 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 0.2 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

நடைமுறை விலைகளில் ஆடை மற்றும் காலணி மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2017இன் 0.4 சதவீதம் கொண்ட சுருக்கத்திற்கெதிராக 2018இல் 4.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. வழங்கல்பக்க அபிவிருத்திகளைப் பரிசீலனையில் கொள்கையில், புடவைத் தயாரிப்பு, அணியும் ஆடைகள் மற்றும் தோலுடன் தொடர்பான உற்பத்திகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் மெதுவான வேகத்தில் விரிவடைந்தன. மறுபுறத்தில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஆடைகள் மற்றும் காலணி வகைகள் 2017இன் 3.2 சதவீதத்திலிருந்து 2018இல் 4.0 சதவீதத்திற்கு அதிகரித்து வழங்கலில் ஏற்பட்ட மெதுவான போக்குடன் இவ்வகையில்

வரைபடம் 2.9 தனியார் நுகர்வு செலவினம் (நடைமுறைச் சந்தை விலைகளில்)




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 2.11
நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு (அ)

| வகை | மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் சதவீதமாக (%) | | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|
| | 2016 (ஆ) | 2017 (ஆ)(இ) | 2018 (இ) | 2017 (ஆ)(இ) | 2018 (இ) |
| 1. உணவு மற்றும் வெறியமல்லா குடிபானங்கள் | 33.8 | 32.6 | 32.2 | 6.2 | 6.1 |
| 2. வெறியமுள்ள குடிபானங்கள்,புகையிலை மற்றும் போதைப்பொருள் | 1.8 | 1.7 | 1.7 | 6.5 | 8.4 |
| 3. புடவையும் காலணியும் | 4.9 | 4.4 | 4.3 | -0.4 | 4.2 |
| 4. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு, மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 10.3 | 10.0 | 9.9 | 6.5 | 7.2 |
| 5. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டுத்துறையின் பராமரிப்பு | 1.5 | 1.4 | 1.4 | 5.9 | 0.9 |
| 6. நலம் | 2.7 | 2.7 | 2.6 | 7.4 | 4.1 |
| 7. போக்குவரத்து | 19.7 | 22.1 | 23.3 | 24.0 | 13.2 |
| 8. தொடர்பூட்டல் | 1.0 | 1.0 | 0.9 | 6.9 | -4.3 |
| 9. பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் | 1.9 | 1.8 | 1.8 | 4.8 | 6.0 |
| 10. கல்வி | 1.2 | 1.2 | 1.2 | 8.4 | 9.8 |
| 11. விடுதிகள் மற்றும் உணவகங்கள் | 4.0 | 4.0 | 4.1 | 11.9 | 10.0 |
| 12. பல்வகைப் பொருட்களும் பணிகளும் | 20.5 | 20.8 | 20.9 | 11.6 | 8.2 |
| 13. வதிவோரினால் நேரடி வெளிநாட்டு கொள்வனவுகள் | 2.8 | 2.7 | 2.8 | 8.5 | 10.7 |
| 14. கழிக்குக: வதிவற்றோரினால் உள்நாட்டு சந்தையில் நேரடி கொள்வனவுகள் | 6.1 | 6.4 | 7.1 | 16.6 | 18.9 |
| மொத்த தனியார் நுகர்வுச் செலவு | 100.0 | 100.0 | 100.0 | 10.2 | 7.4 |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2

அதிகரித்த விலை அழுத்தங்களைப் பிரதிபலித்தது. எனினும், ரூபாப் பெறுமதி நியதிகளில் ஆடைகள் மற்றும் துணைப்பொருட்களுடன் தொடர்பான இறக்குமதிச் சுட்டெண்கள் 2017இல் அவதானிக்கப்பட்ட 5.6 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2018இல் 10.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் பகுதியளவில் ரூபாவின் பெறுமதித்தேய்வு காரணமாக இறக்குமதி அலகு விலைகளில் எழுச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

**நடைமுறை விலைகளில் வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் தொடர்பான தனியார் நுகர்வுச் செலவினம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 6.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 7.2 சதவீதத்தினால் அதிகரித்தது.** நீர் நுகர்வில் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வீட்டுத்துறைக்கு விநியோக்கப்பட்ட நீரின் அலகுகள் 2017இன் 3.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 4.6 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, வீட்டுத்துறைக்கான மின்வலு விற்பனை 2017இன் 4.4 சதவீதம் கொண்ட விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 3.9 சதவீதத்தினால் விரிவடைந்தது. எனினும், இவ்வாண்டுப்பகுதியில் மின்வலு மற்றும் நீர் மீதான தீர்வைகள் மாற்றமின்றிக் காணப்பட்டன. அதேவேளை 2018ஆம் ஆண்டுப்பகுதியில் டீசல், பெற்றோல் மற்றும் உள்நாட்டுத் திரவப் பெற்றோலிய வாயு என்பனவற்றின் விலைகள் அதிகரித்து, இவ்வகையின் வீட்டு உபயோக பெயரளவு செலவினங்கள் அதிகரிப்பதற்குப் பங்களித்தன. அதேநேரம், வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்களை அடிப்படையாகக் கொண்ட வகைகளின் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 2017இன் 0.9 சதவீதத்திலிருந்து 2018இல் 1.3 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

**நடைமுறை விலைகளில் போக்குவரத்து நடவடிக்கைகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2017இன் 24.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 13.2 சதவீதத்தினால் அதிகரித்தது.** நடைமுறை விலைகளில் போக்குவரத்து நடவடிக்கைகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட விரிவாக்கம் போக்குவரத்துச் செலவினம் மேல் நோக்கி அதிகரிப்பதற்கு ஓரளவு காரணமாக அமைந்தது. குறிப்பாக, 2018இல் பேருந்துப் பணிகள் மீதான பயணிகள் போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டமை போக்குவரத்து மீதான வீட்டலகுகளின் பெயரளவுச் செலவினத்தினை அதிகரித்தன. மேலும், புகைவண்டி மீதான பயணிகள் போக்குவரத்துக் கட்டணங்களும் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தன. இவ்வபிவிருததிகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் போக்குவரத்து நடவடிக்கைகளுடன் தொடர்பான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2017இன் 5.9 சதவீதத்திலிருந்து 2018இல் 8.4 சதவீதத்திற்கு அதிகரித்தது.


**2018இல் நடைமுறை விலைகளில் நலக்கவனிப்பு நடவடிக்கைகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 7.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகத்திலேனும் 4.1 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் கல்வி நடவடிக்கைகள் மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 8.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 9.8 சதவீதத்தினால் அதிகரித்தது.** நல வகைகளுடன் தொடர்பான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2017இன் 9.9 சதவீதத்திலிருந்து 2018இல் 7.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையானது இவ்வகையின் சார்பளவில் குறைவடைந்த விலை அழுத்தங்களைப் பிரதிபலிப்பதன் மூலம் பெயரளவு நியதிகளில் சுகாதாரச்

செலவினம் மெதுவடைவதற்குப் பங்களித்தது. எனினும், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட கல்விப் பணிகளின் விலைகள் 2017இன் 4.1 சதவீதத்திலிருந்து 2018இல் 6.0 சதவீதத்திற்கு அதிகரித்ததன் மூலம் கல்விப் பணிகள் மீதான பெயரளவுச் செலவினம் அதிகரித்தது. இவ்வகைகளின் மீதான வீட்டலகுகளின் நுகர்வுச் செலவினத்தில் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த பங்குகளுக்கு கல்வி மற்றும் சுகாதாரத் துறைப் பணிகளை இலவசமாக வழங்குவதில் அரசாங்கத்திடமிருந்தான பகுதியளவான பங்களிப்பே காரணமாகும்.

## அரச நுகர்வுச் செலவினம்

**அரசாங்கத்தின் கூட்டு இறுதி நுகர்வுச் செலவினத்தினையும் (அரச நுகர்வுச் செலவினத்தில் 71.4 சதவீதம்) தனிப்பட்ட இறுதி நுகர்வுச் செலவினத்தையும் (அரச நுகர்வுச் செலவினத்தில் 28.6 சதவீதம்) உள்ளடக்கிய அரச நுகர்வுச் செலவினம் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர்ச்சியான இறைத்திரட்சிக்கு மத்தியிலும், முன்னைய ஆண்டின் மெதுவான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் உயர்ந்த வீதமொன்றினால் விரிவடைந்தது. பாதுகாப்பு, பொது அரச பணிகள், சமூகப் பாதுகாப்பு, பொருளாதார அலுவல்கள் மற்றும் பொது ஒழுங்குகள் மற்றும் பாதுகாப்பு போன்ற பணிகள் மீதான அரச செலவினத்தையுள்ளடக்கிய கூட்டு இறுதி நுகர்வுச் செலவினமானது 2017இன் 12.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 19.8 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தில் விரிவடைந்தது.** இவ்வளர்ச்சிக்கு பொதுப் பணிகள் மீதான அதிகரித்த அரச செலவினம் முக்கியமாக காரணமாகும். 2017இல் பதிவுசெய்யப்பட்ட 43.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 112.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து காணப்பட்டது. அரச நிதியியல் புள்ளிவிபரங்களை பரிசீலனையில் கொள்கையில் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் பொருட்கள் பணிகளின்

வரைபடம் 2.10
அரச நுகர்வு செலவினத்தின் உள்ளடக்கம்
(நடைமுறைச் சந்தை விலைகளில்)




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்


ஏனைய கொள்வனவுகள் மீதான அரசின் மீண்டெழும் செலவினம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 1.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 6.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, நலம் மற்றும் கல்விப் பணிகள் மீதான அரசின் செலவினத்தினை உள்ளடக்கிய அரசின் தனிப்பட்ட இறுதி நுகர்வுச் செலவினம் 2017இன் 8.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 4.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இப்பணிகளை வழங்குவதில் அரசாங்கத்தின் அதிகரித்த ஈடுபாட்டினை பொருளாதாரத்தின் நிறுவன ரீதியான துறை பகுப்பாய்வில் அவதானிக்க முடியும். நலம் மற்றும் கல்விப் பணிகளுக்கான அரச துறையின் பங்களிப்பு 2018இல் அதிகரித்தது.

2

## முதலீடு

**நடைமுறை விலைகளில் முதலீட்டுச் செலவினம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 15.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 6.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சிக்கு முதலீட்டுச் செலவினத்தின் மிகப் பெரும் வகையாக விளங்கும் கட்டடவாக்க நடவடிக்கைகள் மீதான முதலீட்டில் ஏற்பட்ட மெதுவான போக்கே முக்கிய தூண்டுதலாகக் காணப்பட்டது. இம்மெதுவான போக்கு கட்டடப்பொருட்கள் உள்ளிட்ட முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதியிலும் கட்டடவாக்க நடவடிக்கைகளுக்காக தனியார் துறைக்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடனிலும் அவதானிக்கப்பட்டது. மேலும், பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் ஆயுதத்தொகுதி மீதான முதலீடும் இவ்வாண்டுப்பகுதியில் மெதுவடைந்தது. இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட வியாபார அளவீட்டினால் பிரதிபலிக்கப்பட்டவாறு முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட இம்மிதமான வளர்ச்சிக்கு ரூபாவின் தேய்விலிருந்து தோன்றிய தொழிற்பாட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பதிலிறுத்தும் முதலீட்டுப்பொருட்கள் மீதான முதலீட்டினை தாமதிப்பதற்கு எடுக்கப்பட்ட உறுதியான தீர்மானமே பகுதியளவில் காரணமாகும். மேலும், உள்நாட்டுச் சந்தையில் நிலவிய கொள்கை மற்றும் அரசியலின் நிச்சயமற்ற தன்மையும் அவர்களின் முதலீட்டுத் தீர்மானங்கள் மீது தாக்கத்தினைக் கொண்டிருந்தன. அரசாங்கத்தின் நிதியியல் புள்ளிவிபரங்களின்படி, அரச முதலீட்டுச் செலவினத்திலும் சுருக்கமொன்றை அவதானிக்க முடிந்தது. எனினும், போக்குவரத்துக் கருவிகள் மற்றும் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பக் கருவிகள் என்பன மீதான முதலீடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்த வேளையில் பயிர் செய்யப்பட்ட உயிரியல் சார்ந்த மூலவளங்கள் மற்றும் புலமைச்சொத்து ஆகிய துறைகளில் காணப்பட்ட முதலீடுகளும் முதலீட்டு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பங்களித்தன. அதேவேளை, இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் பெறுமதிகளின் விற்பனையைக் கழித்த கையேற்புக்கள் என்பன 2017இல் அவதானிக்கப்பட்ட 140.0 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 34.5 சதவீதம்

வரைபடம் 2.11
முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளின் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (அ) (ஐ.அ.டொ.மில்லியன்)




*மூலம்:* இலங்கை முதலீட்டுச் சபை

2

கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன. இது தொடர்பில் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் பெறுமதிகளின் விற்பனையைக் கழித்த கையேற்புக்கள் சுருக்கத்தைக் காட்டின.

**முதலீட்டுச்சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களை உள்ளடக்கிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,710.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018 காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,366.9[3] மில்லியன் பெறுமதிக்கு 38.4 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியை பதிவுசெய்தது.** ஆய்வுக்குரிய ஆண்டுக்காலப்பகுதியில் வெளிநாட்ட நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் கணிசமான அதிகரிப்பிற்கு உட்கட்டமைப்புடன் தொடர்புடைய செயற்றிட்டங்களிற்கான உயர்ந்தளவான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களால் பெருமளவில் ஆதரவளிக்கப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் 70.0 சதவீத வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. 2018 காலப்பகுதியில் மொத்த உட்பாய்ச்சல்களில் (ஐ.அ.டொலர் 1,773.7 மில்லியன்) ஏறத்தாள 75 சதவீதம் துறைமுக கொள்கலன் முனைக்கோடிகள், தொலைபேசி மற்றும் தொலைத்தொடர்பூட்டல் வலையமைப்பு என்பவற்றுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு துறை மீதான செயற்றிட்டங்களை உள்ளடக்கின்றது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கான உட்பாய்ச்சல்கள் (ஐ.அ.டொலர் 827.6 மில்லியன்) மொத்த உட்பாய்ச்சல்களில் ஏறத்தாழ 35 சதவீதத்திற்கு வகை கூறியது. தயாரிப்புத் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 16.1 சதவீதம் (ஐ.அ.டொலர் 291.5 மில்லியன்) கொண்ட வீழ்ச்சியை பதிவுசெய்திருந்த அதேவேளை மொத்த உட்பாய்ச்சல்களில் 12.3 சதவீதத்திற்கு பங்களித்திருந்தது. அதேவேளை மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களில் 12.7 சதவீதத்திற்கு வகைகூறிய பணிகள் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.2 சதவீத (ஐ.அ.டொலர் 301.3 மில்லியன்) வீழ்ச்சியை பதிவு செய்திருந்தது.

**முதலீட்டுச் சபை சட்டத்தின் பிரிவு 16 மற்றும் 17இன் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த முதலீட்டின் பெறுமதி 2018இல் ரூ.386.3 பில்லியனாக மதிப்பிடப்பட்டது.** உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள், உருவமைக்கப்பட்ட உலோகங்கள், பொறிகள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் போன்ற துறைகள்

3 வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் எண்தொகைகள், முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான கடன்கள் உள்ளிட்ட பெறுகைகளை உள்ளடக்கியிருந்ததுடன் வெளிநாட்டு நேர் முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் பின்னர் முதலீட்டுச் சபையல்லாக் கம்பனிகளில் உள்ளடக்கப்பட்டிருப்பதன் காரணமாக அத்தியாயம் 5இல் காட்டப்பட்டுள்ள மதிப்பீடுகளிலிருந்து வேறுபடக்கூடும்.

அட்டவணை 2.12
இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு என்பவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | எதிர்பார்க்கப்பட்ட முதலீடுகள் (ரூ. மில்லியன்) | | | | | | தொழிலாளர் (எண்ணிக்கை) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2017 (அ) | | | 2018 (ஆ) | | | | |
| | 2017 (அ) | 2018 (ஆ) | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | 2017 (அ) | 2018 (ஆ) |
| முதலீட்டுச்சபை (1978ம் ஆண்டு 4ம் இல. சட்டத்தின் கீழ்) | | | | | | | | | | |
| ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 183 | 143 | 367,977 | 226,549 | 594,526 | 175,987 | 210,294 | 386,281 | 37,141 | 24,682 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 149 | 128 | 363,781 | 225,803 | 589,584 | 174,417 | 207,211 | 381,628 | 35,115 | 24,313 |
| பிரிவு 16இன் கீழ் | 34 | 15 | 4,196 | 746 | 4,942 | 1,570 | 3,083 | 4,653 | 2,026 | 369 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 104 | 94 | 234,454 | 195,362 | 429,816 | 75,260 | 146,145 | 221,404 | 25,984 | 22,977 |
| பிரிவு 17இன் கீழ் அடையப்பட்ட முதலீடுகள் (ஈ)(உ) | 1,908 | 1,953 | 1,601,805 | 969,609 | 2,571,413 | 2,013,978 | 1,287,831 | 3,301,809 | வி.கி. | வி.கி. |
| வர்த்தகத் தொழிற்பாடுகளின் செயற்றிட்டங்கள் (ஈ) | 2,359 | 2,300 | 397,212 | 511,811 | 368,676 | 397,409 | 523,946 | 921,355 | 359,269 | 357,086 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 1,724 | 1,708 | 372,889 | 502,639 | 335,181 | 372,930 | 514,774 | 887,704 | 326,992 | 327,606 |
| பிரிவு 16இன் கீழ் | 635 | 592 | 24,322 | 9,172 | 33,495 | 24,479 | 9,172 | 33,651 | 32,277 | 29,480 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் (ஈ) | 2,514 | 2,674 | - | - | 205,231 | - | - | 206,565 | 311,001 | 314,230 |


(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஈ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை
(உ) ஒன்றுசேர்ந்த உண்மையான முதலீடுகளின் பெறுமதி வழங்கப்பட்டுள்ளது.

*மூலங்கள்:* இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் மற்றும் வர்த்தக சபை

குறிப்பு : முதலீட்டுச் சபையின் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் முதலீட்டு மட்டம் அல்லது வேறு ஏதேனும் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பூர்த்திக்குட்பட்டு சுங்கம் மற்றும் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இருந்து விலக்களிக்கப்பட்டன.

உள்ளடல்கலாக செயற்றிட்ட ஒப்புதலளிப்புக்களின் முதலீட்டுப் பெறுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் அதிகரிப்பொன்றை பதிவுசெய்தது. எனினும், 2017 உடன் ஒப்பிடுகையில் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் உணவு குடிபானங்கள் மற்றும் புகையிலை, புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோலுற்பத்திகள், பணிகள், இராசாயனங்கள், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாந்திக் உற்பத்திகள் போன்ற துறைகள் மீதான ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீடு வீழ்ச்சி அடைந்திருந்தது. 2018 காலப்பகுதியில் பிரிவு 17இன் கீழான செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீட்டு பெறுமதியானது ரூ.221.4 பில்லியன்களுக்கு சுருங்கமடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 48.5 சதவீத வீழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தது. முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 16 மற்றும் 17இன் கீழ் வர்த்தக நடவடிக்கைகளை தொடங்கிய செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீடு 2018இன் இறுதியில் ரூ.921.4 பில்லியன் பெறுமதியாகவிருந்தது. 2018 இறுதியில் முதலீட்டுச் சபையின் தேறல் செய்யப்பட்ட திரண்ட முதலீடு ரூ.3301.8 பில்லியனாக காணப்பட்டது.

வரைபடம் 2.12
2018இல் பொருளாதாரம்
(நடைமுறை சந்தை விலைகளில்) (அ)




(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## மூலவளங்களின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு

**நடைமுறை விலைகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலவளங்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய பொருளாதாரத்தில் கிடைக்கத்தக்க மூலவளங்கள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 12.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.18,804.2 பில்லியனாக விளங்கி 8.8 சதவீதத்தினால் விரிவடைந்தது.** மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் இறக்குமதிகளை உள்ளடக்கிய வெளிநாட்டு மூலவளங்களை உள்ளடக்கிய உள்நாட்டு மூலவளங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018இல் மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்ததுடன் நாட்டின் மூலவளங்களின் கிடைப்பனவினை குறைவடையச் செய்திருந்தது. அதேநேரம், நிலையான விலைகளில் கிடைக்கத்தக்கதாகவிருந்த மூலவளம் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 4.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 2.9 சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்தது. இம்மெதுவான போக்கு இவ்வாண்டுப்பகுதியில் கிடைக்கத்தக்கதாகவிருந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலவளங்கள் இரண்டிலும் அவதானிக்கப்பட்டது.

**நடைமுறை விலைகளில் கிடைக்கத்தக்க மூலவளங்கள் நுகர்வு, முதலீடு மற்றும் ஏற்றுமதி நோக்கங்களுக்காக இவ்வாண்டில் பயன்படுத்தப்பட்டன. நுகர்வு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட மூலவளங்களின் பங்கு 2018இல் மொத்த மூலவளங்களின் பயன்பாட்டில் 60.5 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் இது 2017இல் பதிவுசெய்யப்பட்ட 60.8 சதவீதத்தினைவிட சிறிதளவு வீழ்ச்சியைக் கொண்டிருந்தது.** அதேவேளை, முதலீட்டு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்களின் பங்கு 2017இல் பதிவுசெய்யப்பட்ட 22.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 22.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேநேரம், ஏற்றுமதி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்களின் பங்கு 2017இன் 16.8 சதவீதத்திலிருந்து 2018இல் 17.5 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. நிலையான விலைகளில் மூலவளங்களின் பயன்பாடு, இவ்வாண்டுப்பகுதியில் நுகர்வு, முதலீடு மற்றும் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட மெதுவான போக்குகளின் காரணமாக மிதமாக அதிகரித்தது.

அட்டவணை 2.13
நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும் (அ)(இ)

| விடயம் | சதவீதப் பங்கு % | | சதவீத வளர்ச்சி % | |
|---|---|---|---|---|
| | 2017 (இ) | 2018 | 2017 (இ) | 2018 |
| **அ. மூலவளங்கள்** | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 77.6 | 76.8 | 11.9 | 7.7 |
| பொருட்கள் மற்றும் பணிகளினது இறக்குமதிகள் | 22.4 | 23.2 | 13.4 | 12.4 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **12.2** | **8.8** |
| **ஆ. பயன்பாடு** | | | | |
| நுகர்வு | 60.8 | 60.5 | 10.3 | 8.3 |
| மொத்த நிலையான மூலதனவாக்கம் | 20.5 | 19.7 | 10.7 | 4.3 |
| பெறுமதியானவற்றின் விற்பனையைக் கழித்த கையேற்புக்கள் மற்றும் இருப்புக்களின் மாற்றம் | 1.8 | 2.3 | 140.0 | 34.5 |
| பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி | 16.8 | 17.5 | 14.6 | 13.2 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **12.2** | **8.8** |

(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.14
நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்பு (அ) (ஆ)

| விடயம் | ரூ.மில்லியன் | | வளர்ச்சி (%) | | மொ.உ.உ.இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 (இ) | 2018 | 2017 (இ) | 2018 | 2017 (இ) | 2018 |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 13,418,287 | 14,449,931 | 11.9 | 7.7 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 10,513,141 | 11,381,403 | 10.3 | 8.3 | 78.3 | 78.8 |
| தனியார் | 9,382,467 | 10,081,223 | 10.2 | 7.4 | 69.9 | 69.8 |
| அரசு | 1,130,674 | 1,300,180 | 11.4 | 15.0 | 8.4 | 9.0 |
| 3. முதலீடுகள் | 3,867,947 | 4,130,406 | 15.8 | 6.8 | 28.8 | 28.6 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 2,905,146 | 3,068,528 | 17.8 | 5.6 | 21.7 | 21.2 |
| தனியார் | 3,001,308 | 3,238,268 | 18.2 | 7.9 | 22.4 | 22.4 |
| அரசு | -96,162 | -169,740 | -34.1 | -76.5 | -0.7 | -1.2 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -962,801 | -1,061,878 | -10.1 | -10.3 | -7.2 | -7.3 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் (ஈ) | -352,856 | -391,934 | -10.4 | -11.1 | -2.6 | -2.7 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் | 964,316 | 999,504 | 2.6 | 3.6 | 7.2 | 6.9 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 3,516,606 | 3,676,098 | 13.9 | 4.5 | 26.2 | 25.4 |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளுடனான வேறுபாடுகளிற்கு தொகுத்தலில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்.

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## சேமிப்புக்கள்


**நடைமுறை விலைகளில், பொருளாதாரத்தின் உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2018இல் ரூ.3,068.5 பில்லியனாக விளங்கி, 2017இல் பதிவுசெய்யப்பட்ட 17.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.6 சதவீதத்தைக் கொண்ட மெதுவான வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** இதற்கு 2017இல் அவதானிக்கப்பட்ட 18.2 சதவீதம் கொண்ட விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 7.9 சதவீதம் கொண்ட தனியார் சேமிப்பிலான மெதுவான வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டமையே பகுதியளவிற்குக் காரணமாகும். இக்காலப்பகுதியில் அரச மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அரசிறையை விஞ்சியமையானது அரசின் குறைச் சேமிப்புக்களில் அதிகரிப்பை ஏற்படுத்தி உள்நாட்டுச் சேமிப்புக்களின் வளர்ச்சியில் தளர்வொன்றினை உருவாக்கியது. இதன்படி, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2017இன் 21.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் 21.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**நடைமுறை விலைகளில், தேசிய சேமிப்பு 2017இன் 13.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் ரூ.3,676.1 பில்லியனாக விளங்கி 4.5 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்தது.** இது, உள்நாட்டுச் சேமிப்புக்களில் காணப்பட்ட மெதுவான போக்கும் ரூபா நியதிகளில் உலகின் எஞ்சிய பகுதிகளிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான சுருக்கமும் முக்கிய காரணமாக அமைந்த போதும் கூட ரூபா நியதிகளில் உலகின் எஞ்சிய பகுதிகளிலிருந்தான தேறிய நடைமுறைமாற்றல்கள் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் பெருமளவு ஆதரவுடன் இவ்வாண்டுப் பகுதியில் வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. இதன்படி, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்பு 2017இன் 26.2 சதவீதத்திலிருந்து 2018இல் 25.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை மூலதனச் செலவினத்தில் ஏற்பட்ட ஒப்பீட்டு ரீதியில் உயர்வான வளர்ச்சியின் காரணமாக தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளி 2017இன் மொ.உ.உற்பத்தியின் 2.6 சதவீதத்திலிருந்து 2018இல் மொ.உ.உற்பத்தியின் 3.1 சதவீதத்திற்கு விரிவடைந்தது.

## 2.6 வருமானம்

**நடைமுறை விலைகளில் பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதிகூட்டலுக்கு சமமான வருமானக் கூறுகளின் கூட்டுத்தொகையானது 2017இல் பதிவுசெய்யப்பட்ட 10.7 சதவீத**

வரைபடம் 2.13
பொருளாதாரத்தின் வருவானக் கூறுகள்
(நடைமுறைச் சந்தை விலைகளில்)



அட்டவணை 2.15
நடைமுறைச் சந்தை விலைகளில் நிறுவனத்துறைகளின் வருமான கூறுகள் (அ) (ஆ)

| விடயம் | சதவீதப்பங்கு (%) | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017 (இ) | | | | | 2018 | | | | |
| | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | பொது அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்த பொருளா-தாரம் | நிதியல்லா கூட்டுத் தாபனம் | நிதிக் கூட்டுத் தாபனம் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்த பொருளா-தாரம் |
| **ஊழியர்களின் நட்டஈடு** | **34.2** | **6.4** | **26.5** | **32.9** | **100.0** | **31.8** | **9.3** | **28.6** | **30.3** | **100.0** |
| **மொத்த தொழிற்பாட்டு மிகை** | **35.1** | **4.9** | **2.1** | **58.0** | **100.0** | **35.7** | **3.2** | **2.0** | **59.0** | **100.0** |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 38.5 | 5.9 | 0.6 | 55.0 | 100.0 | 39.1 | 3.7 | 0.7 | 56.5 | 100.0 |
| கலப்பு வருமானம் | - | - | - | 100.0 | 100.0 | - | - | - | 100.0 | 100.0 |
| நிலையான மூலதனத்தின் நுகர்வு | 42.2 | 2.6 | 13.6 | 41.6 | 100.0 | 43.1 | 2.8 | 12.6 | 41.5 | 100.0 |
| **உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள்** | **91.0** | **8.7** | **-** | **0.3** | **100.0** | **91.1** | **8.6** | **-** | **0.3** | **100.0** |
| **அடிப்படை விலைகளில் பெறுமதி சேர்ப்பு** | **35.0** | **5.4** | **9.5** | **50.1** | **100.0** | **34.7** | **5.0** | **10.3** | **49.8** | **100.0** |

(அ) தரவானது மொ.உ. உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2010 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 8.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** நடைமுறைவிலைகளில் பொருளாதாரத்தின் உயர்ந்தளவிலான வருமானம் உருவாக்குகின்ற கூறான மொத்த தொழிற்பாட்டு மிகையானது 2017இன் 12.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 7.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 62.8 சதவீதத்திற்கும் வகைகூறியது. இதற்கு மொத்தத் தொழிற்பாட்டு மிகையின் பிரதான வருமானக் கூறான தேறிய தொழிற்பாட்டு மிகையானது 2017இல் 12.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் அடைந்த 8.3 சதவீத வளர்ச்சியிலான விரிவாக்கமே பிரதான காரணமாக அமைந்தது. மேலும், மொத்தத் தொழிற்பாட்டு மிகையின் ஏனைய இரண்டு துணைக் கூறுகளான நிலையான மூலதனத்தின் நுகர்வு மற்றும் கலப்பு வருமானம் என்பன 2017இன் முறையே 17.7 சதவீதம் மற்றும் 10.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் முறையே 7.5 சதவீதத்தினாலும் மற்றும் 4.5 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. இதேவேளையில், நடைமுறை விலைகளில் ஊழியர் இழப்பீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 28.6 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 7.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 11.1 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், ஏனைய வருமானக் கூறான நடைமுறை விலைகளிலான உற்பத்தியில் ஏனைய உதவுதொகைகளைக் கழித்த வரிகள் 2017இல் பதிவுசெய்யப்பட்ட 7.4 சதவீதமான வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2018இல் 0.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.3 சதவீதத்திற்கு வகைகூறியது.

**வருமானம் உருவாக்குதலின் நிறுவன ரீதியான வகைப்படுத்தலின்படி வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறையானது நடைமுறைவிலைகளில் பொருளாதாரத்தின் மொத்த பெறுமதி கூட்டலிற்கு உயர்ந்தளவிலான பங்கினை வழங்கியிருந்தது.** நடைமுறை விலைகளில் மொத்தத் தொழிற்பாட்டு மிகைக்கு துறை ரீதியான பங்களிப்புகளைக் கருத்திற்கொள்ளும்போது வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறையானது மொத்த பெறுமதி கூட்டலின் 59.0 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 2018இல் 9.7 சதவீதத்திலான வளர்ச்சியையும் பதிவுசெய்தது. இதனை நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் துறை தொடர்ந்திருந்ததுடன் மொத்தத் தொழிற்பாட்டு மிகையில் 35.7 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 2018இல் 9.9 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தது. நடைமுறை விலைகளில் ஊழியர்களின் இழப்பீட்டினைக் கருத்திற்கொள்ளும் போது ஊழியர்களின் இழப்பீட்டில் வீட்டலகுகள் மற்றும் வீட்டலகுகளுக்கு பணிபுரியும் இலாபமீட்டாத நிறுவனங்கள் துறையானது 30.3 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 2018இல் மெதுவடைந்த வேகமான 2.2 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தது. மேலும், 2018இல் நடைமுறை விலைகளில் ஊழியர்களின் இழப்பீட்டிலே நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் பொது அரசாங்கத் துறைகள் என்பன முறையே 31.8 சதவீதம் மற்றும் 28.6 சதவீதத்தினை வகைகூறியதுடன் 3.2 சதவீதம் மற்றும் 20.2 சதவீதமான வளர்ச்சி வீதங்களையும் முறையே பதிவுசெய்தன. மேலும், 2018இல் நடைமுறை விலைகளில் ஊழியர்களின் இழப்பீட்டில் 9.3 சதவீதமான பங்களிப்பினை நிதிக் கூட்டுத்தாபனம் பங்களித்திருந்ததுடன் 60.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியையும் பதிவுசெய்தது. 2018இல் உற்பத்தியில் ஏனைய உதவுதொகைகள் கழித்த மானியங்களுக்கான பிரதான பங்களிப்பாளராக நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் 91.1 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 0.7 சதவீதமான சிறிதளவான வளர்ச்சியையும் இக்கூறு பதிவுசெய்தது.